விலை : 20.00
பக்கங்கள் : இருபது

# வலம்புரி
# Valampurii

Registered as a Newspaper in Srilanka
website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com
சங்கு 14 வள்ளுவர் ஆண்டு 2044 மார்கழி 04 வியாழக்கிழமை (19.12.2013) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 365

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
உலகத்தர ISO 14 001, 9001
சான்றிதழ் பெற்றுள்ள
ஒரே சீமெந்து ராம்கோ

# மகிந்த - சர்மா இடையே கொடுக்கல் வாங்கல்!

## மங்கள எம்.பி. சபையில் தகவல்




(கொழும்பு)

அவுஸ்திரேலிய பிரதமர் டோனி அப்போட் மற்றும் பொது நலவாய நாடுகளின் செயலாளர் கமலேஷ் சர்மா ஆகியோருக்கும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கும் இடையில் இரகசியமான கொடுக்கல் வாங்கல்கள் இருப்பதாக ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீர குற்றம் சுமத்தியுள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்று உரையாற்றிய மங்கள சமரவீர முக்கியமான இரகசியமான இத் தகவலை வெளியிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், பொது நலவாய நாடுகளின் மாநாடு நடைபெற்ற போது இஸ்ரேலை சேர்ந்த முக்கிய பிரமுகர்களின் குழுவொன்று இலங்கை வந்துள்ளது. அந்த குழு ஏன் இலங்கைக்கு வந்தது? பிரித்தானியா 20-ம் பக்கம் பார்க்க

## காணிகளை சுவீகரிப்போம்



(கொழும்பு)

வட மாகாண சபையின் கட்டளைகளை இராணுவம் கேட்க வேண்டிய அவசியம் இல்லையென கிளிநொச்சி மாவட்ட இராணுவ கட்டளைத் தளபதி ஜெனரல் உதய பெரேரா கூறியுள்ளார்.

போருக்குப் பயன்படுத்தப்பட்ட இராணுவம் தற்போது அபிவிருத்தச் செயற்பாடுகளுக்கு பயன்படுதத்படுகின்றது என்றும் அவர் தெரிவித்தார்.

சிங்கள நாளேடு ஒன்றுக்கு வழங்கியுள்ள நேர்காணலில் கருத்து வெளியிட்டுள்ள ஜெனரல் உதய பெரேரா முப்படைகளின் நடவடிக்கைகள் சுதந்திரமானவை எனக் கூறியுள்ளார்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ முப படைகளுக்கும் தளபதியாக இருக்கும் நிலையில் வட மாகாண சபை இராணுவத்துக்கு 20-ம் பக்கம் பார்க்க

## தமிழீழத்திற்கு இடமில்லை; சீறுகிறது பொது பல சேனா

(கொழும்பு)

தனித் தமிழீழத்திற்கோ முஸ்லிம் தீவிரவாதத்திற்கோ இலங்கையில் இடமில்லை. பிரிவினை கோருவோர் நாட்டைவிட்டு வெளியேற வேண்டும்என பொது பல சேனா பௌத்த அமைப்பு எச்சரித்துள்ளது.

இதேவேளை, முஸ்லிம் தீவிர வாதக் கொள்கைகளை பௌத்த நாட்டில் பரப்பினால் அதற்கான பின்விளைவுகள் மிக மோசமாக அமையுமெனவும் அவ்வமைப்பு மேலும் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக பொது பல சேனா அமைப்பின் பொதுச் செயலாளர் கலபொட 20-ம் பக்கம் பார்க்க

## யாழ் போதனா வைத்தியசாலை
## தொண்டர்களின் போராட்டம் தொடர்கிறது
## நிலைமையை ஆராய உயர்மட்டக்குழு வருகிறது

(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா வைத்திய சாலையில் நிரந்தர நியமனம் கோரி பணிப்புறக்கணிப்புப் போராட்டம் நடத்திவரும் தொண்டர்களின் நிலைமைகள் குறித்து ஆராய சுகாதார அமைச்சிலிருந்து உயர்மட்ட அதிகாரிகள் குழுவொன்று இன்று யாழ்.போதனா வைத்தியசாலைக்கு வருகை தரவுள்ளது.



யாழ்ப்பாணப்போதனா வைத்திய சாலையில் தொண்டர்களாகக் கடமையாற்றும் சுமார் 250 பேர் தமக்கு நிரந்தர நியமனம் வழங்கக கோரி கடந்த ஆறு நாட்களாக தொடர் பணிப்புறக்கணிப்புப் போராட்டம் நடத்தி வருகின்றனர்.

இவர்களின் பணிப்புறக்கணிப்பால் யாழ்.போதனா வைத்திய சாலையின் இயங்குநிலையில் பெரும் இடைஞ்சல்கள் ஏற்பட்டுள்ளன.

இந்நிலையிலேயே கொழும்பு சுகாதார அமைச்சின் உயர்மட்ட அதிகாரிகள் குழுவொன்று இன்று யாழ்.போதனா வைத்தியசாலைக்கு வருகை 20-ம் பக்கம் பார்க்க

## வடக்கு ஆளுநரை நீக்கக் கூடாது!
### தேசிய சுதந்திர முன்னணி விடாப்பிடி

(கொழும்பு)

ஈழவாதிகளுக்காகவோ ஈழத்திற்கான தூண்டுகோலாக இருக்கும்சக்திகளின்தேவைகளுக்காகவோ வடக்கு மாகாண ஆளுநரை நீக்கக் கூடாது என தேசிய சுதந்திர முன்னணி தெரிவித்துள்ளது.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் பேசிய அந்த கட்சியின் மத்திய குழு உறுப்பினரும் பிரதியமைச்சருமான வீரகுமார திஸார நாயக்க மேலும் தெரிவிக்கையில்,

ஓய்வுபெற்ற இராணுவ அதிகாரியான வடக்கு மாகாணத்தின் ஆளுநரை நீக்க வேண்டும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தொடர்ந்தும் தெரிவித்து வருகிறது.

அதேபோல் ஜே.விபியும் அதே கதையை கூற தலைப்பட்டுள்ளது. அரச நிர்வாக சேவையின் பதவிகளுக்கு இராணுவ அதிகாரிகள் வேண்டாம் சிவில் அதிகாரிகளே நியமிக்கபட 20-ம் பக்கம் பார்க்க

## ஒல்லாந்தர் காலத்து பீரங்கி கண்டுபிடிப்பு

(கொழும்பு)

ஒல்லாந்தர் காலத்துக்கு உரித்தானதென நம்பப்படும் உலோக மற்றும் செப்பு பீரங்கியொன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு துறைமுக கடற்பரப்பிலிருந்து இது கண்டுபிடிக்கப்பட்டதாக சுங்க அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

இரண்டு தொன் நிறையுடைய இந்த பீரங்கி, 7 அடி உயரம் கொணடதென தெரிவித்த சுங்க அதிகாரிகள், பல்வகைமை, கலாசாரம் மற்றும் தேசிய சொத்துக்கள் பாதுகாப்பு ஒன்றியத்தினால் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டு வருவதாகவும் ஆய்வின் பின்னர் அது சுங்க திணைக்களத்தினால் பொறுப்பேற்கப்படும் என்றும் குறிப்பிட்டனர். (செ-11)

## தமிழ் தேசிய கூட்டமைப்பை தடைசெய்யக் கோரிக்கை!

(கொழும்பு)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைத் தடை செய்யுமாறு தொழில் மற்றும் தொழில் உறவுகள் பிரதி அமைச்சர் சரத் வீரசேகர பாராளுமன்றத்தில் நேற்றுக் கோரினார்.

விடுதலைப் புலிகள் தோற்கடிக்கப்பட்டதன் பின்னர், அவர்களின் கொள்கையைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பரப்புவதாக அவர் குற்றம் சாட்டினார்.

2014-ம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டத்தின் 3-வது வாசிப்பின் மீதான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே இவ்வாறு குறிப்பிட்டார்.

அரசாங்கம் யுத்தத்தினை முடிவுக்கு கொண்டு வந்த பின்னர் புலிகளின் பினாமிக் கட்சிகளை தடை செய்திருக்க வேண்டும். அவ்வாறு தடை செய்யாது விட்டது தவறு என்று தற்போது தான் புரிகிறது.

பிரிவினை வாதம் 20-ம் பக்கம் பார்க்க

## இராவணன் பௌத்தமா? இந்துவா? யோகேஸ்வரன்-மேர்வின் வாய்த்தர்க்கம்!



(கொழும்பு)

இராவணன் இந்துவா? பௌத்தமா? இலங்கை இந்து நாடா? பௌதத நாடா? என்பது தொடர்பில் அமைச்சர் மேர்வின் சில்வாவுக்கும் தமழ்த்தேசிய கூட்டமைப்பு எம்.பி. சீனித்தம்பி யோகேஸ்வரனுக்கும் இடையே சபையில் வாய்த் தர்க்கம ஏற்பட்டது.

சிரேஷ்ட அமைச்சுக்களுக்கான நிதி ஒதுக்கீட்டு குழு நிலை விவாதத்தின் போது யோகேஸ்வரன் எம்.பி., இலங்கை ஒரு இந்து நாடு, புத்தர் ஒரு இந்து என பல வரலாறுகளை மேற் 20-ம் பக்கம் பார்க்க

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

**நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்**

## தேவை

கட்டட நிர்மாணத்துறையில் வெற்றிடம் கொழும்பு அண்மித்த பிரதேசங்கள்/ யாழ்/ திருகோணமலை/ கண்டி/ கம்பஹா போன்ற பிரதேசங்களில் மேசன்/ தச்சு/ செடலின் பாஸ்/ கம்பி பாஸ்/ டயில் பாஸ்/ (1200/- 1500/-) கையுதவியாளர் (800/- 1200/-) மாதாந்தம் சம்பளம் வருகை தரும் அன்றே தொழில் வாய்ப்பு. (சி-5820)

**தொடர்பு:- 0775561883**

# இரு சரக்குக் கப்பல்கள் சீனாவிடமிருந்து கொள்வனவு

## இலங்கை அரசு தீர்மானம்


சீன நிறுவனமொன்றிடமிருந்து இரண்டு சரக்குக் கப்பல்களை கொள்வனவு செய்வதற்கு இலங்கை அரசாங்கம் தீர்மானித்துள்ளது. 7 கோடி அமெரிக்க டொலர்கள் (924 கோடி ரூபா) செலவில் இவ்விரு கப்பல்களையும் கொள்வனவு செய்வதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இலங்கை கப்பல் நிறுவனத்தை மீளக் கட்டியெழுப்பி மாலுமிகளுக்கான பயிற்சிகளை வழங்குவதற்கு மேற்படி கொள்வனவு செய்யப்படவுள்ள இரு கப்பல்களும் பயன்படுத்தப்படவுள்ளன.

இவ்விரு கப்பல்களும் இரண்டு வருடங்களுக்குள் இலங்கைக்கு கிடைக்க வாய்ப்புள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இலங்கை கப்பல் கூட்டுத்தாபனத்தின் தலைவராக கடற்படைத் தளபதி ரியர் அட்மிரல் ஜயநாத் கொலம்பகே, கடந்த ஒக்டோபர் மாதம் அரசாங்கத்தால் நியமிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (செ-11)

## விண்ணக வாழ்வின் 6ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அன்னை மடியில் 1971.09.05

இறைவன் அடியில் 2008.01.10

அமரர் செல்வி தவனேஸ்வரி தர்மலிங்கம்

(ஆசிரியை, யாழ்/புங்குடுதீவு கணேசா மகா வித்தியாலயம்)

திதி : துதியை 19.12.2013

ஆண்டுகள் ஆறு ஆனாலும்<br>
ஆறாது எம் துயரம் – நீ<br>
அறிவாயோ அம்மா ! அனுதினம்<br>
தேடி உன்னை துடிக்கிறோம் – மகளே<br>
நீ மீண்டும் வருவாயென என்னாளும் – எண்ணி...<br>
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

இல : 32, சிவப்பிரகாசம் வீதி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.

– குடும்பத்தினர் (4870)

# கடலாமையைத் தேட சர்வதேச பொலிஸார்

(கொழும்பு)

கொஸ்கொட பிரதேசத்திலிருந்து காணாமல்போன வெள்ளை நிற கடலாமையை தேடுவதற்கு சர்வதேச பொலிஸாரின் உதவி பெற்றுக் கொள்ளப்படவுள்ளது.

நேற்று அமைச்சில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில், வனஜீவராசிகள் அமைச்சர் விஜித்த விஜயமுனி சொய்சா கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்த வெள்ளை நிற கடலாமை மாலைத் தீவுக்கு கொண்டு செல்லப்பட்டிருக்கலாம் என்று சந்தேகப்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.

இரு தினங்களுக்கு முன்னர் கொஸ்கொட பிரதேசத்தில் அமைந்துள்ள கடலாமை பாதுகாப்பு மத்திய நிலையத்தில் வைக்கப்பட்டிருந்த மிகவும் அரிதான வெள்ளை நிற கடலாமை திருடப்பட்டுள்ளதாக பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டது.

ரோஸி என்ற பெயருடைய குறித்த வெள்ளைக் கடலாமை 9.5 கிலோ கிராம் நிறை எனத் தெரிவிக்கப்படுகிறது. (செ-11)

## அறிவித்தல்

### பருத்தித்துறை நகராட்சிமன்றம்

### மரக்கறிச் சந்தை, ஆட்டிறைச்சிக் கடை, மலசலகூடம் ஆகியவற்றை குத்தகைக்கு வழங்குவதற்கான பகிரங்க ஏலம் கோருதல்

பருத்தித்துறை, நகராட்சி மன்றத்துக்குச் சொந்தமான மரக்கறிச் சந்தை, ஆட்டிறைச்சிக் கடை, மலசலகூடம் ஆகியவற்றை 01.01.2014 தொடக்கம் 31.12.2014 வரையான காலப்பகுதிக்கு குத்தகைக்கு வழங்குவதற்கான ஏலம் கோரும் நிகழ்வு 24.12.2013-ம் திகதி பி.ப. 14.00 மணிக்கு இவ் வலுவலகத்தில் நடைபெறும்.

அதில் கலந்துகொள்ள விரும்புவோர் அன்றைய தினம் மு.ப.11.00 மணிக்கு முன்னர் ஒவ்வொரு குத்தகைக்கும் ரூ.500.00 மீளளிப்பு செய்யக் கூடிய வைப்புப் பணமாக செலுத்தி ஆளடையாளத்தை உறுதிப்படுத்தி ஏலத்தில் பங்கு கொள்ளலாம்.

மேலதிக தகவல்களை நகராட்சி மன்ற அலுவலகத்தில் கடமைநேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

நகராட்சி மன்ற அலுவலகம்,<br>
பருத்தித்துறை.<br>
18.12.2013

சபா. ரவீந்திரன் (JPUM)<br>
நகரபிதா<br>
நகராட்சிமன்றம்,<br>
பருத்தித்துறை

(சி-5827)

## பிள்ளையார் இன்

தினமும் உருளைக்கிழங்கு கறியுடன்

- பூரி. சப்பாத்தி. தோசை 80/- மட்டுமே
- மசாலா தோசை 120/- மட்டுமே

**தொடர்புகளுக்கு:**

**இல.31, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.**

**தொ.பே: 021 222 2829** (சி-5822)

## சுஜீவா வைத்தியசாலை

(சுஜீவா தாய்மைப் பேற்று சிறப்பு சித்த ஆயுள்வேத வைத்தியசாலை)

### விடுமுறை அறிவித்தல்

தவிர்க்க முடியாத காரணத்தால் இன்று வியாழக்கிழமை 19.12.2013 வைத்தியசாலை திறக்கப்படமாட்டாது. மீண்டும் சனிக்கிழமை முதல் வழமைபோல் இயங்கும்.

வழமையான சேவை நேரம்: காலை 7.00-11.00, மாலை 3.00-5.00

வெள்ளிக்கிழமை விடுமுறை

Dr. ஜெ.ஜெயலன்<br>
Dr. ச.ஜெயலன்<br>
T.P.: 0775594147

(4892)

## உடனடியான தொழில் வாய்ப்பு

வருமான பிரச்சினையா ??? தொழில் தேடுகிறீர்களா ??? கவலையை விடுங்கள் ...... 18–55 ஆண், பெண்

எம்மிடம் கொழும்பை அண்மித்த பகுதிகளின் பிரபல்யமான தொழிற்சாலைகளான டொபி/ ஜாம்/ கோடியல்/ பிஸ்கட்/ PVC/ பிளாஸ்டிக்பை/ கோழி இறைச்சி போன்ற தொழிற்சாலைகளில், உணவு, தங்குமிட வசதியுடன் மாதாந்தம் 18,000/-, 25,000 /- , 38,000 /- சம்பளங்களுடன் உற்பத்தி / லேபல் / பொதியிடல் / களஞ்சியப்படுத்தல் பிரிவுகளில் நிரந்தர உடனடி வேலைவாய்ப்பு.

**0777 117 661, 0775561883**

(C-5819)

# யாழ். ஆயரின் குருத்துவ பொன்விழா



எமது யாழ்.மறைமாவட்ட ஆயர் அதிவணக்கத்திற்குரிய மேதகு இ.தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை தமது குருத்துவ அபிஷேகத்தின் 50 ஆவது ஆண்டினை எதிர்வரும் **21.12.2013 (சனிக்கிழமை)** நினைவு கூருகிறார்.

எமது மறைமாவட்ட ஆயரின் இவ் மகிழ்வான நாளில் ஆயர் தலைமையில் ஒப்புக் கொடுக்கப்படும் நன்றித் திருப்பலியில் கலந்து சிறப்பிக்க இறைமக்கள் அனைவரையும் அன்புடன் அழைத்து நிற்கின்றோம்.

**இடம் : யாழ்.மரியன்னை பேராலயம்**

**நேரம் : 9.30 a.m**

**காலம்: 21.12.2013 ( சனிக்கிழமை)**

– குரு முதல்வர், ஆயர் இல்லம், யாழ்ப்பாணம்.

(சி-5825)

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை.

# வெளிவாரிப் பட்டப்பதிவுகள் மற்றும் பரீட்சைகள் அலகு

### வெளிவாரிப் பரீட்சைகள் - 2011

**1. பொது மற்றும் சிறப்புக் கலைமாணி பகுதி - I - 2011**

**2. பொது மற்றும் சிறப்புக் கலைமாணி பகுதி - II - 2011**

மேற்படி கலைமாணி பரீட்சைப் பெறுபேறுகள் வெளியாகியுள்ளன. இப்பரீட்சையில் சித்தியடையத் தவறிய பரீட்சார்த்திகளிடமிருந்து மீள்பரீட்சைக்கான விண்ணப்பங்கள் 15.01.2014 (புதன்கிழமை) வரை ஏற்றுக் கொள்ளப்படும். ஒவ்வொரு பாட அலகிற்கும் மீள்பரீட்சார்த்திகள் செலுத்த வேண்டிய பரீட்சைக் கட்டணம் ரூபா.200/= ஆகும். யாழ்.பல்கலைக்கழகத்தில் இயங்கும் மக்கள் வங்கிக் கிளையில் ரூபா.100/= இனைச் செலுத்தியமைக்கான பற்றுச்சீட்டினை வெளிவாரிப் பட்டப் பதிவுகள் பரீட்சைகள் அலகில் சமர்ப்பித்து விண்ணப்பப்படிவத்தினைப் பெற்றுக் கொள்ளலாம்.

தபால் மூலம் விண்ணப்பப்படிவத்தினைப் பெற விரும்புவோர், நிதியாளர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் என்ற பெயருக்கு எழுதப்பட்ட ரூபா.100/= க்கான காசுக் கட்டளை / தபாற்கட்டளையை, சுயமுகவரியிடப்பட்ட ரூபா.40/= பெறுமதியுடைய முத்திரை ஒட்டப்பட்ட 28 X 20 செ.மீ அளவுடைய தபால் உறையுடன், உதவிப் பதிவாளர், வெளிவாரிப் பட்டப் பதிவுகள் பரீட்சைகள் அலகு, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், திருநெல்வேலி என்ற முகவரிக்கு அனுப்பிப் பெற்றுக் கொள்ளலாம்.

பரீட்சைகள் நடைபெறும் திகதி மற்றும் விபரங்கள் பின்னர் பத்திரிகைகளில் விளம்பரப் படுத்தப்படும்.

குறிப்பு: கலைமாணிக் கற்கைநெறி தொடர்பாக, கல்வியாண்டு 2011/2012 இருந்து அரையாண்டு பருவ அடிப்படையிலான கற்கைக்கால அளவுப் பெறுமதியிடப்பட்ட கற்கை அலகு முறைமை **(Semester based course unit system and Grade Point Average evaluation)** அறிமுகப்படுத்தப்படவிருப்பதால், ஏற்கெனவே கலைமாணிக் கற்கைநெறிக்கு பழைய பாடத்திட்டத்தின் கீழ் பதிவுகளை மேற்கொண்டவர்கள், மேற்படிப் பரீட்சைகளுக்கு விண்ணப்பித்து, விரைவில் தங்கள் கற்கைநெறிகளை பூர்த்தி செய்யுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

மேலதிக விபரங்களைப் பெறவிரும்புவோர் 021-2223612 என்ற தொலைபேசி எண்ணுடன் தொடர்பு கொள்ளலாம்.

பதிவாளர்<br>
1?.12.2013

(சி-5824)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மதுசாரம்,சிகரெட் பாவனையை ஒழிக்க விரைவில் நடவடிக்கை எடுங்கள்

## வடக்கு முதல்வரிடம் மகஜர் கையளிப்பு

(யாழ்ப்பாணம்)

தமிழர் பிரதேசங்களில் நடைபெறும் சீரழிவுகள் தொடர்பில் கண்டு கொள்ளாதிருந்தால் தமிழ் மக்கள் மீள முடியாத துயரத்தை அனுபவிக்க நேரிடும் என வடக்கு முதலமைச்சர் சீ.வி.விக்னேஸ்வரனிடம் ஹெல்தி லங்கா மதுசாரத்திற்கு எதிரான தமிழ் இளைஞர் அணி மகஜர் ஒன்றை கையளித்துள்ளது.

மதுசாரத்திற்கு எதிரான தமிழ் இளைஞர் அணியின் மாநாடு நாவலர் மண்டபத்தில் நேற்று நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட முதலமைச்சரிடமே மகஜர் கையளிக்கப்பட்டுள்ளது.

அம் மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

உலகம் அபிவிருத்தி பற்றி பரவலாகப் பேசிக் கொண்டிருக்கின்றது. அபிவிருத்தியில் மனித வாழ்க்கைத் தரத்தில் ஏற்படும் விருத்தியே நிலைபேறானதாகும். எமது சமூகமும் வாழ்வியல் விருத்திக்காக அயராது உழைத்துக் கொண்டிருக்கின்றது. ஆனாலும் இதற்குத் தடையாக சில காரணிகளும் இருக்கின்றன. பொருட்களின் பாவனையால் ஏற்படும் சமூகப் பொருளாதாரப் பாதிப்புக்கள் அதிகம்.

சமூகவியல் நிபுணத்துவர்கள் கூறுகின்றார்கள், ஒரு சமூகத்தில் யுத்தம் நடைபெற்று மீண்ட நிலையானது "உழுது பண்படுத்திய நிலம்" போல என்று விபரிக்கின்றனர்.

அப்படியானால் அச்சமூகத்தில் எதை விதைத்தாலும் விளைவைத் தரும். ஆகவே, நாம் எப்படியான விளைச்சலைப் பெற எவற்றை நாம் விதைக்க வேண்டுமென்று சிந்திக்க வேண்டும். ஆனாலும் இந்த விடயத்தை நாங்கள் அறிய முன்னர் மதுசாரம், சிகரெட் கம்பனிகள் நன்கறிந்து அவை நடவடிக்கைகளையும் தொடங்கிவிட்டனர். இதற்குப் பல உதாரணங்கள் சான்று பகிரும்.

வடக்கு, கிழக்கு திறப்பின் பின்னர் முதன் முதலாக வடக்கை நோக்கி வந்த பாரவூர்த்தி சாராயம் பியர் கம்பனியுடையது. அது ஏன்? இலங்கைப் புகையிலை கம்பனித் தலைமைக் காரியாலய (கொழும்பு) வளாகத்தில் "வடக்கை வெற்றி கொள்வோம்" என்ற பதாகை காட்சிப் படுத்தப்பட்டுள்ளது ஏன்?

கிளிநொச்சி பொலிஸ் நிலையம் இலங்கைப் புகையிலைக் கம்பனியால் கட்டியமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளது ஏன்? மேலும் சிகரெட் விற்பனை செய்யும் வியாபாரிகளுக்கு (எமது பிரதேச கடை உரிமையாளர்களுக்கு) ஐந்து நட்சத்திர விடுதிகளில் விருந்தும் பரிசுகளும் வழங்குவது ஏன்?

உள்ளூர் சுற்றுலாப் பயணிகள் எமது பிரதேசங்களின் பொது இடங்களில் சாராயம் பியர் பாவனை செய்வதற்கு இடமளிப்பது ஏன்? யாழ்.மாவட்ட பிரபல பாடசாலைகளுக்கிடையிலான கிரிக்கெட் போட்டிகளின் போது பியர் விற்பனை செய்தது ஏன்? எமது இளைஞர்களைப் போல காட்டிக் கொண்டு ரின் பியர் குடிப்பவர்களை எம்மால் காணமுடிகின்றது. இதன் பின்னணி என்ன? இவ்வாறான கேள்விகளுக்கு விடைகாணும் போது எமக்குத் தெளிவாகப் புலப்படுவது "உழுது பண்படுத்திய நிலத்தில்" மதுசாரம் சிகரெட் கம்பனிகள் நன்றாக விதைத்துக் கொண்டிருக்கின்றன.

தமிழர் கலாசார விழுமியங்களில் மதுசாரப் பாவனை இருக்கவில்லை என்பதை வரலாற்றுச் சான்றுகள் எடுத்துக்காட்டுகின்றன. ஆகவே, இதனை கண்ணிருந்தும் காணாதவர்களாகவும் காதிருந்தும் கேட்காதவர்களாகவும் இருந்தால் தமிழ் மக்கள் மீளமுடியாத துயரத்தை அனுபவிக்க நேரிடும்.

வட மாகாணத்தில் வாழும் தமிழ் மக்களுடைய வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்காக கொள்கை ரீதியான தீர்மானத்தை எடுக்க வேண்டும்.

இவற்றை தடுப்பதன் மூலம் இப்பாவனையால் இலங்கையில் வருடாந்தம் இறக்கும் 40 ஆயிரம் பேரில் எமது பிரதேச மக்களை மீட்டெடுப்பதற்கான கொள்கைகளை வகுக்க வேண்டும்.

மதுசாரம்,சிகரெட் பாவனைக்காக கிராமத்திலிருந்து வருடாந்தம் பறித்துச் செல்லப்படும் சுமார் ஒரு கோடி ரூபாய்களை கிராமத்தின் விருத்திக்காகப் பயன்படுத்தவும் மதுசாரத்தால் ஏற்படும் அநீதிகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கவும் வேண்டும்.

நாட்டின் எதிர்காலத்தைப் பொறுப்பேற்கவுள்ள எதிர்கால சந்ததியினருக்கு மதுசாரம், சிகரெட் பாவனை பற்றிய மூடநம்பிக்கைகளும் பிழையான பாடங்களும் கற்பிக்கப்படுவதை தடுப்பதற்கு நீங்கள் எடுக்கும் கொள்கை ரீதியான தீர்மானங்களுக்கு வடக்கில் வாழும் தமிழ்ச் சமூகம் மாத்திரமல்லாமல் ஒட்டுமொத்த இலங்கையர்களும் உங்களுடன் கைகோர்ப்பர் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-4)

## இலங்கைக்கு பயிற்சி வழங்குவது தொடர்பில் விவாதிக்க முடியாது

### இந்திய பாதுகாப்பு அமைச்சு அறிவிப்பு

(கொழும்பு)

இலங்கைப் படையினருக்கு பயிற்சி அளிப்பது தொடர்பில் பாராளுமன்றில் விவாதம் நடத்த வேண்டிய அவசியமில்லை என இந்திய பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

இலங்கைப் படையினருக்கு பயிற்சி அளிப்பது தொடர்பில் பாராளுமன்ற விவாதம் நடத்தப்பட வேண்டுமென தமிழக அரசியல் கட்சிகள் கோரிக்கை விடுத்துள்ளன.

எனினும், இந்த வகையிலான விவாதங்களுக்கு அரசாங்கம் இடமளிக்கக் கூடாது என பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது. பயிற்சி அளிப்பது தொடர்பான விவகாரம் அயல் நாடுகள் உடனான உறவுகளை அடிப்படையாகக்கொண்டது என பாதுகாப்பு அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது.

அயல் நாடுகளுடனான உறவுகள் தொடர்பில் கொள்கை அடிப்படையிலான தீர்மானங்கள் எடுப்பது உசிதமானதாக அமையும்.

நட்பு ரீதியான வெளிநாடுகளுடன் புரிந்துணர்வு அடிப்படையில் பாதுகாப்பு குறித்த உறவுகள் பேணப்பட்டு வருவகின்றன.

இலங்கை அரசாங்கத்தின் வேண்டுகோளுக்கு இணங்க பயிற்சிகள் அளிக்கப்பட்டு வருவதாகக் குறிப்பிட்டுள்ளது. இந்திய படைவீரர்களும் வேறு நாடுகளில் பயிற்சி பெற்றுக் கொள்வதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-2)

## வடக்குக் கிழக்கில் தமிழில் தேசியகீதம் பாடவேண்டும்



(கொழும்பு)

தேசிய கீதத்தை சிங்கள மொழியில் மட்டும் பாடுவதில் அர்த்தமில்லை என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் அரியநேத்திரன் தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் தமிழ் மொழியில் தேசிய கீதத்தை பாட முடியாவிட்டால், தேசிய கீதத்தை பாடுவதில் அர்த்தமில்லை.

வட மாகாணத்தில் சிங்கள மொழியில் தேசிய கீதத்தை இசைக்க வேண்டிய அவசியம் கிடையாது. இதேவேளை மட்டக்களப்பு மாவட்டத்தில் தேசிய ஒற்றுமை தொடர்பில் முரண்பாட்டு நிலைமை ஏற்பட்டுள்ளது.

முஸ்லிம் அரசியல்வாதிகள் பொறுப்புணர்ச்சியுடன் செயற்பட வேண்டும் எனவும் இல்லாவிட்டால் முஸ்லிம், தமிழ் முரண்பாடுகள் ஏற்பட வாய்ப்பு இருப்பதாகவும் அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

பிரதேசத்தைச் சேர்ந்த பௌத்த பிக்கு ஒருவர் சிங்கள குடியேற்றங்களை நிறுவி வருகின்றார் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (அ-2)






மதுசாரத்திற்கெதிரான இளைஞர் அணியின் மாநாடு நேற்று யாழ். நாவலர் மண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் விருந்தினர்கள் அமர்ந்திருப்பதையும் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட வடக்கு மாகாணசபை முதலமைச்சர் சீ.வி.விக்னேஸ்வரன் உரை யாற்றுவதையும் நிகழ்வில் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம். (படங்கள்:- உ.சாளின், மானிப்பாய் செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# கலைவாணி மில் வீதி புனரமைக்கப்படுகிறது

(யாழ்ப்பாணம்)

பொருளாதார அமைச்சின் நெல்சிப் திட்டத்தினூடாக கொக்குவில் கிழக்கு கலைவாணி மில் வீதி புனரமைப்பு பணிகள் நடைபெற்று வருகின்றது.



இவ் வேலைத்திட்டத்திற்கான நிதியை அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தாவினால் ஒதுக்கப்பட்டு நல்லூர் பிரதேச சபையின் எதிர்க்கட்சித் தலைவர் அம்பலம் இரவீந்திரதாசனின் மேற்பார்வையின் கீழ் நடைபெறுகின்றன. (அ-9)



நன்றி:- மிரர்

# இளையோர்களை சீர்குலைக்க திட்டமிட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன

## வடக்கு மாகாண முதலமைச்சர் தெரிவிப்பு

தமிழ் மாணவர்களை ஒழுக்கமற்றவர்களாக மாற்றும் செயற்றிட்டம் எமக்கு வேண்டப்படாதவர்களினால் வடக்கில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என வடக்கு மாகாண முதலமைச்சர் சீ.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

மதுசாரத்துக்கெதிரான இளைஞர் அணியின் மாநாடு யாழ். நாவலர் மண்டபத்தில் நடைபெற்றது.

இந் நிகழ்வின் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

வடக்கில் குற்றச் செயல்கள் அதிகரித்து வருகின்ற போதிலும் குற்றவாளிகள் இனங் காணப்படுவதில்லை எனவும் அவர் சாடியுள்ளார்.

இங்கு முதலமைச்சர் மேலும் உரையாற்றுகையில்,

இளைஞர்கள், யுவதிகள்தான் எமது வருங்காலத் தலைமைகள். அவர்களை நம்பித்தான் எமது கலைகள், கலாசாரங்கள், மதங்கள், பண்பாடு, பாரம்பரிய வாழ்க்கை முறை, பொருளாதாரம், அரசியல் யாவும் இருக்கப் போகின்றன.

அவர்கள் தமது கடமைகளையும் கட்டுப்பாடுகளையும் கையேற்க முன்வராவிடில் நாம் இன்று அவர்கள் சார்பில் எடுக்கும் சகல நடவடிக்கைகளும் விழலுக்கிறைத்த நீர் ஆகிவிடுவன.

இந்த ஒரு சூழலில்தான் இளைஞர்களே சேர்ந்து அணி அமைத்து மதுசாரம், சிகரெட், போதைப்பொருட்பாவனை போன்றவற்றை இளைஞர் சமுதாயத்திடம் இருந்து தவிர்க்க, தடுக்க நடவடிக்கைகள் எடுத்து வருவதாக அறிகிறேன். வரவேற்கப்பட வேண்டிய ஒரு கைங்கரியம்.

யுத்தத்தின் பின்னர் ஒருவித கரவான மறைமுகமான காரியம் நடைபெற்று வருவதாக நான் உணர்கிறேன். அதாவது வட மாகாண இளைஞர், யுவதிகளின் தனித்துவத்தை சுதந்திர எண்ணங்களை, தளை நீக்க விளையும் உணர்வுகளை மழுங்கச் செய்யும் வண்ணமாக நடவடிக்கைகள் முடுக்கப்பட்டுள்ளதாக உணர்கின்றேன்.

மதுசாரம், சிகரெட் கம்பனிகள் ஒரு பக்கம் வெளிப்படையாகத் தமது விற்பனைகளை ஏற்றுவதற்காக நடவடிக்கைகள் எடுத்து வருகின்றனர். அதைவிட கண்ணுக்குத் தெரியாத சக்திகள் போதைப்பொருள் பாவனையை மாணவ சமுதாயத்தினரிடையே கரவாகப் பரவவிட்டு வருகின்றனர்.

யார் ஊடாக இவை நடைபெறுகின்றன என்பதில் பலத்த சந்தேகம் எமக்கு இருந்தாலும் வெளிப்படையாக அது பற்றிக் கூற முடியாமல் இருக்கின்றது. ஆனால் நாட்டின் மிக உச்ச மட்டத்தில் அரசியல் பதவி பறிபோகும் அளவுக்குப் போதைப் பொருள் விநியோகமானது காரணமாக அமைந்துள்ளதென்றால் எங்கெல்லாம் இருந்து எமக்குப் பாதிப்புக்கள் வரக்கூடும் என்பதை நாங்கள் ஊகித்துணர வேண்டும்.

சில தடவைகளில் குற்றங்களைப் புரிபவர்களே அதே குற்றங்களைத் தடுக்கும் விழாக்களில் முன்னின்று நடத்துவார்கள். குற்றங்களைப் புரிந்து கொண்டே குற்றத் தடுப்புக்களில் ஈடுபடுவதாக வெளி உலகத்துக்கு காட்டுவார்கள். சாதுர்யமான அவர்கள் நடவடிக்கைகளை அம்பலப்படுத்துவது அவ்வளவு எளிதல்ல.

எது எவ்வாறாயினும் எமது மாணவ சமுதாயத்தை நாம்தான் பாதுகாக்க வேண்டும். அவ்வாறான பாதுகாப்பு நடவடிக்கையில் எமது இளைஞர், யுவதிகள் ஈடுபாடு காட்டுவது மகிழ்ச்சி தருகின்றது.

வயது வந்தவர்கள் சிலர் கள்ளை ஒரு உணவாகக் கருதி உட்கொண்டு வருகின்றார்கள். திடகாத்திரமாகவும் இருக்கின்றார்கள். அவர்களுக்கு எதிரானதல்ல இந்த மாநாடு. அவர்கள் தொடர்ந்து புதிதாக இறக்கிய கள்ளுப் பாவனையில் இறங்க நாங்கள் தடைகள் விதிக்கலாகாது.

வள்ளுவர் இப்பேர்ப்பட்டவர்கள் இருப்பர் என்பதை எடுத்துக்காட்ட அழகான குறள் ஒன்றை ஆக்கிக் கொடுத்தார். அதாவது

"உண்ணற்க கள்ளை உண்ணிய உண்க
சான்றோரால் எண்ணப்பட வேண்டாதவர்"

என்றார். அதாவது கள்ளினை உண்ணது ஒழிக. ஆனால் அப்படி உண்ண வேண்டியிருந்தால் நல்லவர்கள், சான்றோர்கள் உங்களை மதிக்காது விடுவார்கள் என்பதைத் தெரிந்து கொண்டு உண்பீர்களாக என்கிறார்.

ஆகவே முற்றாகக் கள்ளுண்ணாமையை வலியுறுத்தாமல் எங்கள் 87 வயது மனிதரையும் மனதிற் கொண்டே வள்ளுவர் குறள் அமைத்துச் சென்றுள்ளார்.

எமது இளைஞர்கள் உடல் ரீதியாக முழு வளர்ச்சி அடைய முன்பே இந்த மதுசாரப் பாவனையால் தமக்குத் தாமே பல கெடுதல்களை வரவழைத்துக் கொள்கின்றார்கள். இரு உதடுகளும் நாக்கு உட்பட சகல பிஞ்சு உறுப்புக்களும் இளமையிலேயே மரத்துப் போகின்றன. இதை உணராமல் குடிப்பவர்கள் தமது ஒப்பான வயதில் இருக்கும் ஏனைய மாணவர்களையும் தமது பழக்கத்துக்கு கட்டாயமாக மாற்ற முயற்சிக்கின்றார்கள்.

குடியாதவன் ஆண்மகன் இல்லை என்ற ஒரு தவறான எண்ணத்தை சக மாணவர்களிடம் பரப்பி அவர்களையும் குடிக்க வைக்கின்றார்கள். மதுசாரம் உடலுக்குள் சென்ற பின்னர் அதனை அகற்றுவதற்காக ஈரல், இதயம், சுவாசத் தொகுதி, குருதிச் சுற்றோட்டத் தொகுதி போன்ற அவயவங்களை மிகவும் கடுமையாக, வழக்கத்துக்கு மாறாக இயங்க வேண்டும். இளைஞர்கள் இதன் காரணத்தினால் நாளடைவில் சீரான உடல் நலத்தை இழந்து விடுகின்றார்கள். அவர்கள் உடல்கள் ஒய்வு இழந்து விரைவில் களைப்படைகின்றன.

சற்று வயது சென்றதும் அந்த இளைஞர்கள் வாழ்வில் வேறு பல தாக்கங்கள் ஏற்படுகின்றன. மதுசாரப் பாவனை உடலுறவு நாட்டத்தைக் குறைப்பதோடு பாலியல் பலவீனத்தையும் ஏற்படுத்துகின்றது.

எமது யாழ்ப்பாண கல்விக் கலாசாரம் எந்தளவுக்கு யாழ்ப்பாணத்துக்கு வெளியில் கூட எம் மக்களால் கொண்டு செல்லப்பட்டது என்பது எல்லோருக்கும் தெரியும்.

மது அருந்தினால் தடை விலக்குகள் (Inhibition) போய்விடும் என்பார்கள்.

தாய், தந்தையர், உற்றார், உறவினர், முதுமை அடைந்தோர் யாவரையும் எந்தவித மரியாதையில்லாமல் அழைக்கத் தோன்றும். எம்மை மரியாதையான வாழ்க்கை முறைக்கு அழைத்துச் செல்லும் கற்றறிந்த அல்லது கண்டறிந்த சில கட்டுப்பாடுகள் மதுசாரப் பாவிப்பால் அற்றுப் போகின்றன.

ஒருவித போலியான சுதந்திரம் எம்மை ஆட்கொள்கின்றது. எந்த வயோதிபரையும் டேய்! என்று அழைக்கத் தயங்குவதில்லை. இப்பேர்ப்பட்ட மதுசாரம் பாவிப்பாளர்கள்.


இன்று எமது இளைய சமுதாயத்திடையே மதுசாரம், போதைப் பொருட் பாவனை ஆகியன வேண்டுமென்றே அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதோ என்று எண்ணத் தோன்றுகின்றது. பாரம்பரியமாக மரியாதை பேணல், பெற்றோரை மதித்தல், பண்புடமை போன்ற குணங்களைக் கொண்டு வாழ்ந்த எமது இளைய சமுதாயம் அவற்றை நீக்கி மரியாதை தவறி பெற்றோர், உற்றோர், ஆசிரியர் ஆகியோரை மதிக்காத ஒரு கலாசாரத்தை அவர்கள் தழுவ வேண்டும் என்ற எண்ணத்தில் நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றதோ தெரியவில்லை.

இதுவரை காட்டி வந்த அவர்களின் கட்டுப்பாடும், கடும் முயற்சிகளும், சுதந்திர வேட்கையும் மழுங்கப்பட வேண்டும் என்று திட்டமிட்டு இப்பேர்ப்பட்ட கலாசாரம் இன்று நடைமுறையில் இருந்து வருகின்றதோ நான் அறியேன்.

சமுதாயம் ஏதாவது ஒரு விடயத்தை முற்றும் முழுவதுமாக கண்டிக்கத் தொடங்கினால் அதன்மீது இருக்கும் பற்று, பிடிப்பு ஆகியன விடுபட்டுப் போகவும் வாய்ப்புண்டு. வீட்டில் எம்மவர் மதுசாரம், சிகரெட் அல்லது போதைப் பொருள் பாவிப்பது பற்றி ஒரு வெறுப்புணர்ச்சியை நாங்கள் வெளிப்படுத்தினால் குடும்பத்தில் வளரும் பிள்ளைகளும் அந்த வெறுப்புணர்ச்சியுடன் வளருவன.

புகைபிடிக்காதவர் மத்தியில் புகைபிடித்தால் தமது வெறுப்பையும், எதிர்ப்பையும் அவர்கள் வெளிக்காட்டும் போது தொடர்ந்து அந்த நபர் புகைப்பிடிப்பது கடினமாக இருக்கும். ஆகவே மதுசார, சிகரெட், போதைப்பொருட் பாவனை எவ்வாறு பரவுகின்றதோ அதே வழியில் அதை அழிக்கவும் முடியும் என்பதை உணர வேண்டும். மிகவும் கண்டிப்பானசில மாணவர்கள் இந்த மதுசாரப் பழக்கத்தை எம்மீது வேண்டுமென்றே திட்டமிட்டு சிலர் ஏவி விட்டுள்ளார்கள் என்பதில் முழு நம்பிக்கை பெற்றுவிட்டார்களாகில் இது வேண்டாம் நமக்கு என்று தம்மைச் சுற்றியுள்ள மாணவ சமுதாயத்திற்கு அறிவுறுத்த முன்வருவார்கள். அவர்களின் கண்டிப்பு நாளடைவில் எமது இளைஞர் சமுதாயத்தை கரைசேர்க்கும் என்று நம்பலாம்.

அதேபோன்று மது அருந்திய ஒருவர் புரியும் அட்டகாசங்களை அவருக்குச் சுயபுத்தி வந்த பின் அவருக்கு அடித்துக் கூறி அவர் மனதில் தன் மீது அவருக்கு ஒரு வெறுப்பை



உருவாக்குவதாலும் சுக்கிரீவன் திருந்தியது போல அவர்களும் திருந்த வழிவகுக்கலாம்.

வழக்கமாக இந்தப் பழக்கத்தில் ஈடுபடுபவரை சமூகம் பார்த்தும் பாராத மாதிரி இருப்பதும் அவரின் தவறுகளை ஏதோ அசகாய சூரனின் நடவடிக்கைபோல சித்திரித்துக் காட்டுவதும் அந் நபர்களை மேலும் மேலும் அந்தப் பழக்கத்தில் தொடர்ந்திருக்கச் செய்யும். இது தவிர்க்கப்பட வேண்டும். வீட்டில், நாட்டில் மதுவுக்கு எதிரான மனிதக் கருத்து உருவானால் தானாகவே அப் பழக்கம் அடங்கிவிடும். கவர்ச்சி குறையும் போது அந்தப் பழக்கத்தை கைவிட்டு விடுவார்கள்.

தொடர்ந்து எமது இளைஞர்கள் போதைக்கு அடிமையாகினால் மதுவுக்கு அடிமையாகினால் தற்போது வளர்ந்துவரும் மாதுக்கள் அரவணைப்புக்கு அடிமையாகினால் எமது வருங்காலம் கேள்விக்குறியாகிப் போய்விடும்.

எம்முள் சிறந்த பலர் எம்மை விட்டு வெளிநாடுகள் சென்றுவிட்டார்கள். அதுகூட அவர்களைத் திட்டமிட்டே வெளிநாடுகளுக்கு அனுப்ப நடவடிக்கைகள் இது காறும் எடுக்கப்பட்டு வந்துள்ளது என்பது வாதம்.

அதேபோன்று இங்குள்ள எமது இளைஞர்களை நுகர் இன்பங்களுக்கு அடிமையாக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. பல குழுக்கள் இந்த தவறான நடவடிக்கைகளில் இறங்கியுள்ளார்கள் என்று தெரிகிறது. இவற்றைத் தடுக்க பொலிஸாரின் ஒத்துழைப்பு எமக்கு அவசியம் என்று கூறும் அதே வேளையில் மக்கள் சேர்ந்து தத்தமது இடங்களில் போதிய நடவடிக்கைகளில் இறங்க வேண்டும்.

இன்று கோயில்களில் விக்கிரகங்கள் காணாமற் போவது, கற்பழிக்கப்பட்ட பெண்கள் கிணறுகளில் உயிரற்ற சடலங்களாக மிதத்தல் போன்றவை நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. ஆனால் எவை சம்பந்தமாகவும் குற்றவாளிகள் கண்டுபிடிக்கப்படவில்லை. ஏன் என்று மக்கள் கேட்க முன்வர வேண்டும்.

பொலிஸாருக்கும் பொதுமக்களுக்கும் இடையில் போதிய புரிந்துணர்வும் கூட்டுறவும் நம்பிக்கையும் வளர்ந்தால் குற்றவாளிகளை இலேசில் பிடித்துவிடலாம். மக்கள் கண்காணிப்பு சபைகளை முன்னர்போல் நாம் வடிவமைக்க ஆவன செய்யப்பட வேண்டும் என்று எண்ணுகின்றேன். இது பற்றி உரியவர்களுடன் பேசுவோம்.

நடவடிக்கைகள் எடுப்போம். மதுசார நடவடிக்கைகள் கட்டுக்கடங்காமல் போவதையும் மக்கள் துணையுடன் கட்டுப்படுத்துவோம் என அவர் தெரிவித்தார். (அ-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நவீன சந்தையில் சட்டவிரோதமாக அமைக்கப்படும் புதிய கடைகள்

(மானிப்பாய்)

யாழ்.நவீன சந்தையில் சட்டவிரோதமான முறையில் புதிய கடைகள் அமைக்கப்பட்டு வருவதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

நவீன சந்தைக்கும் மரக்கறி சந்தைக்குமிடையிலான பகுதியில் இதுவரை காலமும் துவிச்சக்கரவண்டி பாதுகாப்பு நிலையமே இருந்து வந்தது. ஆயினும், கடந்த சனிக்கிழமை இரவோடிரவாக அவை அகற்றப்பட்டு தகரத்தினாலான கடைகள் அவ் விடத்தில் அமைக்கப்பட்டுள்ளன.

இதன் காரணமாக நவீன சந்தைக்கான சைக்கிள் பாதுகாப்பு நிலையம் இல்லாது போயுள்ளதனால் கடைகளுக்கு முன்னர் வாகனங்கள் நிறுத்தப்பட்டுள்ளன.

அத்துடன் புதிதாக அமைக்கப்பட்ட குறித்த கடைகளின் கீழ் மலசலகூட குழி அமைந்துள்ளது. மலசல குழி நிரம்பும் சந்தர்ப்பங்களில் அதை எவ்வாறு அகற்றுவது என்று வர்த்தகர்கள் கேள்வியெழுப்புகின்றனர்.



அது மட்டுமன்றி, பொதுமக்கள் மற்றும் வர்த்தகர்களின் பயன்பாட்டிற்கென அமைக்கப்பட்ட நவீன சந்தைக்கும் மரக்கறி சந்தைக்குமிடையிலான பகுதியில் காணப்பட்ட மலசலகூடமும் சுமார் பதினொரு மாதங்களாக பூட்டப்பட்ட நிலையிலுள்ளது.

குழாயில் ஏற்பட்ட வெடிப்பு காரணமாகவே இது பூட்டப்பட்டுள்ளதாக காரணம் காட்டப்பட்டு 11 மாத காலம் கடந்துள்ள போதும் இது வரை அது திருத்தப்படாததனால் பொது மக்கள், வர்த்தகர்கள் மலசல கூடங்களைப் பயன்படுத்துவதில் சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

இது சம்பந்தமாக மாநகரசபை ஆணையாளர், மாநகர சபை மேயர், பொறியியலாளர் ஆகியோருக்கு அறிவித்தும் மாநகர சபை ஆணையாளர் மற்றும் பொறியியலாளர் வந்து பார்வையிட்டாலும் எந்த வித நடவடிக்கைகளும் இதுவரை எடுக்கப்பட வில்லை என வர்த்தகர்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

ஒவ்வொரு மாதமும் குறித்த காலப்பகுதியில் கடைகளுக்குரிய மாத வாடகை செலுத்தாவிட்டால் கடை மாநகர சபையினால் பொறுப்பேற்கப்பட்டுள்ளது என்ற பதாகை மாநகர சபை உத்தியோகத்தர்களால் காட்சிப்படுத்தப்படுகின்றது. ஆயினும், அத்தியாவசிய தேவைகள் குறித்து உரிய நடவடிக்கை எடுக்கப்படுவதில்லை என அவர்கள் அங்கலாய்க்கின்றனர்.

எனவே, இது தொடர்பாக சம்பந்தப்பட்ட தரப்பினர் உரிய தீர்வுகளைப் பெற்றுத்தர வேண்டும் என பாதிக்கப்பட்டவர்கள் கோரிக்கை விடுத்துள் ளனர். (அ-9-23)

## பாதுகாப்பு செலவுகள் அதிகரிக்க காரணம் என்ன? ஐ.தே.க.கேள்வி

(கொழும்பு)

பாதுகாப்பு செலவுகள் தொடர்சியாக உயர்வடைவதற்கான காரணம் என்ன என ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம். சுவாமிநாதன் கேள்வி எழுப்பியுள்ளார்.

நாடாளுமன்றில் உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு கேள்வியெழுப் பியுள்ளார்.

அவர் தொடர்ந்து அங்கு உரையாற்றுகையில், நாட்டில் இடம்பெற்ற போர் முடிவுக்கு கொண்டுவரப்பட்டுள்ளது.

ஒவ்வொரு ஆண்டிலும் பாதுகாப்பு செலவுகள் உயர்வடை கின்றன.

போர்க்கால செலவுகளை அபிவிருத்திக்காக பயன்படுத்துவதாக அரசாங்கம் உறுதியளித்திருந்தது.

எனினும் ஒவ்வொரு வரவு செலவுத் திட் டத்திலும் பாதுகாப்பு செலவுகள் உயர்வடைந்து செல்கின்றன.

நாட்டை இராணுவ மயமாக்குவதா அரசாங்கத்தின் உத்தேசம்? மக்களின் பிரச் சினைகள் குறித்து இந்த வரவு செலவுத் திட்டத்தில் கவனம் செலுத்தப்பட வில்லை என அவர் தெரிவித்துள்ளார். (அ-2)

# யுத்தத்தால் சேதமடைந்த தலங்கள் புனரமைக்கப்படும்

## பிரதமர் தெரிவிப்பு

(கொழும்பு)

பாராளுமன்றத்தினுள் குரோதம், பொறாமை போன்ற மனப்பான்மைகளை விடுத்து மக்களை நல்வழியில் வழிநடத்தக்கூடிய நல்ல மனிதர்களாக அனைத்து பாராளுமன்ற உறுப்பினர்களும் இந்த உயரிய சபையில் செயற்பட வேண்டும் என பிரதமர் டி.எம். ஜயரட்ன கேட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

பாராளுமன்றில் புத்தசாசன மற்றும் மத விவகாரங்கள் உட்பட தெரிவுக் குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்பட்ட 10 சிரேஷ்ட அமைச்சுக்களுக்கான நிதி ஒதுக்கீட்டு குழு நிலை விவாதத்தில் கலந்துகொண்டு நேற்றுமுன் தினம் உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நாட்டிலுள்ள 2 கோடியே 7 இலட்சம் மக்களையும் மத, கலாசார பண்பாட்டுடன் வாழ்வதற்கு இந்த உயரிய சபையிலுள்ள 225 உறுப்பினர்களும் செயற்பட வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

சகல இன மக்களும் தத்தமது மதங்களை அனுஷ்டிக்கும் விதத்தில் இந்த நாட்டில் வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளது.

மஹிந்த சிந்தனையூடாக நாட்டிலுள்ள இந்து, பௌத்த, இஸ்லாம், கிறிஸ்தவ மதங்களை பாதுகாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

நாட்டில் தற்போது 70.2 வீத பௌத்தர்களும், 12.6 வீத இந்துக்களும், 9.7 வீத இஸ்லாமியர்களும், 6.1 வீத கத்தோலிக்கர்களும் வேறு கிறிஸ்தவ மதத்தைச் சேர்ந்தவர்கள் 1.3 வீதமுள்ளனர். மதங்களுக்கென இந்த வரவு செலவு திட்டத்தில் 4,571 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. இதன் ஊடாக மதங்களின், மத வழிபாட்டுத் தலங்கள் மேம்படுத்தும் முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. அதேபோன்று வடக்கு-கிழக்கு பகுதிகளில் யுத்தம் காரணமாக சேதமடைந்த இந்து, கிறிஸ தவ, இஸ்லாம், பௌத்த வழிபாட்டுத் தலங்களை புனர மைக்கும் வேலைகளும் நடைபெறுகின்றன என்றார். (அ-2)

# வாக்கெடுப்பு நடத்தப்பட்டால் அரசாங்கம் தோல்வியடையும்

## அசாத் சாலி தெரிவிப்பு

வரவு செலவுத் திட்டம் தொடர்பில் இரகசியமான வாக்கெடுப்பு நடத்தப்பட்டால் அரசாங்கம் கட்டாயம் தோல்வியடையும் என மத்திய மாகாண சபை உறுப்பினர் அசாத் சாலி தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

அரசாங்கத்தில் இருப்பவர்கள் கூட ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை வெற்றிபெறச் செய்ய முயற்சிக்க மாட்டார்கள்.

கசினோ சூதாட்டம் வெளிநாட்டவர்களுக்கு மட்டுமே அனுமதிக்கப்படும் என அமைச்சர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார். சட்டம் தரம் கெட்டுப் போய்விட்டது.

மகிந்தவின் இந்த அரசாங்கம் வெட்கமில்லாத அரசாங்கம். அரசாங்கத்தில் இருப்பவர்கள் பிரதமர் டி.எம். ஜயரத்ன பதவியில் இருந்து விலக வேண்டும் எனக் கூறி வருகின்றனர்.

நாட்டுக்குள் எதனோல் வருகிறது. அமைச்சர்கள் அதனை விநியோகிக்கின்றனர்.

நாட்டின் பௌத்த பிக்குமார் உடைந்து பிளவுபட்டுச் சென்றுள்ளனர். சில பௌத்த பிக்குகள் பிரதமரை பாதுகாக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர் என்றார்.(2)

## கொள்ளையிட்டவர்களுக்கு விளக்கமறியல்

(கொழும்பு)

இராணுவ மேஜர் ஒருவரை தாக்கி அவரிடமிருந்த ஆபரணங்களை கொள் ளையிட்ட சம்பவம் தொடர்பில் வடமத்திய மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் ஒருவரின் புதல்வன் உள்ளிட்ட 7 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் அநுராதபுரம் பிரதான நீதவான் நீதிமன் றில் ஆஜர்படுத்தப்பட்டனர். இதன்போது சந்தேகநபர்களை எதிர்வரும் 24ஆம் திகதி வரை விளக்கமறி யலில் வைக்குமாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

மின்னேரியா பயிற்சி கல்லூரியில் சேவையாற்றும் இராணுவ மேஜர் ஒருவர் அநுராதபுரம், நுவரவெவ வத்த பிரதேசத்தில் வைத்து தாக்குதலுக்கு இலக்காகியுள்ளார். இதன்போது மேஜரிடமிருந்த ஒரு இலட்சத்து ஐம்பதாயிரம் ரூபா பெறுமதியான தங்க ஆபரணங்களை கொள்ளையிட்டதாக முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது. (2)


இவர்களுக்கு மணமகள் தேவை | கல்யாண மாலை | இவர்களுக்கு மணமகன் தேவை

| மணமகள் தேவை | மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1982 இந்து (V)<br>நட்சத்திரம்: சித்திரை 2<br>கி.பா: 16 3/4<br>உயரம்; 5'5"<br>தகைமை/தொழில்: Civil Engineer(UK Not PR)<br>தொ.இ: B/2652 | பிறப்பு: 1974 இந்து (V)<br>நட்சத்திரம்: அச்சுவினி<br>கி.பா: 37 சூரி செவ் 12 இல்<br>உயரம்: 5' 9"<br>தகைமை/தொழில்: BSc ஆசிரியர்<br>தொ:இ:G/2668 |
| பிறப்பு: 1990 இந்து (V)<br>நட்சத்திரம்: ரேவதி 1<br>கி.பா: 32 1/4 செவ் 4 இல்<br>தகைமை/தொழில்: A/L (டோகா)<br>தொ.இ: B/2653 | பிறப்பு: 1981 இந்து (V)<br>நட்சத்திரம்: திருவோணம் 1<br>கி.பா: 74 செவ் 1 இல்<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்: HNDA<br>தொ.இ:G/2671 |
| பிறப்பு: 1979 இந்து (V)<br>நட்சத்திரம்: சுவாதி 2<br>கி.பா: 44 செவ் 8 இல்<br>உயரம்: 5' 5"<br>தகைமை/தொழில்: O/L/முகாமையாளர்<br>தொ.இ: B/2656 | பிறப்பு: 1992 இந்து (V)<br>நட்சத்திரம்: உத்தரம் 3<br>கி.பா: 37 1/2 செவ் 2இல்<br>உயரம்: 5' 1"<br>தகைமை/தொழில்: BSc / பொறியியலாளர் (நியூசிலாந்து)<br>தொ.இ: G/2672 |
| பிறப்பு: 1970 இந்து (V)<br>நட்சத்திரம்: அனுசம் 2<br>கி.பா: 44 செவ் 2 இல்<br>உயரம் 5' 7"<br>தகைமை/தொழில்: Civil Engineer Q.S (Oman)<br>தொ.இ: B/ 2657 | பிறப்பு: 1989இந்து (Mu)<br>நட்சத்திரம்: புனர்பூசம் 3<br>கி.பா: 21 1/2 செவ் 2இல்<br>உயரம்: 5' 2"<br>தகைமை/தொழில்:O/L<br>தொ.இ: G/2678 |

சகல தொடர்புகளுக்கும்:-
கல்யாண மாலை
(சர்வதேச இலவச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.
( ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம் )
ஊடக அனுசரணை வலம்புரி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாரதி வெற்றிடங்களை நிரப்புவதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கையில் முறைகேடு

## சிவமோகன் அவசர கடிதம்

(குருமன்காடு)

**வடமாகாணசபையின் நிர்வாகத்தின் கீழுள்ள திணைக்களங்களில் வெற்றிடமாகவுள்ள சாரதிகளை நியமிப்பதற்கு எடுக்கப்பட்டுள்ள முயற்சியில் முறைகேடுகள் காணப்படுவதாகவும் இது தொடர்பில் உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறும் வடமாகாணசபை உறுப்பினர் வைத்தியகலாநிதி சி.சிவமோகன் வடமாகாண முதலமைச்சருக்கு அவசர கடிதம் ஒன்றை எழுதியுள்ளார்.**

அக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

வடமாகாணசபை நிர்வாகத்தின் கீழுள்ள திணைக்களங்களில் ஏற்பட்டுள்ள சாரதி வெற்றிடங்களை நிரப்புவதற்காக வடமாகாணசபைத் தேர்தல் நடைபெறுவதற்கு முன்னர் அவசர அவசரமாக சாரதிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டு போட்டிப்பரீட்சை ஒன்றும் நடத்தப்பட்டது. இருந்தும் சாரதிகளை இப் போட்டிப் பரீட்சை மூலம் தேர்ந்தெடுப்பதில பல பிரச்சினைகள் தோன்றியதன் காரணமாக மாகாணசபைத் தேர்தலுக்கு முன்பாக நேர் முகத் தேர்வு நடத்தி ஆட்சேர்ப்பு செய்ய முடியாத நிலையில் கௌரவ ஆளுனரின் கீழ் இயங்கிய வடமாகாண நிர்வாகம் இருந்ததாக நான் அறிகிறேன்.

தற்போது போட்டிப் பரீட்சைக்கான புள்ளிகள் வழங்கப்பட்டு உரியவர்களுக்கு அனுப்பப்பட்ட நிலையில் அதற்கான நேர்முகப் பரீட்சையை இம் மாதம் 18 ஆம் திகதி முதல் நடத்துவதற்கு பிரதிப் பிரதம செயலாளர் நடவடிக்கை எடுத்துள்ளதுடன் நியமனத்தையும் வழங்குவதற்கும் தயாராகி வருவதாக அறிய முடிகின்றது.

சாரதிகளுக்கான ஆட்சேர்ப்பு செய்வதற்கு வடமாகாண பிரதி பிரதம செயலாளர் நடவடிக்கை எடுப்பதற்கு முன்னர் முல்லைத்தீவு மாவட்டத்தில் போர் காரணமாக பலர் அச்சம் கொண்டு சாரதிகளாக பணியாற்ற முன்வராத போதும் அச் சூழ்நிலைகளை பொருட்படுத்தாமல் வாகனங்களை செலுத்துவதற்கான சகல தகமைகளுடனும் குறிப்பிட்ட சில ஊழியர்கள் சுகாதார திணைக்களத்தில் ஒப்பந்த அடிப்படையில் பணியாற்ற முன்வந்தார்கள் என்பதை நான் முல்லைத்தீவு திணைக்களத்தில் பணியாற்றியவன் என்ற வகையில் நன்கு அறிவேன்.

ஒப்பந்த அடிப்படையில் நியமனம் பெற்ற காலம் தொடக்கம் இன்று வரை நிரந்தர நியமனமோ ஊதிய அதிகரிப்போ இன்றி பணியாற்றிக் கொண்டிருப்பவர்கள் பற்றி எமது வடமாகாணசபை நிர்வாகம் எந்தவிதமான அக்கறையும் கொள்ளாமல் வெளியில் இருந்து சாரதிகளை சேர்த்துக் கொள்வதிலேயே அரசியல் அழுத்தம் காரணமாக மிகவும் சிரத்தை எடுத்துக் கொண்டுள்ளார்கள் என்பது தெரிய வருகிறது.

தற்போதைய போட்டிப் பரீட்சையில் இரண்டு பாடங்களிலும் 170 புள்ளிகளுக்கு மேல் பெற்றவர்கள் மட்டுமே நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படவிருப்பதாகவும், அவர்களுக்கே நியமனம் வழங்குவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருவதாகவும் தகவல்கள் கிடைத்துள்ளன.

போட்டிப் பரீட்சையில் 170 புள்ளிகளுக்கு மேல் எடுத்தவர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கப்படும் போது ஏற்கனவே ஒப்பந்த அடிப்படையில் பல ஆண்டு காலமாக பணியாற்றிக் கொண்டிருப்பவர்களின் சேவை முடிவுறுத்தப்படவேண்டிய ஒரு பரிதாபகரமான நிலை ஏற்படும் என்பதை தங்களின் மேலான கவனத்திற்கு கொண்டு வருகின்றேன்.

ஆகவே பின்வரும் விடயங்களை தாங்கள் மாகாணத்தின் முதலமைச்சர் என்ற வகையிலும் மாகாணத்தின் நிதி அமைச்சர் என்ற வகையிலும் மாகாண பொது நிர்வாகம் தங்கள் முழுக்கட்டுப்பாட்டில் இருக்கின்றது என்ற வகையிலும் தங்களுக்கு முன்வைக்கிறேன்.

பிரதிப் பிரதம செயலாளரால் நடத்த உத்தேசிக்கப்பட்டுள்ள நேர்முகப் பரீட்சையை தற்காலிகமாக இடைநிறுத்தல், அமைய அடிப்படையிலும் ஒப்பந்த அடிப்படையிலும் நீண்ட காலமாக சாரதிகளான சகல தகமைகளுடனும் பணியாற்றும் சகல சாரதிகளின் பிரச்சினைகளுக்கும் நிரந்தர நியமனம் வழங்கி உறுதியான தீர்வைக் காணுதல், சாரதிகள் பற்றாக்குறை காரணமாக சிற்றூழியர் தரத்தில் இருந்து கொண்டு தற்காலிக சாரதிகளாக பணியாற்றுபவர்களை இனங்கண்டு நிரந்தர சாரதிகளாக நியமனம் செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல், மேற்படி சேவையாற்றுபவர்களின் நிரந்தர நியமனம் இறுதியாக்கப்பட்ட பின்னர் மிகுதியாகவுள்ள வெற்றிடங்களுக்கு போட்டிப பரீட்சையில் சித்தியடைந்தவர்களை நியமித்தல்.

எமது திணைக்களத்தின் வேலைத்திட்டங்களை நிறைவேற்றுவதற்காக நீண்டகாலமாக உழைத்து வரும் அமைய, தற்காலிக மற்றும் ஒப்பந்த அடிப்படையிலான சாரதிகளின் நலன்கள் தங்களால் பாதுகாக்கப்படவேண்டும் என்ற நோக்கிலேயே மேற்படி யோசனைகளை முன்வைத்துள்ளேன் எனவும் அக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ம-250-266)

## சிறுவன் உயிரிழப்பு

(குருமன்காடு)

கனகராயன்குளம் பகுதியில் பொதுக் கிணற்றில் விழுந்து சிறுவன் ஒருவன் பரிதாபமாக உயிரிழந்துள்ளான்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் இரவு 8 மணியளவில் நடைபெற்றுள்ளதாக கனகராயன்குளம் பொலிஸார் தெரிவித்தனர்.

கிணற்றில் விழுந்த விஜயன் ஆதித்தியன் (வயது 7) என்பவர் பிரதேச மக்களால் மீட்கப்பட்டு கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார்.

சடலம் கிளிநொச்சி வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. (ம-250-259-266)

## மூன்று நபர்களுக்கு கடூழிய சிறை

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு கருநாட்டுக்கேணி பகுதியில வீடு ஒன்றினுள் உட்புகுந்து ஒரு இலட்சத்து 50 ஆயிரம் ரூபா பெறுமதியான சொத்துக்களுக்கு சேதம் ஏற்படுத்தியதாக குற்றஞ்சாட்டப்பட்ட மூவருக்கு தலா ஒரு வருட கடூழியச் சிறைத்தண்டனை விதித்து முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி மாணிக்கவாசகர் கணேசராஜா தீர்ப்பளித்துள்ளார்.

கடந்த வருடம் நடைபெற்ற இச்சம்பவத்தை விசாரணையின் பின்னர் நேற்று முன்தினம் இத்தீர்ப்பு வழங்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. (ம)

## கசிப்பு உற்பத்தி; நபர்களுக்கு தண்டம்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் பகுதியில் கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்ட 5 பேருக்கு கசிப்பு உற்பத்தி செய்தமை, உபகரணங்கள் வைத்திருந்தமை ஆகியவற்றுக்கான தண்டப்பணமாக 2 இலட்சத்து 50 ஆயிரம் ரூபா தண்டப் பணம் விதித்து முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி மாணிக்கவாசகர் கணேசராஜா தீர்ப்பளித்துள்ளார்.

மேற்படி நபர்களுக்கு முற்குற்றங்கள் இருபபதாக பொலிஸார் தெரிவித்ததையடுத்தே மேற்படி தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளது. (ம)

வலம்புரி விளம்பர தொடர்புகளுக்கு:
021 321 0815,
021 567 1532




## வீதியை புனரமைக்குக

(கண்டாவளை)

கண்டாவளை பிரதான வீதி புனரமைக்கப் படாமையால் அவ் வீதியால் பயணிப்போர் பெரும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

குண்டும் குழியுமான இவ் வீதியால் பயணிப்போர் விபத்துக்களை எதிர்கொள்ள வேண்டிய நிலையுள்ளது.

எனவே உரிய தரப்பினர் உடன் நடவடிக்கை எடுத்து வீதியைப் புனரமைத்து போக்குவரத்திற்கு உதவுமாறு அப்பகுதி மக்களும் பயணிகளும் கோரிக்கை ஒன்றை முன்வைத்துள்ளனர். (ம-263)

## சித்திரம் வரைதல் போட்டியில் முதலிடம்



(முல்லைத்தீவு)

கொழும்பு மாவட்ட பாடசாலைகளுக்கிடையிலான சித்திரம் வரைதல் போட்டியில் கொழும்பு றோயல் கல்லூரியில் கல்வி பயிலும் கணேசராஜா பிரணவன் முதலிடத்தை பெற்றுள்ளார்.

கொழும்பு கல்கிஸ்ஸ சென்.தோமஸ் கல்லூரி, யாழ் சென்ஜோன்ஸ் கல்லூரியின் பழைய மாணவரான 12வயது நிரம்பிய கணேசராஜா பிரணவன் சதுரங்கம் மற்றும் டெனிஸ் ஆகியவற்றில் பதங்கங்களையும், பரிசில்களையும் பெற்றிருப்பதுடன் கல்வியிலும் றோயல் கல்லூரிக்கு பெருமை தேடிக் கொடுத்துள்ளார்.

கணேசராஜா பிரணவன் முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி மாணிக்கவாசகர் கணேசராஜாவின் புதல்வன் என்பது குறிப்பிடத்தக்கது. (ம)

## தாலிக்கொடியை அறுத்த நபருக்கு விளக்கமறியல்

பெண் ஒருவரின் தாலிக்கொடியை பறித்துச் சென்ற நபரை எதிர்வரும் 20ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு மன்னார் மாவட்ட நீதவான் ஆனந்தி கனகரட்ணம உத்தரவிட்டுள்ளார்.

அத்துடன், அன்றையதினம் சந்தேக நபரை அடையாள அணிவகுப்புக்கு உட்படுத்துமாறும் அவர் உத்தரவிட்டுள்ளார்.

சந்தேக நபரை மன்னார் நீதிமன்றத்தில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை ஆஜர்படுத்திய போதே நீதவான் மேற்படி உத்தரவைப் பிறப்பித்துள்ளார்.

கடந்த திங்கட்கிழமை மன்னாரிலிருந்து தோட்டவெளி ஜோசப்வாஸ்நகர் கிராமத்திற்கு பஸ்வண்டியொன்றில் சென்ற குறித்த பெண் அப்பஸ்வண்டியிலிருந்து இறங்கி நடந்து சென்று கொண்டிருந்த போது அவரது தாலிக்கொடியை அவ்விடத்தில் நின்ற மேற்படி சந்தேக நபர் அறுத்துச்சென்றுள்ளார்.

சுமார் 8 இலட்சம் ரூபா பெறுமதியான தாலிக்கொடியே இவ்வாறு அறுத்துச் செல்லப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து மன்னார் பொலிஸ் நிலையத்தில் தாலிக்கொடியை பறிகொடுத்த பெண் முறைப்பாடு செய்துள்ளார்.

இந்த நிலையில், மன்னார் புதுக்குடியிருப்பு கோணர் பண்ணைக் கிராமத்தில் சந்தேக நபரை கடந்த திங்கட்கிழமை மாலை பொலிஸார் கைதுசெய்துள்ளதுடன், தாலிக்கொடியையும் கைப்பற்றியுள்ளனர்.

(ம-250)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இன்று ஒரு தகவல்

## உயர்வு நவிற்சி

எனக்கு வேண்டப்பட்ட கவிஞர் ஒருவர், ஒருநாள் என்னை தேடி வந்தார்.

மிகவும் கவலையாக இருந்தார். என்ன விடயமென்று விசாரித்தேன். தனது மனைவி திட்டியதாகச் சொன்னார்.

அதை அவர் என்னிடம் எப்படிச் சொன்னார் தெரியுமா?

"அவள் தன்னுடைய சொல் அம்புகளால் என் இதயத்தை துளைத்து விட்டாள்" என்றார்.

கவிஞர் இல்லையா? அதுதான் அப்படிச் சொன்னார்.

அதுசரி! உண்மையாகவே அந்த அம்மா அப்படியா செய்தார். இவரது இதயம் என்ன ஓட்டையாகவா போய்விட்டது.

இந்தப் பக்கத்தில் இருந்து எட்டிப் பார்த்தால் அந்த ஓட்டை வழியாக அடுத்த பக்கத்திலே இருக்கிறதா தெரிகிறது? அப்படியில்லை.

கவிஞர்தானே மிகைப்படுத்திச் சொல்கிறார் அவ்வளவுதான்.

கவிதையிலே இப்படிச் சொன்னால் பரவாயில்லை. ஆனால், இதையே எல்லா இடத்திலேயும் சொல்லிக் கொண்டிருக்க முடியாது.

ஒரு வைத்தியரிடம் சென்று ''என் மனைவி சொல் அம்புகளால் என் இதயத்தைத் துளைத்து விட்டாள்'' கூறினால், "காயம் பலமா, லேசா" என்று கேட்பார்.

இப்படி மிகைப்படுத்தி சொல்வது இலக்கியத்திற்கு சிறப்பாக இருக்கும். விஞ்ஞானத்திற்கு இது எதிராக இருக்கும்.

ஏனென்றால், மிகைப்படுத்துவதென்பது உணர்ச்சியின் வெளிப்பாடு. விஞ்ஞான சோதனையிலே உணர்ச்சிக்கு இடமில்லை.

ஒரு விஞ்ஞானி பரிசோதனை செய்தார். இரண்டு திரவத்தை ஒன்றுடன் ஒன்று கலக்குகிறார். பளபளவென்று ஒரு திரவம் உண்டாகிறது என்று வைத்துக் கொள்வோம்.

உடனே அது எப்படி இருக்கிறது என்ற குறிப்பை எடுக்க வேண்டுமே தவிர அவரே அந்த பளபளப்பிலே மயங்கி ''ஆகா! என் கண்ணையே பறிக்கிறதே. இது என்ன பொன்னோ, முத்தோ, வைரமோ, வைடூரியமோ" என்று கூற ஆரம்பித்தால், விஞ்ஞானத்தின் நிலைமை என்ன?

யதார்த்தத்தை விட்டு விலகிப் போனால், உண்மையின் தன்மை சிதைந்து போய்விடும். அறிவியல் அம்சம் குறைந்து விடும்.

ஒரு சோதனை தோல்வி என்றால் தோல்விதான். கீழே விழுந்தாலும் மீசையிலே மண் ஒட்டவில்லை என்ற மாதிரி பேசிக் கொண்டிருக்கக்கூடாது.

விஞ்ஞானிகளும் கவிஞர்களும் ஒரே விடயத்திலே தொடர்புபட்டால் சில சிக்கல்கள் வரலாம்.

ஒரு கணவன், மனைவி இருந்தார்கள். கணவர் ஒரு கவிஞர்! மனைவி ஒரு விஞ்ஞானப் பேராசிரியை!

கலைஞர் தன் மனைவியின் அழகைப் பாராட்டி ஒரு கவிதை எழுதப்போகிறேன் என்று சொன்னார்.

எதற்கும் சற்று எச்சரிக்கையாக இருங்கள் சேர்! என்று சொல்லி வைத்தேன்.

இதிலே என்ன சேர் எச்சரிக்கையாக இருக்க வேண்டியுள்ளது. மனைவியைப் பற்றி கணவன் கவிதை எழுதுவது தப்பா?

இரண்டு நாட்கள் சென்ற பின்னர் மிகவும் வேகமாக திரும்பி என்னிடம் வந்து சேர்! நீங்கள் சொன்னதுதான் சரி. நான் சற்று எச்சரிக்கையாகவே இருந்திருக்கலாம் என்றார்.

என்ன நடந்தது? என்று விசாரித்தேன். ஒன்றுமில்லை சேர். ஒரு கவிதை எழுதினேன். பெண்களுக்கு இடை மெலிந்திருப்பது அழகு என்று.

நான் இன்னும் ஒருபடி மேலே சென்று "இல்லாத அவள் இடையை" எழுதினேன். அதாவது இடை என்ற ஒன்று இல்லை என்று வர்ணித்து விட்டேன்.

அதைப்படித்த என் மனைவி சண்டைக்கு வந்துவிட்டாள். "எனக்கு இடையே இல்லையென்று எழுதியிருக்கிறீர்கள். அப்படியென்றால் நான் என்ன இரண்டு துண்டாகவா இருக்கிறேன்?'' என்று ஆர்ப்பாட்டம் செய்ய ஆரம்பித்துவிட்டாள்.

நான் மெதுவாக சமாதானப்படுத்தி "இல்லை" என்று சொன்னேன். உண்மையாகவே இல்லை என்று நினைக்கக் கூடாது.

அறிவியலும் அழகியலும் மோத ஆரம்பித்தால் அதன் விளைவு இப்படித்தான் இருக்கும்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# வடமாகாணசபை சுமுகமாக நடக்க வேண்டும் என்பதையே நான் விரும்புகிறேன் - ஜனாதிபதி

(கொழும்பு)

வடக்கின் மக்கள் ஆணையைப் பெற்ற வடமாகாண முதலமைச்சரும் நிறைவேற்று அதிகாரத்தின் ஆணையை பெற்றுள்ள வடமாகாண ஆளுநர் சந்திரசிறியும் இன்று முரண்பட்டு கொள்கிறார்கள். இந்நிலைமை நீடித்தால் பணியாற்ற முடியாது. முதலமைச்சர் தனது பதவியை ஒரு வேளை இராஜினாமா செய்து விடுவாரோ என நான் அச்சப்படுகிறேன்.

இது அவரது நிலைப்பாடு அல்ல, இது எனது அச்சம். நாட்டில் புதிய நெருக்கடி உருவாகக்கூடாது. இதை நாட்டின் ஜனாதிபதியான நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும் என ஜனநாயக மக்கள் முன்னணி தலைவர் மனோகணேசன் ஜனாதிபதியிடம் தெரிவித்துள்ளார்.

மனோ கணேசனின் பிறந்த நாளையொட்டி அவரை தொலைபேசியில் தொடர்புகொண்டு வாழ்த்து தெரிவித்த ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவிடம் உரையாடியபோதே, மனோ இந்த கருத்தை ஜனாதிபதியிடம் கூறியுள்ளார்.

அவர் ஜனாதிபதிக்கு தெரிவித்த விடயங்கள் வருமாறு,

நாட்டின் தேசிய இனப்பிரச்சினை தொடர்பான பேச்சுவார்த்தை அரசாங்கத்துக்கும், தமிழ் தேசிய கூட்டமைப்புக்கும் இடையில் அரசியல் ரீதியாக நடைபெற வேண்டும் என்பது எங்கள் எதிர்பார்ப்பு. ஆனால், தேசிய இனப்பிரச்சினை தீர்வு வரும்வரை மாகாண நிர்வாகம் காத்திருக்க முடியாது. நாட்டின் ஜனாதிபதியின் கவனத்தின் கீழ் அவரது பிரதிநிதியான ஆளுநருக்கும், முதலமைச்சருக்கும் மாகாண நிர்வாகம் தொடர்பிலான நிர்வாக ரீதியான பேச்சுவார்த்தைகள் நடைபெற வேண்டும் என நான் விரும்புகிறேன்.

வடமாகாண நிர்வாகத்தை நடத்தும் செயலாளர்கள் மாற்றப்படுவது உட்பட பல முடிவுகள் ஒரு தலைப்பட்சமாக எடுக்கப்படுகின்றன. இவை நிர்வாகத்தை குழப்புகின்றன. மாகாண நிர்வாகம் சுமுகமாக நடைபெற வேண்டும் என்பதை நீங்கள் ஏற்றுக்கொள்வீர்கள் என நான் நம்புகிறேன் என்றார்.

இதற்கு பதிலளிக்கும் விதமாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச தெரிவித்ததாவது,

முதலமைச்சர் விக்னேஸ்வரன் பதவியில் இருக்க வேண்டும். நீங்கள் சொல்வதுபோல் அவர் பதவி விலகும் சாத்தியம் ஏற்பட்டால் அது நாட்டுக்கு நல்லதல்ல. நான் யாழ்ப்பாணம் சென்று அவரை சந்திப்பேன். அல்லது விக்னேஸ்வரனை கொழும்பு வரும்படி அழைப்பு விடுகிறேன். எனது செயலாளர் லலித் வீரதுங்கவிடம் இன்று இதுபற்றி பணிப்புரை விடுப்பேன்.

வடமாகாணசபை தேரதலில் தமிழ் தேசிய கூட்டமைப்பு மூன்றில் இரண்டு பெரும்பான்மை பெறும் என்று தெரிந்துகொண்டு தானே நான் வடக்கு தேர்தலை நடத்தினேன். அந்த மாகாணசபை சுமுகமாக நடக்க வேண்டும் என்பதை நான் விரும்புகிறேன என்பதை தமிழ் மக்களுக்கு சொல்லுங்கள்.

ஆளுநரும் முதல்வரும முரண்படக்கூடாது. ஒருவரை ஒருவர் அனுசரிக்க வேண்டும். செயலாளர்களை மாற்றுவது பற்றி எனக்கு சரியான தகவல்கள் இல்லை. இவை என்னிடம் நேரடியாக சொல்லப்படவேண்டும். மாகாண சபை நிதி ஒழுங்குகள் பற்றிய சட்டம் இருக்கிறது.

அதை இரு சாராரும் கடைப்பிடிக்க வேண்டும். இது தொடர்பாக நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்சவும் அக்கறை கொண்டு என்னிடம் ஆரம்பத்தில் கூறியுள்ளார். முதல்வரிடம் இதுபற்றி நான் உடனடியாக உரையாடுகிறேன்.

இதை அவர்களுக்கு சொல்லுங்கள். தமிழ் மக்களிடமும் சொல்லுங்கள். இன்னொன்றையும் அவர்களிடம் சொல்லுங்கள். வட மாகாணசபையை சேர்ந்த இரண்டு அமைச்சர்கள், வடக்கின் பாடசாலைகளுக்கு சென்று இனவாதம் கக்கும் பரப்புரைகளை செய்கிறார்கள் என எனக்கு தெரிய வந்துள்ளது. தமிழ், சிங்கள இனத்தவர் மத்தியில் இனவாத பிளவை ஏற்படுத்த இவர்கள் முயற்சி செய்கிறார்கள். இனவாத பிரசாரத்தை பாடசாலை மாணவர் மத்தியில் செய்ய வேண்டாம் என்று அவர்களுக்கு எடுத்து கூறுங்கள் என்றார். (அ-2)

## சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 50 | 20 - 30 | 50 | 40 |
| உருளைக்கிழங்கு | 100 | 100 | 100 | 100 |
| பச்சைமிளகாய் | 60 | 60 | 50 | 100 |
| தக்காளி | 50 | 60 | 70 | 80 |
| மரவள்ளிக்கிழங்கு | 30 | 30 | 30 | 40 |
| கோவா | 20 | 20 | 30 | 40 |
| கரட் | 40 | 40 | 60 | 80 |
| பூசணி | 25 | 20 | 30 | 40 |
| புடோல் | 20 | 40 | 35 | 40 |
| வாழைக்காய் | 30 | 30 | 50 | 60 |
| சின்ன வெங்காயம் | 90 - 180 | 200 | 200 | 120 - 200 |
| பெரிய வெங்காயம் | 60 - 120 | 180 | 140 | 120 |
| பாகற்காய் | 80 | 80 | 100 | 120 |
| வெண்டிக்காய் | 40 | 30 | 40 | 60 |
| கருணைக் கிழங்கு | 30 | 20 | 30 | 50 |
| பயற்றங்காய் | 50 | 60 | 100 | 80 |
| லீக்ஸ் | 60 | 60 | 100 | 100 |
| பீற்றூட் | - | 50 | 60 | 80 |
| கறிமிளகாய் | 120 | 100 | 130 | 140 |
| முருங்கைக்காய் | - | 120 | - | 240 |
| போஞ்சி | 120 | 80 | 120 | 80 |
| கத்தரி தம்புள்ள | 30 | - | - | - |
| கீரை - 1 பிடி | 20 | 30 - 40 | 30 | 10 |
| தேசிக்காய் | 50 | 40 | 70 | 60 |
| தேங்காய் (ஒன்று) | 30 - 50 | 50 | 40 | 35 - 45 |
| இராசவள்ளி | 140 | 120 | 200 | 200 |

# இராசி பலன்

*19.12.2013*
*(மார்கழி 04, வியாழக்கிழமை)*
**சூரிய உதயம் காலை 6.16 மணிக்கு**
**துதியை முன்னிரவு 6.56 மணிவரை**
**புனர்பூசம் முழுவதும்**
**இராகுகாலம் 1.53-3.23 மணிவரை**
**சுபநேரம் 7.53-9.23 மணிவரை**

**மேடம்** வம்பு வழக்குகளை சமாளித்து வளம் காணும் நாள், ஆதாயம் தரும் வேலையொன்றில் அக்கறை காட்டுவீர்கள், கொடுக்கல்-வாங்கல்கள் ஒழுங்காகும், உடன் பிறப்புக்கள் உதவிக்கரம் நீட்டுவர்.

**இடபம்** புதிய முயற்சியொன்றில் ஆர்வம் காட்டுவீர்கள், சுப செய்திகள் வந்து சேரும் நாள், தேவையற்ற கவலைகளை தவிர்ப்பது நல்லது, வருமானம் திருப்திதரும்.

**மிதுனம்** எப்படி நடக்குமோ என நினைத்த காரியம் நல்ல படியாக நடைபெறலாம், நண்பர்களுடன் சேர்ந்து வெளியிடயங்களுக்கு செல்லும் எண்ணம் உருவாகும், போசன சுகமுண்டு.

**கடகம்** பயணங்களால் பலனுண்டு, அலைச்சல்களால் பணச் செலவு ஏற்படலாம், அன்றாட பணிகள் நன்றாக நடைபெற ஆண்டவனைப் பிரார்த்திப்பீர்கள், சயன சுகக் குறைவான நாள்.

**சிங்கம்** பயணங்கள் கைகூடுவதற்கான வாய்ப்புண்டு, தொலைபேசித் தகவல் தொழில் வளர்ச்சிக்கு உறுதுணை புரியும், பணப் புழக்கம் அதிகரிக்கும். உறவினர் வருகையுண்டு.

**கன்னி** தன்னம்பிக்கை அதிகரிக்கும் நாள், வீட்டை சீரமைப்பதில் அக்கறை காட்டுவீர்கள், வருமானத்தை அதிகரிக்கும் எண்ணம் உருவாகும், திறமைகள் வெளிப்படும் சூழ்நிலை உருவாகும்.

**துலாம்** விடாமுயற்சிக்கு வெற்றி கிடைக்கும், விட்டுப்போன உறவுகள் மீண்டும் வந்து சேரலாம், எதிர்பாராத சம்பவங்கள் இடம்பெறலாம், அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர்.

**விருச்சிகம்** எதையும் யோசித்து செய்வது நல்லது, கடவுளை வழிபட்டு காரியம் தொடங்க வேண்டிய நாள், வரவும் செலவும் சமமாகும், பெரியோரின் ஆலோசனைகளைக் கேட்டு நடப்பது நல்லது.

**தனுசு** அன்பு நண்பர்களின் ஆதரவு பெருகும், எடுத்த காரியங்கள் எளிதில் கைகூடும், வராத உறவினர்கள் திடீரென உங்கள் வீடுகளுக்கு வரலாம், உஷ்ண சம்பந்தமான நிலையுண்டு.

**மகரம்** நாவன்மையால் நல்ல பெயர் எடுப்பீர்கள், கடமையில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள், கடன் பிரச்சினையை சாமர்த்தியமாகப் பேசி சமாளிப்பீர்கள், தேவைகள் பூர்த்தியாகும்.

**கும்பம்** பிள்ளைகளின் வளர்ச்சி கண்டு பெருமை அடையும் நாள், சுப தகவல்கள் வந்து சேரும் நாள், புதிய முதலீடுகள் செய்வது பற்றி அனுபவம் மிக்கவர்களிடம் ஆலோசனை கேட்பீர்கள்.

**மீனம்** தாய்வழி உறவினர்களால் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கப் பெறுவீர்கள், வருமானம் திருப்தி தரும், மனதில் இனம்புரியாத சந்தோசம் குடி கொள்ளும், வாகன சுகமுண்டு.

வளவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# சீமா... பூமா...

ஒரு காட்டில் முயல் குடும்பம் வாழ்ந்து வந்தது. முயல் அப்பா, அம்மாவுக்கு அன்று அதிக மகிழ்ச்சியான நாள்! காரணம், முயல் அம்மாவுக்கு இரண்டு முயல் குட்டிகள் பிறந்த சந்தோசம்!

முயல் குட்டிகள் கொழுக் மொழுக்கென்று பார்க்க அழகாக இருந்தது. சீமா, பூமா என்று இரண்டு முயல் குட்டிகளுக்கும் பெயர் வைத்து, அக்கம் பக்கம் உள்ள உறவு முயல்களைஎல்லாம் அழைத்து மெகா கரட் விருந்து வைத்துக் கொண்டாடியது முயல் அப்பா,அம்மா.

சீமாவும் பூமாவும், பக்கத்து கரட் தோட்டத்தில் விளையாடுவதென்றால் ஒரே சந்தோசம். ஆனால், அப்பா, அம்மா முயல்கள் அப்படி அதிக நேரம் விளையாட அனுமதிப்பதில்லை.

ஆட்கள் நடமாட்டம் அறிந்து குட்டி முயல்களுக்கு வேகமாக ஓடி வராமல் ஆபத்தில் சிக்கிக் கொண்டால் என்ன செய்வது என்ற கவலையால் அனுமதிப்பதில்லை.

அப்பா, அம்மா உணவு தேடச் சொல்லும்போது சீமாவையும் பூமாவையும் வீட்டிலேயே இருக்கச் சொல்லிவிட்டு போவார்கள். ஆனால், அவர்கள் தலை மறைந்ததும் சீமாவும் பூமாவும் கரட் தோட்டத்துக்கு விளையாட ஓடிவிடுவார்கள்.

இப்படி ஒருநாள் சீமா, பூமா முயல் குட்டிகள் விளையாடச் சென்றபோது அந்தத் தோட்ட விவசாயி கவனித்து பிடித்து விட்டார். அப்போது தந்தை முயலும், அம்மா முயலும் அங்கே வந்து சேர்ந்தன.



அப்பா முயல் விவசாயியிடம் வந்து, எங்க குட்டிகள் ரெண்டையும் விட்டு விடுங்கள் என்றுகெஞ்சிக் கேட்டது.

விவசாயியோ, ரெண்டு முயல்குட்டியையும்கொண்டு போய் முயல் கறி செஞ்சு சாப்பிட ஆசைப்பட்டுத்தான் பிடிச்சு இருந்தார். எனவே விவசாயி ரெண்டு குட்டிகளையும் விட்டுவிடுகிறேன். அதற்குப் பதிலாக நான் உன்னைப் பிடிச்சுக்கிட்டுபோக சம்மதம் சொன்னா விட்டுவிடுகிறேன் என்றார்.

சரி, என்று அப்பா முயல சொல்ல அப்பா முயலைப் பிடித்துக்கொண்டு குட்டி முயல்களை கீழே விட்டுவிட்டார்.

உடனே அம்மா முயல் வந்து விவசாயியிடம், இந்தக் குட்டிகள் அப்பா இல்லாம தூங்காது. என்னைப் பிடிச்சுக்கிட்டு அவரை விட்டுவிடுங்கள் என்று அம்மா முயல் கெஞ்சியது.

விவசாயியும் மனம் இரங்கி அப்பா முயலை விட்டுவிட்டு அம்மா முயலைப் பிடித்துக் கொண்டார்.

இப்போது அப்பா முயலும், குட்டி முயல்களும் விவசாயி முன்னால் வந்து, எங்க அம்மாவை நீங்க பிடிச்சுட்டுப் போனா எங்களுக்கு அம்மா இல்லாம கஷ்டமா இருக்கும். அதனால எங்க எல்லாரையுமே நீங்க கொண்டு போயிருங்க என்று சொல்லி கண்ணீர் வடித்தது குட்டிகள்.

அப்பா முயலும் என்னோட குட்டி சொல்றதுதான் சரி. நாங்களும் வர்றோம் என்று சொன்னது.

முயல் குட்டிகளின் கண்ணீரும், குட்டிகள் மீது பெரிய முயல்களுக்கும் உள்ள அன்பையும் கண்டு விவசாயி திகைத்துப் போனார்.

“சே! என்ன காரியம் பண்ண இருந்தோம. சாப்பிடும்வரைதான் ருசியான சமாச்சாரம் நமக்கு. ஆனால் முயல்களுக்கோ தங்கள் குடும்பத்திலிருந்து ஒருவரை நிரந்தரமாக இழந்து தவிக்கும் உணர்வு எப்போதும் ஏற்பட்டுவிடுமே. விவசாயிமனம் மாறினார். அம்மா முயலை கீழே இறக்கி விட்டார.

இனிமேல் இது போன்று உயிர்களைக் கொன்று புசிக்கும் வழக்கம்

இன்றோடு சரி என்றும் முடிவு செய்து கொண்டார். முயல்கள் எல்லாம் தங்கள் கைகளைக் கூப்பி விவசாயிக்கு நன்றி தெரிவித்துக்கொண்டது.

முயல் குடும்பம் சந்தோசமாக வீட்டுக்குத் திரும்பியது. சீமாவும் பூமாவும் அப்பா, அம்மா பேச்சைக் கேட்காமல் போய்த்தானே பிரச்சினையில் மாட்டிக்கொண்டோம். இனிமேல் அப்பா, அம்மா சொல்வதைத் தட்டாமல் கேட்க வேண்டும் என்று தீர்மானித்தது. அப்பா, அம்மாவிடம் சீமாவும் பூமாவும் மன்னிப்புக் கேட்டுக்கொண்டது.

குட்டீஸ் நீங்கள் கற்றுக்கொள்ளும் பாடம் என்ன? அப்பா, அம்மா என்பவர்கள் உங்களைப்போல வாழ்ந்து பெரியவர்கள் ஆனவர்கள். அவர்களுக்கு எது நல்லது? எது கெட்டது என்று தெரியும். அவர்கள் சொல்படி கேட்டு நடந்தால் எந்தப் பிரச்சனையும் நமக்கு வராது என்பதைத் தெரிந்து கொண்டீர்களா? பிள்ளைகளுக்கு ஒன்று என்றால் பெற்றோர் எப்படித் துடித்துப் போவர்கள்? நல்ல பிள்ளைகள்தான் நல்ல மனிதர்களாக முடியும்.




- 324-லிசீனியஸ் உரோமப் பேரரசன் பதவியைத் துறந்தான்.
- 1154-இங்கிலாந்தின் இரண்டாம் ஹென்றி முடிசூடினான்.
- 1606-ஐக்கிய அமெரிக்காவின் 13 குடியேற்ற நாடுகளில் முதலாவதான வேர்ஜீனியாவின் ஜேம்ஸ்டவுன் நகரில் இங்கிலாந்தில் இருந்து மூன்று கப்பல்களில் ஆங்கிலேயர்கள் வந்திறங்கினர்.
- 1871-யாழ்ப்பாணத்தில் முதல் தடவையாக கத்தோலிக்க மதகுருப் பதவிகள் வழக்கப்பட்டன.
- 1877-யாழ்ப்பாணம், நெடுந்தீவில் வாந்திபேதி மற்றும் சின்னம்மை நோய் பரவியதில் பலர் இறந்தனர்.
- 1916-முதலாம் உலகப்போர்: பிரான்சில் வேர்டன் என்ற இடத்தில் இடம்பெற்ற சமரில் ஜேர்மனிய படைகளை பிரெஞ்சுப் படைகள் தோற்கடித்தன.
- 1941-அடொல்ஃப் ஹிட்லர் ஜேர்மனிய இராணுவத் தலைவர் ஆனார்.
- 1961-போர்த்துக்கீச குடியேற்ற நாடான டாமன் டையூ பகுதியை இந்தியா தன்னுடன் இணைத்துக் கொண்டது.
- 1963-சனிசிபார் ஐக்கிய இராச்சியத்திடம் இருந்து விடுதலை பெற்று சுல்தான் ஹமூட் பின் முகமது தலைமையில் முடியாட்சியைப் பெற்றது.
- 1967-இரு நாட்களின் முன்னர் கடலில் நீந்தும்போது காணாமல்போன ஆஸ்திரேலியப் பிரதமர் ஹரல்ட் ஹோல்ட் இறந்து விட்டதாக அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்டது.
- 1972-சந்திரனுக்கு கடைசித் தடவையாக மனிதரை ஏற்றிச்சென்ற அப்பல்லோ 17 பாதுகாப்பாக பூமி திரும்பியது.
- 1983-உலகக்கோப்பை காற்பந்துப் போட்டியில் வழங்கப்படும் பரிசுக்கிண்ணம் பிரேசிலில் அந்நாட்டு காற்பந்தாட்ட அமைப்பின் தலைமையகத்தில் வைத்துத் திருடப்பட்டது.
- 1984-ஹொங்கொங்கின் ஆட்சியை ஜூலை1,1997 இல் மக்கள் சீனக் குடியரசிடம் மீண்டும் ஒப்படைக்கும் ஒப்பந்தம் சீனத் தலைவர் டெங்க்ஸியாவோபிங், பிரித்தானியப் பிரதமர் மார்க்ரெட் தாட்சர் ஆகியோருக்கிடையில் கைச்சாத்திடப்பட்டது.
- 1986-சோவியத் எதிர்ப்பாளி அந்திரேய் சாகரொவ் வீட்டுக்காவலில் இருந்து விடுவிக்கப்பட்டார்.

பிறப்புக்கள்

- 1901-ருடால்ப் ஹெல், ஜேர்மானிய கண்டுபிடிப்பாளர் (இ.2002)
- 1906-லியோனிட் பிரெஷ்னேவ், சோவியத் ஒன்றியத் தலைவர் (இ.1982)
- 1922- கே.அன்பழகன், தமிழக அரசியல்வாதி
- 1934-பிரதிபா பட்டேல், இந்தியாவின் 12 ஆவது குடியரசுத்தலைவி
- 1974-ரிக்கி பொன்ரிங், அவுஸ்திரேலியத் துடுப்பாட்டக்காரர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிரதிபா பட்டேல்



பிரதிபா பட்டேல் 1934 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 19 ஆம் திகதி மராட்டிய மாநிலத்தில் உள்ள ஜல்கான் மாவட்டத்தில் பிறந்தார்.

இவர் இந்தியாவின் முதலாவது பெண் குடியரசுத் தலைவர் ஆவார். 2007 ஆம் ஆண்டு ஜுலை மாதம் 19 ஆம் திகதி நடந்த குடியரசுத் தலைவர் தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்றார்.

மகாராஷ்டிரா மாநில அவையில் உறுப்பினராக 1985 முதல் 1985 வரை இருந்தவர். நாடாளுமன்ற உறுப்பினராகவும் 1991 முதல் 1996 வரையில் இருந்தவர். 2004 ஆம் ஆண்டு முதல் ராஜஸ்தான் மாநில ஆளுநராக பணியாற்றினார்.

இந்தியக் குடியரசுத் தலைவர் பதவியில் 2007 ஆம் ஆண்டு ஜுலை 25 ஆம் திகதி முதல் 2012 ஆம் ஆண்டு ஜுலை 24 ஆம் திகதி வரை இருந்தார்.

# அரசியலமைப்புக்கு எதிரான கோரிக்கைகளை அரசாங்கம் ஒருபோதும் ஏற்றுக்கொள்ளாது

## அமைச்சர் கெஹலிய இறுக்கம்

(கொழும்பு)

**இராணுவ பின்னணியைக் கொண்ட ஆளுநர் சந்திரசிறியை மாற்றி சிவில் அதிகாரியை நியமிக்குமாறு வடக்கு மாகாண சபை கோரி வருகிறது. இலங்கையில் வடக்கு மாகாண சபை முதலமைச்சர் விக்னேஸ்வரன் இரண்டு அமைச்சு திணைக் களங்களை அமைக்க முன்வைத்த யோசனை அரசியலமைப் புக்கு முரணானது என்று ஆளுநர் சந்திரசிறி நிராகரித் திருப்பதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அண்மையில் கூறியிருந்தது.**

ஆளுநரின் இவ்வாறான நிலைப் பாடுகள் அரசியலமைப்புக்கு முரணானது என்றும், அந்த அடிப் படையில் அவரை பதவிநீக்க மாகாண சபையில் தீர்மானம் நிறைவேற் றப்பட முடியும் என்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளு மன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் நாடாளுமன்றத்தில் குற்றஞ்சாட்டி யிருந்தார்.

இதுதவிர தலைமைச் செயலாளர, வடக்கு பிராந்திய பிரதிப் பொலிஸ்மா அதிபர் போன்ற பதவிகளின் நிய மனத்திலும் மத்திய அரசாங்கம் முதலமைச்சருடன் கலந்தாலோசிக காமல் செயற்படுவதாகவும் அவர் விமர்சனங்களை முன்வைத்திருந் தார்.

இந் நிலையில் கடந்த திங்கட்கிழமை, போயா பொது விடுமுறை தினத்தில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கூட்டிய அமைச் சரவைக் கூட்டத்தில் இந்த நிலைமை பற்றியும் ஆராயப்படும் என்று செய்திகள் வெளியாகியிருந்தன.

ஆனால், அந்த அமைச்சரவைக் கூட்டத்தில் வடக்கு மாகாணசபை விவகாரம் தொடர்பில் ஒரு வார்த்தை கூட பேசப்படவில்லை என்று அமைச சரவை முடிவுகளை அறிவிக்கும் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

இந்த சூழ்நிலையில், வடக்கு மாகாணசபை நிர்வாகத்தை சீராக முன்னெடுத்துச் செல்லமுடியாதபடி முட்டுக்கட்டைகள் ஏற்பட்டுள்ளதாக முதலமைச்சர் விக்னேஸ்வரன் அண்மையில் கருத்து வெளியிட்டி ருந்த நிலையில், அது தொடர்பில் அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுக்கப்போகிறது என்று கேள்வி எழுப்பப்பட்டது.

முதலமைச்சர் அரசியலமைப் புக்கு முரணான கோரிக்கை வைத் தால் அதனை ஏற்றுக்கொள்ள முடியாது என்று கெஹலிய ரம்புக் வெல பதில் கூறினார்.

மாகாணசபை என்பது பழகிப் பார்ப்பதற்கானது அல்ல. இங்கு 1980களிலிருந்து மாகாணசபைகள் இருக்கின்றன.

வரலாற்றில் முன்னெப் போது மில்லாத ஒன்றை புதிதாக தொட ங்கப் பார்க்கிறார்களா என்று ஆராயவேண்டியது ஆளுநரின் பொறுப்பு என்றும் அமைச்சர் பதி லளித்தார்.

யாரும் சொல்கிறார்கள் என்பதற் காக அரசாங்கம் தீர்மானங்களை எடுக்க வேண்டிய அவசியம் இல்லை. பயங்கரவாதிகளை மாவீரர்கள் என்று கூறி சட்டரீதியாக அவர்களை நினைவுகூர வேண்டும் என்று நாடாளுமன்றத்தில் கூறுகின்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மீதான நம்பகத்தன்மை சிக்கலுக் குரியது என்றும் அவர் கூறினார். (அ)

## பாலியல் குற்றங்களை விசாரிக்க விரைவில் விசேட நீதிமன்றம்

(கொழும்பு)

சிறுவர் துஷ்பிரயோகம் மற்றும் பாலியல் வல்லுறவு சம்பந்தமாக குற்றச்சாட்டுக்களை விசாரிக்க விசேட நீதிமன்றம் ஒன்று விரை வில் ஏற்படுத்தப்படும் என நீதிய மைச்சர் ரவூப் ஹக்கீம் தெரிவித் துள்ளார்.

நாடாளுமன்றத்தில் ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரோஷி சேனாநாயக்கா வின் கேள்வி ஒன்றுக்கு பதிலளிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் தொடர்ந்து கூறுகையில்,

இந்த வழக்குகளுக்காக நீதவான் நீதிமன்றம் மட்டுமல்லாது, மேல் நீதிமன்றங்களையும் ஏற்படுத்தி சிறுவர் துஷ்பிரயோகம் மற்றும் பாலியல் வல்லுறவு தொடர்பான வழக்குகளை துரிதமாக முடிக்க நடவடிக்கை எடுக்கப்படும் .

கடந்த 4 வருடங்களில் சிறுவர் துஷ்பிரயோகம், பாலியல் வல்லுறவு தொடர்பில் 2 ஆயிரத்து 420 குற்ற வாளிகளில் 517 பேருக்கு மட்டுமே தண்டனை வழங்கப்பட்டுள்ளதாக ரோஷி சேனாநாயக்க குறிப்பிட்டார். (அ-2)

## பொலிஸ் விசாரணைகளில் திருப்தியில்லை-சோபிததேரர்

போதைப்பொருள் அடங்கிய இரு கன்டயினர்கள் கைப்பற்றப்பட்ட சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேற்கொணடு வரும் மேலதிக விசாரணைகள் குறித்து திருப்தி கொள்ள முடியாது என்று ஜாதிக ஹெல உறுமயவின் தலைவர் ஓமல்பே தேரர் தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

முறையான விசாரணையொன்றை மேற்கொள்ள வலியுறுத்தி பொலி ஸமா அதிபருக்கு, நாம் மனுவொன்றை கையளித்துள்ளோம்.

குறித்த போதைப்பொருள்தொகையை விடுவிக்கக் கோரி பிரதமரின் இணைப்புச் செயலாளருக்கும் மனு வொன்று அளிக்கப்பட்டுள்ளது.

இதனால், தமது பதவிலிருந்து விலகி பொலிஸாரின் விசாரணை களுக்கு பிரதமர் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்றார்.

ஆயினும் போதைப்பொருட்கள் கடத்தல் பற்றி பொலிஸார் தற்போது முறையான விசாரணை முன்னெடுத்து வருவதாக பொலிஸ் பேச்சாளர் அஜித் ரோஹன தெரிவித்தார். (அ-2)

# குற்றச்சாட்டை நிரூபித்தால் அமைச்சர் பதவியை துறப்பேன்

இலங்கை சுங்க திணைக்களம கைப்பற்றிய, எதனோல் மற்றும் மதுசாரம் அடங்கிய இரண்டு கொள் கலன்களுடன் தனக்கு தொடர்பி ருப்பது நிரூபிக்கப்பட்டால் அமைச்சர் பதவியிலிருந்து விலகுவதாக அமை ச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

சட்டவிரோதமாக இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்ட எதனோல் மதுசார தொகையின் பின்னணியில அமைச்சர் ஜோன்ஸ்டன் மற்றும் அருந்திக்க பெர்னாண்டோ ஆகி யோர் இருப்பதாக ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் அண் மையில் கொழும்பில் நடைபெற்ற ஊடக சந்திப்பில் குற்றம் சுமத்தினார்.

ஜே.வி.பி இந்த குற்றச்சாட்டை நிரூபித்தால் தான் அமைச்சர் பதவியில் இருந்து விலகிக்கொள்ள தயார் என தெரிவித்துள்ள அமைச்சர் ஜோன்ஸ்டன், நிரூபிக்க முடியாது போனால் ஜே.வி.பியின் சகல நாடாளுமன்ற உறுப்பினர்களும் பதவி விலக வேண்டும் என கூறி யுள்ளார்.

அதேவேளை இந்த குற்றச்சாட்டை நாடாளுமன்ற உறுப்பினர் அருந்திக்க பெ்னாண்டோவும நிராகரித்துள் ளார். தனக்கு சுங்க திணைக்களத்தில் உறவினர்கள் எவருமில்லை என்றும அவர் கூறியுள்ளார். (அ-2)

# சிறப்பு அதிரடிப்படையை பலப்படுத்த நடவடிக்கை

## கட்டளை அதிகாரி எம்.சி.ரணவான

சிறப்பு அதிரடிப்படையைப் பலப்படுத்தும் வகையில், புதிய படையினர் இணைத்துக்கொள்ள ப்பட்டு விரைவில் பயிற்சி அளிக்க ப்படவுள்ளதாக, சிறப்பு அதிரடிப்ப டையின் கட்டளை அதிகாரி எம்.சி. ரணவானனை மேற்கோள்காட்டி இணையத்தளம் செய்தி வெளியிட்டு ள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட் டுள்ளதாவது,

கட்டுக்குருந்தவில் தற்போது நடைபெற்று வரும் பயிற்சிகள் முடிவுக்கு வந்த பின்னர், 300 பேருக்கான பயிற்சி ஆரம்பமாகும்.

அடுத்தாண்டில், சிறிப்பு அதிர டிப்படைக்கு 600 பேர் இணைத்துக் கொள்ளப்படவுள்ளனர்.

கடந்த 2009 ஆம் ஆண்டு மே மாதம் போர் முடிவுக்கு வந்த பின்னர், சிறப்பு அதிரடிப்படையினர் எல்லா மாவட்டங்களிலும் நிறுத்தப் பட்டுள்ளனர்.

தற்போது சிறப்பு அதிரடிப்படை யில் 7 ஆயிரத்து 800 அதிகாரிகளும படையினரும் உள்ளனர் என்றாலும, 10 ஆயிரம்பேர் தேவைபடுகின்றனர. என்றும் அவர் தெரிவித்துள்ளார். (அ-2)

# உலகின் மிக இளவயது பட்டதாரி தமிழ்ச் சிறுமி

தகவல்தொழில்நுட்பத்தில் உலகின் மிக இளவயது பட்டதாரியாக, கண்டி யைச் சேர்ந்த 11 வயது தமிழ்ச் சிறுமி யான வாசின்யா பிறேமானந்தா அறிவிக்கப்பட்டுள்ளார்.


பிரித்தானிய கணனிச் சமூகம் (British computer Society) இதற கான அறிவிப்பை வெளியிட்டுள்ளது.

கண்டியிலுள்ள கொழும்பு அனை தநுலகப் பாடசாலையில் 8 ஆம் வகுப்பில் கல்வி கற்று வரும் வாசின்யா, பிரித்தானிய கணனிச் சமூகத்தின் தகவல் தொழில்நுட்ப பட்டத்தை பெற்றுள்ளார்.

இவரே உலகில் தகவல் தொழில் நுட்பத்தில் ஆகக்குறைந்த வயதில் பட்டம் பெற்றவராவார்.

இவர் எட்டு வயதில் இருக்கும் போதே, க.பொ.த. சாதாரணதரப் பரீட்சையில் ஆங்கிலப் பாடத்தில் ஏ தரச் சித்தியைப் பெற்று சாதனை படைத்திருந்தார்.

அத்துடன், எட்டு வயதிலேயே கணனி அனுமதிப்பத்திரத்தைப் பெற்றுக் கொண்ட இவர், உலகின் இளம்வயது இணையத்தள மேம் பாட்டாளராகவும் அறிவிக்கப்பட்டி ருந்தார். (அ-2)



உரும்பிராய் வடக்கு கணேசா சனசமூக நிலைய முன்பள்ளி சிறார்களின் கலைவிழா அண்மையில் நடைபெற்றது. இதன்போது விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட உரும்பிராய் இலங்கை வங்கி முகாமையாளர் எஸ். தாக்கி சந்தனு நிலையக் கொடியை ஏற்றுவதையும் சிறார்களின் கலை நிகழ்வையும் படங்களில் காணலாம்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மொழிப் பிரச்சினைக்கு தீர்வுகண்டாலே நல்லிணக்கத்தை ஏற்படுத்த முடியும்

## அமைச்சர் வாசுதேவ நாணயக்கார வலியுறுத்து

(கொழும்பு)

**தமிழர் ஒருவருக்கு அவர் தமிழ் என்று தெரிந்தும் தனிச் சிங்களத்தில் கடிதம் அனுப்புவது அவரை கத்தியால் குத்துவதற்கு சமனாகும் என்று அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.**

நாடாளுமன்றில் மொழி அமுலாக்கல் மற்றும் அரச மொழிகள் அமைச்சு உட்பட தெரிவுக்குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்பட்ட 10 சிரேஷ்ட அமைச்சுகளுக்கான நிதி ஒதுக்கீட்டு குழுநிலை விவாதம் நேற்று முன்தினம் நடைபெற்ற போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

தனித் தமிழ்ப் பிரதேசங்களில் தமிழ் மொழியிலும், தனிச் சிங்கள பிரதேசங்களில் சிங்கள மொழியிலும் கடமையாற்றக் கூடியவாறு அரச ஊழியர்களுக்கு மொழி அறிவு வழங்கப்பட வேண்டும்.

அரச அலுவலகங்களில் தமிழ், சிங்கள மொழி பெயர்ப்பாளர்கள் இருக்க வேண்டும். அரச அலுவலகங்களில் வெளியிடப்படும் சுற்று நிருபங்கள், விண்ணப்பப் படிவங்கள் அனைத்தும் மும்மொழிகளிலும் இருக்க வேண்டும்.

அரச அலுவலகங்களுக்கு செல்லும் மக்கள் அங்கு சென்று மொழிப பிரச்சினைக்கு உள்ளானால் 1956 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொண்டு உதவிகளை பெறமுடியும். அதே இடத்தில் தீர்வு பெற்றுக் கொடுக்கப்படும்.

தனியார் பேருந்து வண்டிகளில் இப்போது மும்மொழியிலும் பெயர்ப் பலகைகள் இடப்படுகின்றன.

ஆனால் இ.போ.ச. பேருந்துகளில் தான் இன்னமும் அமுல் படுத்தவில்லை. அவர்கள் மீது வழக்கு தாக்கல் செய்யப்படும்.

இந் நாட்டில் மொழிப் பிரச்சினைக்கு முற்றுப்புள்ளி வைத்தாலேயே நல்லிணக்கத்தை ஏற்படுத்த முடியும்.

மொழி அமுலாக்கல் தொடர்பாக பலவிதமான திட்டங்கள் முன்னெடுத்த போதும் அவை சரியான முறையில் வெற்றியளிக்கவில்லை.

கிளிநொச்சியிலும் இரத்தினபுரியிலும் எதிர்வரும் 2014 ஆம் ஆண்டுமொழி அலுவலகம் திறக்கப்படும். இதேபோன்று அடுத்தாண்டு தேசிய ஒற்றுமை மாநாடும் இலங்கையில் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.

இதில் சகல இனங்களிலும் தலைவர்கள், மதத் தலைவர்கள், பிரதிநிதகளும் கலந்து கொள்வர். மொழிப் பிரச்சினைக்கு தீர்வு எடுக்கப்படாமல் எதனையும் சாதிக்க முடியாது. நானும் மொழியை கற்கவுள்ளேன்.

சிங்கள மக்கள் இல்லாமல் தமிழருக்கு தீர்வு இல்லை. இதே போன்று தமிழ் மக்களின் உடன்பாடு இல்லாமல் சிங்களவர்களுக்கு இந்த நாட்டில் ஒற்றுமைப்பாட்டை ஏற்படுத்தவும் முடியாது என்பதை நாம் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும்.

மேலும் வடக்கு மாகாண முதலமைச்சர் ஜனாதிபதி முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்த போதும் வடக்கு மாகாண சபை நடவடிக்கைகளில் தொய்வு நிலை ஏற்பட்டுள்ளது.

இது தொடர்பில் இருதரப்புக்கும் இடையே பேச்சுக்கள் இடம்பெற வேண்டும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (அ-2)

## போதை பொருளை தடுக்க முடியாது

(கொழும்பு)

கசினோ, போதைப் பொருள் மற்றும் சூதாட்டத்தை அரசாங்கத்தினால் தடுக்க முடியாது என பிரதமர் டி.எம். ஜயரட்ன தெரிவித்துளளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோன் அமரதுங்க எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த போது அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார். அவர் மேலும் குறிப்பிடுகையில்,

மக்களின் எண்ணங்களில் மாற்றங்களை ஏற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். அதனையே அரசாங்கம் செய்கின்றது.

போதைப் பொருள், மதுப்பாவனைகளை அரசாங்கம் மட்டுமே தடுத்து நிறுத்த வேண்டும்.

மேலும், பௌத்த சீருடை அணிந்த அனைவரும் பௌத்த பிக்குகள் அல்ல எனவும் அவர்களில் சாதாரணமானவர்களும் இருககின்றார்கள் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (அ-2)



GIZ நிறுவன பிரதிநிதிகள் ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறியை யாழ்.அலுவலகத்தில் சந்தித்து கடந்த காலங்களில் மேற்கொள்ளப்பட்ட செயற்றிட்டங்களுக்கு ஒத்துழைப்பு வழங்கியமைக்காக நன்றி தெரிவித்தனர். இதில் நிறுவனப் பிரதிநிதிகளுடன் ஆளுநர் மற்றும் பிரதம செயலாளர் ஆர். விஜயலட்சுமி, ஆளுநரின் செயலர் இ.இளங்கோவன் ஆகியோர் நிற்பதை படத்தில் காணலாம். (படம்:- என்.குமார்.)

# மண்டேலாவின் தடத்தை பின்பற்றி நல்லிணக்கம் ஏற்படுத்தப்படும்

## அரசாங்கம் கூறுகிறது

(கொழும்பு)

தென்னாபிரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி நெல்சன் மண்டேலாவின் பாணியில் நல்லிணக்கத்தை ஏற்படுத்த முனைப்பு காட்டப்படும் என அரசாங்கம் அறிவித்துள்ளது.

தென்னாபிரிக்காவின் உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக் குழுவின் முன்மாதிரியை பின்பற்ற உத்தேசித்துள்ளதாக ஊடக அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்ட போது அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் தொடர்ந்து கூறுகையில்,

உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் மாதிரியை பின்பற்றுவது குறித்து ஆளும் கட்சிக்குள் ஏற்கனவே பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

நல்லிணக்கத்தை ஏற்படுத்துவது தொடர்பில் ஏற்கனவே தென்னாபிரிக்காவின் உதவி கோரப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

ஏற்கனவே உருவாக்கப்பட்டுள்ள கட்டமைப்பின் அடிப்படையில் நல்லிணக்க முனைப்புக்கள் தொடரும் என அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-2)

# வட்டு.யாழ்.கல்லூரிக்கு அதிபர் நியமனம்

(யாழ்ப்பாணம்)

வட்டுக்கோட்டை யாழ்ப்பாண கல்லூரியின் புதிய அதிபராக வண. கலாநிதி டேவிற் சதானந்தன் சொலமன் அடுத்த வருடம் 2 ஆம் திகதி முதல் பதவியை பொறுப்பேற்கவுள்ளார்.

தற்போதைய அதிபர் என்.ஏ.விமலேந்திரன் எதிர்வரும் 24 ஆம் திகதியுடன் ஓய்வு பெறவுள்ளார்.

புதிய அதிபர் வண.கலாநிதி. டேவிற் சதானந்தன் சொலமன் பதவியமர்த்தும் வழிபாடு எதிர்வரும் ஜனவரி மாதம் ஆறாம் திகதி தென்னிந்திய திருச்சபை பேராலயத்தில் பேராயர் வண.கலாநிதி. டானியல். எஸ்.தியாகராஜா தலைமையில் இடம்பெறவுள்ளது.

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரிக்கு புதிய அதிபராக பதவியேற்கும் வண.கலாநிதி. டி.எஸ். சொலமன் 1.6.1987 முதல் கல்விச் சேவையில் ஆசிரியராக பணியை தொடர்ந்து 26 வருட ஆசிரியர் சேவை பணியையும் 2012 முதல் சிரேஷ்ட இ.ப அதிபராகவும் பணியாற்றினார். (அ-9)

# ஆட்சியாளரை தீர்மானிப்பது பௌத்தர்களே-வீரவன்ச

இலங்கையின் அடுத்த ஆட்சியாளர் சிங்கள பௌத்த வாக்காளர்களாலேயே தீர்மானிக்கப்படுவார் என வீடமைப்பு மற்றும் பொது வசதிகள் அமைச்சர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.

பேலியகொடையில் அண்மையில் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் தொடர்ந்து கூறுகையில்,

நாட்டின் அடுத்த மக்கள் ஆணையை பெற திட்டங்களை வகுக்க வேண்டும். சிங்கள பௌத்த மக்களே அடுத்த ஆட்சியாளரை தீர்மானிப்பர்.கடந்த 2005 ஆம் ஆண்டு கிடைத்த மக்கள் ஆணைககு ஒரு அர்த்தம் இருந்தது. விடுதலைப் புலிகளை ஒழிக்குமாறு கோரியே அன்று அந்த மக்கள் ஆணை கிடைத்தது.

கடந்த 2010 ஆம் ஆண்டு புலிகளை ஒழித்தமைக்கான நன்றி கூறும் வகையிலான மக்கள் ஆணை கிடைத்தது. மீண்டும் மக்கள் ஆணையை பெற திட்டங்களை வகுக்க வேண்டும். அத்துடன் பௌத்த சிங்கள வாக்காளரகளை கவர நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார். (அ-2)

# வருமானத்திற்கு ஏற்ப செலவு செய்யுங்கள்

## அமைச்சர் நிமால்

மக்கள் தமது வருமானத்திற்கு அமைய செலவுகளை முகாமைத்துவம் செய்ய வேண்டும் என அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

பதுளை பிரதேசத்தில் நடைபெற்ற வைபவம் ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

மக்களின் அன்றாட பிரச்சினைகளை அரசாங்கத்தினால் மட்டுமே தீர்க்க முடியாது. வாழ்க்கைச செலவு அதிகம் என்று மக்கள் கூறலாம். பொருட்களின் விலைகள் அதிகம் என்றும் கூறலாம்.

அரசாங்கம் ஒரு புறத்தில் அபிவிருத்திகளை செய்து வரும் போது பொருட்களின் விலைகளை குறைக்க முடியாது. மக்கள் தமக்கு கிடைக்கும் சம்பளத்தின் பிரகாரம் செலவுகளை முகாமைத்துவம் செய்ய வேண்டும். அதனை கற்றுக் கொள்ள வேண்டும்.

அரசாங்கம் என்ற போது அது முக்கியத்துவம் கொடுக்கும் விடயங்கள் மாறுபடலாம். அரசாங்கம தற்பொழுது வீதிகளை நிர்மாணிப்பதற்கு முக்கியத்துவம் கொடுத்து வருகிறது.

வீதிகளுக்கு தார் கம்பளம் போடும் நடவடிக்கைகளுக்கு அரசாங்கம் முக்கியத்துவம் கொடுத்து வருகிறது என்றார். (அ-2)

# புலி ஆதரவு கட்சிகளின் கருத்தையே பிரிட்டன் பிரதமர் கமரூன் கேட்கின்றார்

## அமைச்சர் செனவிரத்ன ஆதங்கம்

(கொழும்பு)

பிரித்தானிய பிரதமர் டேவிட் கமரூன் புலி ஆதரவு கட்சிகளின் கத்துக்களையே கேட்கின்றார் என அமைச்சர் ஜோன் செனவிரத்ன தெரிவித்துள்ளார்.


ஜனநாயக ரீதியாக தெரிவு செய்யப்பட்ட அரசாங்கத்தின் கருத்துக்களுக்கு மதிப்பளிக்கப்படுவதில்லை. மாறாக, பயங்கரவாத அமைப்பான தமிமீழ விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாக இயங்கிய அரசியல் கட்சிகளுக்கே செவிமடுக்கின்றார்.

பொது நலவாய நாடுகள் அரச தலைவர்கள் மாநாட்டிற்கு விஜயம் செய்திருந்த பிரித்தானியப் பிரதமர் மாநாட்டை விடவும் யாழ்ப்பாணம் விஜயம் செய்வதை முக்கிய இலக்காக கொண்டிருந்தார்.

யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்திருந்த டேவிட் கமரூன் ஓர் இராஜதந்திரியைப் போன்று செயற்படவில்லை என அவர் மேலும் தெரிவித்தார். (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆரம்ப வகுப்பு விஞ்ஞானத்தின் கற்றல் செய்முறை இடைநிலை வகுப்பு விஞ்ஞானக்கற்றலில் ஆர்வத்தை ஏற்படுத்தும்



தற்போதைய காலகட்டத்தில் இடைநிலை வகுப்புகளில் விஞ்ஞான பாடத்தின் அடைவுமட்டம் நலிவடைந்து வருவதை அவதானிக்கமுடிகிறது.

இதன் தாக்கம் க.பொ.த. சாதரண தர, உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகளில் ஆரோக்கியமற்ற தன்மையை உறுதிப்படுத்துகின்றன. பெறுபேறுகளின் நிச்சயார்த்த தன்மையை நிலைநிறுத்த பாடசாலை,கோட்டம், வலயம் என்ற மட்டத்தில் உசுப்பேற்றல்கள் தொடர்ந்த வண்ணமேயுள்ளன.

எனவே, இச்செயற்பாட்டில் பதினொராம் ஆண்டில் மாரடிப்பதை விட ஆரம்ப வகுப்புகளிலேயே விஞ்ஞான பாடத்தில் ஊக்கம் மேற்கொள்வது சாலப்பொருத்தமானது.

கசப்பான மருந்தை இனிப்பான பிஸ்கட்டுடன் சேர்த்து குழந்தைகளுக்குக் கொடுத்து இலக்கை எட்டுவது போல விஞ்ஞானக் கல்வியையும் ஆரம்ப வகுப்புகளில் விருப்புடன் புகட்டுவது பொருத்தமானதாக் அமையலாம்.

கற்றல் பெறுபேற்றில் மாற்றத்தை ஏற்படுத்தவும் விஞ்ஞானக்கல்வியில் ஆர்வத்தைத் துண்டவும் கல்விப்புலம் சார்ந்தவர்களின் ஆதரவும் அரவணைப்பும் வேண்டற்பாலது.

எனவே, ஆரம்ப வகுப்புகளில் விஞ்ஞானக் கல்வியில் ஆர்வத்தை ஏற்படுத்துவதில் ஆசிரியர்களின் பங்களிப்பு மிகமிக கச்சிதமானதாகக் கருதப்படுகின்றது.

ஆனால், ஆரம்பக் கல்வி ஆசிரியராக நியமனம் பெற்ற பலர் விஞ்ஞான ஆசிரியர்களாகப் பயிற்சி பெற்று தமது வாண்மையை உயர்த்திய பின்னர் ஆரம்ப வகுப்புகளில் கற்பிப்பதை அங்கீகரிப்பதில்லை.

மாறாக வாண்மையின் அடுத்த நிலையில் விஞ்ஞானமாணியாக நிலை மாற்றம் பெறுவதற்குப் பதிலாக கலைப் பட்டதாரியாக மாறுகின்றனர்.

வாண்மை விருத்தி மகிழ்ச்சிக்குரியது,வரவேற்கத்தக்கது.ஆனால் விஞ்ஞானப் பயிற்சி பெற்றதும் ஆரம்ப வகுப்புக்களில் கற்பிப்பது இவர்களுக்கு அருவருப்பாக இருந்த போதும், கலைப்பட்டதாரி ஆகிய பின்னர் கலைப் பிரிவுகளுக்கான பாடங்களைக் கற்பிக்க மறுப்பது கவலைக் குரியதாகவுள்ளது.

இதை விடுத்து உள்ளக முரண்பாடுகள், உணர்வுகள், உணர்ச்சிகளுக்கப்பால் செயற்பட வேண்டியது பாடசாலையின் முக்கிய கடமையாகும்.

**செய்முறைக் கல்வியின் முக்கியத்துவம்**

ஆரம்ப வகுப்புக்களில் விஞ்ஞானம், சுற்றாடல் ஆகிய பாடங்களைக் கற்பிக்கும் போது இம் மாணவர்களுக்கு பொருத்தமான செயன்முறை வேலையை (Practical work) நடைமுறைப்படுத்துவதில் ஆசிரியர் முனைப்பாகச் செயற்பட வேண்டும்.

இதற்கு பொருத்தமான வாய்ப்புக்களைக் கல்விப் புலம் தயார்ப்படுத்த வேண்டும்.

இவ்வாறாகக் கற்றல், கற்பித்தல் செயற்பாடுகள் வகுப்பறைகளில் நடைபெறுகின்ற போது மாணவர்கள் விருப்பத்துடன் கற்றலில் ஈடுபட முனைவர்.

இதனால் கற்பித்தல் கம்பீரமாகவும் வெற்றிகரமாகவும் அமைவதுடன் விஞ்ஞான பாடத்தைக் கற்பதில் மகிழ்ச்சியடைவதுடன் அவர்களுக்கு கற்பித்தலும் ஒரு வெறுப்பூட்டும் விடயமாக இராது.

தொடர்ந்தும் விஞ்ஞானம் கற்பதில் ஆர்வத்தை ஆக்கபூர்வமாகவும் அனுபவ மூலமாகவும் ஏற்படுத்தலாம் என நம்பப்படுகின்றது.

பொதுவாக நோக்குமிடத்து சிறார்கள் தொட்டுணர்ந்து நேரடி அனுபவத்தின் ஊடாக வாய்ப்பைப் பயன்படுத்தி இலக்கை அடைவதிலும் ஆர்வமாக இருப்பார்கள். தமது சூழலின் புதியதோர் நிகழ்வு நடைபெறும் போது அவர்களிடையேயும் பிரமிப்பும் மகிழ்ச்சியும் உச்ச நிலையில் இருக்கின்றமை சொல்லித் தெரிய வேண்டியதொன்றல்ல. எனவே, இவ்வாறாகக் கற்பித்தலை வெற்றிகரமாகச் செயற்படுத்தப் பாடசாலைகளில் விருப்பதுடன் முன்வர வேண்டும்.



கல்வித் தரிசனம்

சிறார்கள் என்றும் புதிய விடயங்களைப் பார்ப்பதில் ஆர்வமாக இருப்பர். இயலாமை என்ற நிலையிலிருந்தும் இயலும் என்ற நிலைக்கு உந்தப்படுவது இவற்றைமையப் படுத்தி வேறு விடயங்களை அறிவதற்கான தேவை இவர்களிடம் தானாகவே ஏற்படும்.

**விஞ்ஞான எண்ணக் கருவும் செய்முறையும்**

ஆசிரியர்கள், மாணவர்களுக்கிடையில் ஒட்டுறவாடி செயற்பாடுகளின் ஊடாக சிறார்களுக்கு ஆர்வத்தை ஏற்படுத்தக் கூடிய புதிய உபகரணங்களுடன் கற்பித்தலில் ஈடுபடும் போதும் அவற்றைக் கையாளும் போதும் அவற்றை இயக்கிக்காட்டி மாணவருடன் இணைந்து செயற்படும்போது கற்றல், கற்பித்தல் செயற்பாடு வெற்றிகரமாக அமையும். ஆக, எம்மால் கூறப்படும் கூற்றுக்களையும் செய்கைகளையும் மாணவர்களிடையே ஆர்வத்தை ஏற்படுத்தமாட்டாது.

எளிய கையாளக்கூடிய உபகரணங்களைப் பயன்படுத்தி செய்துறை நுட்பத்தை பயன்படுத்தும் போது மாணவர்கள் பலவகையான புது விடயங்களை அறிந்து கொள்வர். இச் செயற்பாட்டில் வழிகாட்டல் மிக மிக அவசியமானது.

ஆசிரியர்கள், மாணவர்களுடன் அல்லது வளவாளர்களுடன் கூட்டாக இணைந்து புதிய விடயங்களை இனங் காண்பதற்கு ஆர்வத்தைத் தூண்டும் வகையில் அவர்களை தற்காலத்தில் பயன்படுத்த வேண்டும்.

மதிநுட்பம் மிக்க செயற்றிறன் மிக்க ஓர் ஆசிரியர் மாணவர்களின் பிரச்சினைகளுக்கு அல்லது சந்தேகங்களுக்கு கச்சிதமாகவும் மாணவனுக்கு சுவைபடத் தக்க வகையிலும் விடையளிக்கும் போது அவனது பிரச்சினையைத் தீர்ப்பதற்கு அவனுக்கு உதவமுடியும்.

இச் செயற்பாடு அவனது கற்றலுக்குப் படிக்கல்லாக அமையும். எனவே, இச்செயல் ஒழுங்கைப் பின்பற்றுவது வரவேற்கத்தக்கது.

உதாரணமாக, தரம் நான்கு மாணவர் குழுவொன்று ஆசிரியரின் வழிகாட்டலுடன் நீர்ச்சில்லு ஒன்றை அமைத்தது. குழுவைச் சேர்ந்த ஒரு மாணவன் அதனை இயக்கும் செயற்பாட்டில் ஈடுபட்டான். சில்லில் நீரை ஊற்றிக் கொண்டிருந்தான். அச்சில் ஊற்றும் போது செயற்பாடு நடைபெறவில்லை. சில்லில் நீர் ஊற்றப்பட்டதும் உண்மை. சில்லு இயங்காமல் இருந்ததும் உண்மை. இவ்விடத்தில் பிள்ளையின் எதிர்பார்ப்பு நிறைவேறாதவிடத்து பிள்ளை தோல்வியடையும் நிலைக்குத் தள்ளப்படும்.

இவ் வேளையில் நம்பகத்தன்மையை வலுவூட்ட வேண்டிய தேவை ஏற்படுகிறது. எனவே, குழுவினரின் சிந்தனைக்கு தீங்கு ஏற்படாதவாறு நீரை நாங்கள் சற்றுத் தள்ளி வேறொரிடத்தில் ஊற்றி பார்ப்போம் என முயற்சிக்கும் போது நீர்ச்சில்லு அசையத் தொடங்கலாம் என ஆலோசனை கூறலாம், வழிகாட்டலாம், அல்லது செய்து காட்டலாம். அவ்வாறு அச்சில்லின் மீது நீரையூற்றியதும் அது அசையத் தொடங்கும். இந்நிகழ்வு பிள்ளைகளின் முயற்சிக்கு வெற்றியாக அமையும்போது செயற்பாட்டு எண்ணக் கருவிலே மாற்றத்தை ஏற்படுத்தும், நம்பிக்கையை ஏற்படுத்தும். இவ்வாறாக பல செயற்பாடுகளை மேற்கொள்ளும் போது ஆரம்ப வகுப்பு மாணவர்களிடையே விஞ்ஞானக் கல்வியை மேல் வகுப்புகளிலும் கற்க வேண்டும் என்ற விருப்பத்தை தோற்றுவிக்கும். எண்ணக் கருவிலும் புத்துணர்ச்சியை ஏற்படுத்தும்.

**அளத்தலில் ஆர்வத்தை ஏற்படுத்தல்**

விஞ்ஞான செயன்முறைக் கற்றலில் அளத்தல், அளவிடுதல் என்பன மிக முக்கிய பங்கை வகிக்கின்றன. ஒரு பொருளை இன்னொரு பொருளுடன் ஒப்பிடும் போதும் அல்லது ஒன்றை ஒன்றுடன் ஒப்பிடும் போதோ அல்லது பிரிசோதனையை திட்டமிடும் போதோ அளத்தலும் அளவிடுதலும் மிக முக்கியவிடத்தை வகிக்கின்றது. விசை அளத்தலுக்கு மிகச் சிறந்த உதாரணமாகும். பிரயோகச் செயற்பாடுகளினால் ஆரம்பம் எதுவும் ஏற்படாது. பெரும்பாலான செயற்பாடுகள் போன்று இயங்கும் ஏதாவது ஒன்றை அறிந்து கொள்வதற்குள்ள ஆர்வமே ஆரம்பமாக அமைக்கின்றது. பொருள் ஒன்றைத் தொட்டுப் பார்ப்பதாலோ பிரிப்பதாலோ அப்பொருளைப் பற்றிய எண்ணம் ஒன்றை, உணர்வொன்றை பெற்று ஆர்வத்தை தூண்டப் பெறுவர்.

**விஞ்ஞானம் கற்றலில் ஆர்வத்தை ஏற்படுத்துதல்**

சாதாரணமாக பூவின் வெவ்வேறு பாகங்கள் பற்றியும் தாவரங்களின் வெவ்வேறு பாகங்கள் பற்றியும் கலந்துரை யாடி உண்மைப் பொருட்களுடன் பரிசோதனை செய்கின்ற போது மாணவர்களிடையே உயிரியல் கற்பதற்கான வாய்பையும் ஆர்வத்தையும் வரவழைக்கமுடியும். மாணவரிடம் காந்தமொன்றை வழங்கி வேறுறொரு காந்தம் இரும்பு, ஆணிகள் என்பவை கவரப்படுவதை உணர்த்தலாம்.

இவை எளிய பிரிசோதனையாகவும் அவதானிப்பாகவும் இருந்த போதும் அவனை அறியாமலே கடினமான பல வினாக்களை அவனிடையே ஏற்படுத்தும். அதன்போது ஏன் அவ்வாறு நடைபெற்றது என்ற வினாவை அவன் முன்வைக்கக்கூடும்.

அதன்போது குழப்பமடையாமல் நானும் ஏன் அப்படி நடைபெற்றது என்று தான் சிந்திக்கின்றேன் எனக் கூறுதல் வேண்டும்.

விஞ்ஞானம் கற்கும் போது அவதானத்துடன் இருக்க வேண்டியது காலத்தின் போதையாகும்.

காந்தத்தை மையப்படுத்தி இதனால் எல்லாப் பொருட்களையும் கவர முடியுமா என்ற சிறு வினாக்களை வினாவலாம். இதற்காக சில உலோகமல்லாத பொருட்கள் இறப்பர், பிளாஸ்ரிக்கிலான பொருட்கள் என்பவற்றை வழங்கலாம். இதைவிட மின்கலங்கள், மின்குமிழ், மின் கடத்தி என்பவற்றை வழங்கி மின் குமிழை ஒளிரச் செய்யும் முறை பற்றியும் மின் ஆழிகளூடாக ஒளிரச் செய்யும் வகை என்பவற்றை நேரடி அனுபவத்தினூடாக ஏற்படுத்தலாம். இதனூடாக பௌதீகம், இரசாயனம் என்பவற்றைக் கற்பதில் ஆர்வத்தை ஏற்படுத்தலாம்.

விளையாட்டு தராசில், சுற்றாடலில் பாவிக்கமுடியாத பொருட்களில் வாத்தியக் கருவிகள் தயாரித்தல். இது போன்ற திட்டமிட்ட வகையிலான இன்னும் பல செயற்பாடுகள் மேற்கொள்ளும் போது அவை ஆரம்பமானவர்களிடையே விஞ்ஞானக் கற்றலில் ஆர்வத்தை ஏற்படுத்தும்.

மாணவர்களை செயன்முறை வேலையில் ஈடுபடுத்தும் போது தொட்டுணரக் கூடியதிலிருந்தும் மகிழ்ச்சிகரமானதிலிருந்தும் செயற் பட வைத்தல் வேண்டும்.

அதன்போது புலனுறுப்புகளின் பங்களிப்பு தேவையானது. இதற்காக உபயோகிக்கும் பொருட்கள் இறப்பர் நாடா, பிளாஸ்ரிக் பொருட்கள் சார்ந்த சாதாரண பொருட்களாயின் பரிசோதனைகளை அவர்கள் வீட்டிலும் செய்து பார்க்கமுடியும்.

அளந்து பார்ப்பதற்கும் கணக்கிட்டு பார்ப்பதற்கும் சந்தர்ப்பம் வழங்கவும் ஒன்று நடைபெறும் விதத்தை பிழையின்றி விபரிக்கும் ஆற்றலைப் பெறுவதற்கும் இப்பண்பு முக்கியமானதாகும். ஒருவர் தோல்வியின் மூலம் கற்றுக் கொள்கிறார் என்பதையும் வாழ்க்கையில் ஆரம்பக் கட்டங்களில் கற்றுக் கொள்பவை ஒருவரது மனதில் நெடுநாள் நிலவும் என்பதையும் எடுத்துரைத்தல் மிகவும் முக்கியமானதாகும்.

மு.விக்னேஸ்வரன்
(அதிபர்)
யா/உரும்பிராய் சைவத் தமிழ் வித்தியாலயம்.

கல்வித் தரிசனம் பகுதிக்கு
துறைசார்ந்தவர்களிடமிருந்து
தரமான ஆக்கங்கள்
கோரப்படுகின்றன.
அனுப்ப வேண்டிய முகவரி:-
வலம்புரி
கல்வித் தரிசனம்
இல.3,2 ஆம் ஒழுங்கை,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
(ஆ-ர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அகாசி வருகையின் மர்மங்கள்!

இலங்கைக்கான புனர்வாழ்வு, புனரமைப்பு, அமைதியைக் கட்டியெழுப்புவதற்கான- ஜப்பானிய அரசின் சிறப்புத் தூதுவர் யசூசி அகாசி அண்மையில் தனது 23 ஆவது இலங்கைப் பயணத்தை மேற்கொண்டிருந்தார்.

விடுதலைப்புலிகளுக்கும், ரணில் விக்கிரமசிங்க அரசாங்கத்துக்கும் இடையில், நோர்வேயின் ஏற்பாட்டில் சமாதானப் பேச்சுக்கள் முன்னெடுக்கப்பட்டுக் கொண்டிருந்த 2002 ஆம் ஆண்டு காலப்பகுதியில்தான், அகாசி முதன்முறையாக இலங்கை மக்களுக்கு அறிமுகமானார்.

அதற்கு முன்னர், ஐ.நா.வில் உயர் பதவியை வகித்து வந்த ஜப்பானிய மூத்த இராஜதந்திரியான அகாசி, ஆரம்பத்தில் இலங்கைக்கான ஜப்பானின் சிறப்பு சமாதானத் தூதுவராகவே நியமிக்கப்பட்டார்.

அவர் முதன் முதலாக விடுதலைப் புலிகளைச் சந்திக்க கிளிநொச்சிக்குச் சென்றபோது, விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரனே நேரில் சந்தித்துப்பேசி அவருக்கு புலிச் சின்னம் பதித்த நினைவுப் பரிசு ஒன்றையும் வழங்கினார்.

அந்தக் காலகட்டத்தில், விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன், தெரிவு செய்யப்பட்ட ஒரு சில வெளிநாட்டுப் பிரமுகர்களை மட்டும் சந்தித்திருந்தார். அவர்களுக்குள் அகாசிக்கு விடுதலைப் புலிகள் கூடிய முக்கியத்துவத்தை அளித்தனர்.

ஆனால், காலப்போக்கில் அகாசியும் அடிக்கடி இலங்கைக்கு வரத் தொடங்கினார்.

நித்தம் போனால் முற்றம் சலிக்கும் என்பதுபோல அவரது சமாதான முயற்சிகளிலும் சலிப்புகள் தோன்றத் தொடங்கின.

இதனால், ஒருகட்டத்தில் அகாசியின் வருகையில் விடுதலைப் புலிகளும் ஊடகங்களும் இலங்கை மக்களும் அக்கறை காட்டுவதைக் குறைத்துக் கொள்ளத் தொடங்கினர்.

அவ்வப்போது அவர் வருவதும், அரசதரப்புடனும் பிறதரப்புகளுடனும் பேச்சு நடத்துவதும் அவரது வழக்கமாயிற்று.

ஆனால், அகாசிக்கான முக்கியத்துவத்தை, அரசதரப்பு மட்டும் குறைத்துக் கொள்ளவில்லை.

விடுதலைப்புலிகள் தோற்கடிக்கப்பட்ட பின்னர், இலங்கைக்கான சமாதானத் தூதுவர் என்ற அடைமொழி அகாசிக்குத் தேவைப்படவில்லை.

அதற்கு முன்னர், அந்த அடைமொழியை வைத்துக்கொண்டு அவர் எதையும் சாதித்திருக்கவும் இல்லை.

போர் முடிவுக்கு வந்த பின்னர், இலங்கைக்கான புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் அமைதியைக் கட்டியெழுப்புவதற்கான தூதுவர் என்ற அடைமொழி அவருக்கு கொடுக்கப்பட்டது.

போர் முடிவுக்கு வந்த பின்னரும் அவ்வப்போது,. இலங்கைக்கு வந்து போகும் அகாசியை தமிழ் மக்கள் பெரிதாக கணக்கில் எடுப்பதேயில்லை. ஏனென்றால், தாம் எதிர்பார்க்கும் எதையும் தரத்தக்கவராக அகாசி இல்லை என்ற உண்மை அவர்களுக்குப் புரிந்துவிட்டது.

அமெரிக்க, இந்திய இராஜதந்திரிகளின் பயணத்துக்கு தமிழர்கள் கொடுக்கின்ற முக்கியத்துவத்தை, அகாசிக்கு அவர்கள் கொடுப்பதேயில்லை.

போரினால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் புனர்வாழ்வுக்காகவும், புனரமைப்புக்காகவும் ஜப்பான் குறிப்பிட்டளவு நிதியுதவிகளை செய்திருப்பினும், அகாசி அத்தகைய நிதியுதவிப் பொதியுடன் வருவதாக இருந்தாலும் கூட, அவருக்கு அந்த மதிப்புக் கிடைப்பது என்பது சாத்தியமற்றது.

ஏனென்றால், சர்வதேச சமூகத்திடம் இருந்து தமிழர்கள் எதிர்பார்ப்பது நிவாரணத்தையோ, நிதியுதவியையோ அல்ல.

அவற்றுக்கும் மேலாக தமது உரிமைகளை உறுதிப்படுத்துவது, அரசியல் தீர்வுக்கு வலியுறுத்துவது, போர்க்குற்றங்களுக்கு பதிலளிப்பது என்பன போன்ற விவகாரங்களிலேயே சர்வதேச சமூகத்தின் ஆதரவையும் ஒத்துழைப்பையும் உதவியையும் தமிழர்கள் எதிர்பார்க்கின்றனர்.

அதனால்தான், அமெரிக்காவின் இராஜதந்திரிகளுக்கோ, ஏனைய மேற்குலக இராஜதந்திரிகளுக்கோ தமிழர்களிடம் கிடைக்கின்ற வரவேற்பும், ஆதரவும் அகாசி போன்ற ஜப்பானிய இராஜதந்திரிகளுக்குக் கிடைப்பதில்லை.

இப்போதும்கூட அகாசி மேற்கொண்ட பயணத்துக்கு தமிழர் தரப்பு அவ்வளவு பெரிய முக்கியத்துவத்தை கொடுத்திருக்கவில்லை.

கடந்த 11 ஆண்டுகளில், அகாசி இலங்கைக்கு 23 தடவைகள் வந்து சென்றிருக்கிறார்.

ஆனாலும், மஹிந்த ராஜபக்ச அரசாங்கம் பதவிக்கு வந்த பின்னர், கொழும்பு வரும்போதெல்லாம் அகாசிக்காக அலரிமாளிகையின் கதவுகள் எப்போதும் அகலத் திறந்தேயிருக்கும்.

இம்முறையும் அப்படித்தான். கடந்த 8 ஆம் திகதி மாலை கொழும்புக்கு வந்த அவர், மறுநாள் காலையிலேயே அலரிமாளிகைக்குச் சென்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவை சந்தித்துப் பேசினார்.

அமெரிக்க, இந்திய இராஜதந்திரிகளுடன், அகாசி போன்றவர்கள் இந்த விடயத்திலும்கூட முரண்படுகின்றனர்.

அதாவது, அமெரிக்க, இந்திய இராஜதந்திரிகள், அமைச்சர்கள் இலங்கைக்கு வரும்போது, முதலில் களநிலவரங்களை அறிந்து கொள்வதற்கே முக்கியத்துவம் அளிப்பதுண்டு.

நீண்டபயணம் என்றால், யாழ்ப்பாணம், கிழக்கு போன்ற பகுதிகளுக்கு செல்வதும், சிவில் அமைப்பு பிரதிநிதிகள், அரச அதிகாரிகளை சந்திப்பதும், அவர்களின் முக்கிய இலக்காக இருக்கும்.

அடுத்த, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உள்ளிட்ட எதிர்க்கட்சிகளின் கருத்துக்களை கேட்டறிந்துவிட்டு, கடைசியாக அலரிமாளிகையில் காலடி எடுத்து வைப்பர்.

அது பிரச்சினைகள், களநிலவரங்கள் குறித்து ஜனாதிபதியிடம் கேள்வி எழுப்புவதற்கான வாய்ப்பை அவர்களுக்கு ஏற்படுத்திக் கொடுக்கும்.

ஆனால், அகாசி அப்படியல்ல. அவர் முதலில், ஜனாதிபதியையும் மற்றும் அமைச்சர்களையும் சந்திப்பார். அரசதரப்பின் விளக்கங்களை கேட்டறிந்து கொண்ட பின்னரே, ஏனைய தரப்பினரைச் சந்திப்பார்.



அவர்கள் கூறும் குறைநிறைகளைப் பற்றியெல்லாம், அரசாங்கத்தின் கவனத்துக்குக் கொண்டு செல்வதாக கூறிவிட்டு அப்படியே விமானமேறிச் சென்றுவிடுவார். அதுதான் அகாசியின் அண்மைக்காலப் பயண வழக்கங்கள்.

இந்தமுறை அதாவது 23 ஆவது தடவை மேற்கொள்ளப்பட்ட அவரது பயணமும் அந்த விதமாகவே அமைந்திருந்தது.

அவர் தனது பயணத்தின் இறுதிக் கட்டத்தில், கொழும்பில் வைத்து கடந்த 10 ஆம் திகதி இரவு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களைச் சந்தித்துப் பேசியிருந்தார்.

ஆனால், இந்தமுறை அவர் வட பகுதிக்குச் செல்லவில்லை.

அண்மைக்காலத்தில், அதாவது கடந்த செப்டெம்பர் மாதம் வடக்கு மாகாணசபைத் தேர்தலுக்குப் பின்னர், இலங்கைக்குப் பயணம் மேற்கொண்ட வெளிநாட்டுத் தலைவர்கள், இராஜதந்திரிகள் யாழ்ப்பாணம் செல்வதை முக்கியமான திட்டமாக கொண்டிருந்தனர்.

அதாவது, வடக்கு மாகாணத்தின் புதிய முதலமைச்சரை சந்தித்துப் பேசுவதற்காக பிரித்தானியப் பிரதமர் டேவிட் கெமரூன் உள்ளிட்ட பலரும் யாழ்ப்பாணம் சென்றனர்.

ஆனால், தமிழர் பிரச்சினைக்கு அமைதித் தீர்வு காண்பதற்கான முயற்சியில் ஈடுபட்டு அகாசி மட்டும் வடக்கு மாகாண முதலமைச்சரைச் சந்திக்க முனையவில்லை.

அதேவேளை, கொழும்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் அகாசி நடத்திய சந்திப்பில் வடக்கு மாகாண முதல்வர் விக்னேஸ்வரன் பங்கேற்கவில்லை.

வடக்கு மாகாணசபையின் வரவு-செலவுத் திட்டத்தை அவர் சமர்ப்பித்து அது தொடர்பான விவாதத்தில் பங்கேற்க வேண்டிய தேவை இருந்ததால் அவரால் கொழும்பு வரமுடியவில்லை.

ஆனாலும், விக்னேஸ்வரனை சந்தித்து புதிய மாகாணசபை நிர்வாகம் குறித்து, அறிந்து கொள்ளும் ஆவல், ஒரு பழுத்த இராஜதந்திரியாக கருதப்படும் அகாசிக்கு இல்லாமல் போனது ஆச்சரியமே.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடனான சந்திப்பின்போது, எல்லா விபரங்களையும் கேட்டவிட்டு, பொறுமையுடன் இருக்குமாறு ஆலோசனை கூறியிருந்தமை, இரா.சம்பந்தனுக்கு சினத்தை ஏற்படுத்தியதால்தான், அவரது 23 ஆவது தடவை என்ன நிலை இருக்கிறதோ, அதே நிலைதான் 24 ஆவது தடவை அவர் இங்கு வரும்போதும் இருக்கும் என்று பதிலடி கொடுக்கும் நிலையை உருவாக்கியது.

சர்வதேச சமூகம், அடுத்து மார்ச் மாதம் நடக்கவுள்ள ஐ.நா மனித உரிமைகள் பேரவைக் கூட்டத் தொடரில் அடுத்தகட்ட நகர்வுக்குத் தயாராகும் சூழலில்தான் அகாசியின் இந்த பயணம் இடம்பெற்றது.

சர்வதேச சமூகத்தின் கரிசனைகளை அரசாங்கம் கவனத்தில் கொள்ளவேண்டும் என்று அகாசி கூறியிருந்தாலும், அவரது பயணம், அடுத்த ஜெனீவா கூட்டத் தொடரில் இலங்கைக்கு எதிரான நகர்வுகளைப் பலவீனப்படுத்தும் ஒரு முயற்சியாகவே கருதப்படுகிறது.

அதாவது, அரசாங்கத்தின் ஒரு தடைநீக்கியாக இப்போது அகாசி மாறியிருக்கிறார். மேற்குலக அழுத்தங்களுக்கு உள்ளாகிவரும் இலங்கை, அதிலிருந்து விடுபடுவதற்கான தனது பலமுனை நகர்வுகளில் ஒன்றாகவே அகாசியையும் களமிறக்கியுள்ளது.

வரும் மார்ச் மாத ஜெனீவா கூட்டத் தொடரை எதிர்கொள்வதில் அகாசியின் பங்கு எத்தகையதாக இருக்கப் போகிறது? அவரால் அரசாங்கத்தை காப்பாற்ற முடியுமா? என்பதை பொறுத்திருந்து பார்க்கலாம்.

-கே.சஞ்சயன்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்கள் குழந்தைகளுக்காக கனவு காண்பவரா நீங்கள்?



ஆன்மீகம் 71



...சத்குரு: சொல்லமுடியாது. உங்கள் வகுப்பில் இருக்கும் அந்த 50 சதவிகிதக் குழந்தைகள் மேதைகளாகக்கூட இருக்கலாம். அது உங்களுக்குப் புலப்படாமல் இருக்கலாம்.

நீங்கள் சொல்லித்தரும் A+B = C' I அவனால் ஏற்க முடியவில்லை. அவனுக்கு அது புரியவில்லை. அவனைப் பொருத்தவரை அதில் எந்த அர்த்தமுமில்லை. எதனால் A வையும் B யையும் கூட்டினால், C' I வர வேண்டும்? வேறு யாரோ ஒருவர் அப்படித்தான் சொன்னார்கள் என்பதாலா? இந்தக் கட்டமைப்புக்குள் அவனால் சிந்திக்க முடியாமல் இருக்கலாம். ஆனால் அவன் மூளையில் என்னென்ன நிகழ்ந்து கொண்டிருக்கிறது என்பது உங்களுக்குத் தெரியாது.

அவனால் என்னவெல்லாம் புரிந்து கொள்ள முடிகிறது என்பதை நீங்கள் அறிய மாட்டீர்கள். அவனால் எதைப் புரிந்துகொள்ள முடியவில்லையோ, அதற்கு அவன் இன்று கூனிக் குறுகிப் போகுமாறு நீங்கள் செய்து விட்டால், அவனால் எதையெல்லாம் புரிந்து கொள்ள முடிந்ததோ அதைப் பற்றி எல்லாம் அவன் வாயே திறக்காமல் இருந்து விடுவான். இதனால் உங்களுக்கு எவ்வளவு பெரிய இழப்பு ஏற்படலாம் என்று நீங்கள் அறிய மாட்டீர்கள். இவ்வளவு ஏன், இதுவரை யாருமே உணர்ந்திடாத தவற்றைகூட அவன் இக்கணத்தில் உணர்ந்து கொண்டிருக்கக்கூடும்.

**கல்வியால் சாதிப்பதை விட, மனிதனின் புத்திக்கூர்மையால் மிக அதிகமாகவே சாதிக்க முடியும். அதனால் கல்வியே வேண்டாமா? அப்படியல்ல. இங்கு முக்கியத் தேவை, மனிதனின் உடலும் மனமும் அதன் முழு திறனுக்கு ஏற்ப வளர்ச்சியடைய வேண்டும், அத்துடன் சேர்த்து அவற்றை சாதுர்யமாகப் பயன்படுத்தத் தேவையான சமயோசிதமும் வேண்டும்.**


என்ன காரணத்திற்காக? எந்தப் பயனை அடை வதற்காக? குறிப்பிட்ட எந்தப் பலனிற்காகவும் அல்ல. மனிதர்கள் விவேகத்துடன் இருந்தாலே, வாழ்ந்தாலே போதுமானது.

**வாழ்க்கையின் நோக்கம் வாழ்தல் மட்டுமே. வாழ்க்கையை அதன் எல்லாப் பரிமாணத்திலும் உணர்வதுதான முழுமையான வாழ்க்கை.** இது நிகழ வேண்டுமென்றால், ஆசிரியர்களோ, பாதிரியார்களோ, பூசாரிகளோ, அல்லது அவர்கள் எடுத்துரைக்கும் புனித நூல்களோ சொல்லும் கொள்கைக் கோட்பாடுகளை நம்புபவர்களாக இல்லாமல் நாம் பிரபஞ்சத்து உண்மையை நாடுபவராக இருக்க வேண்டும். **(தொடரும்)**

**சத்குரு ஜக்கி வாசுதேவ்**

# "ஜெயலலிதாபோல், கலைஞர் சர்வாதிகாரியாக இருக்கவேண்டும்" -ஸ்டாலின்-

**கா**ங்கிரசுடன் கூட்டணி இல்லை" என்று திட்டவட்டமாக திராவிட முன்னேற்றக் கழக பொதுக்குழு கூட்டத்தில் பேசிய அக கட்சி தலைவர் கலைஞர் கருணாநிதி அறிவித்துள்ளார். அதே நேரத்தில் பா.ஜ.க.வுடன் "கூட்டணி வைக்க முடியாது" என்று கூறியிருக்கிறார். டிசெம்பர் 15ஆம் திகதி காலையிலேயே தி.மு.க. தலைமைக் கழகம் இருக்கும் அலுவலகமான அண்ணா அறிவாலயம் களை கட்டியது. ஏன் அதற்கு முதல்நாள் தி.மு.க. தலைவர் எழுதிய



"நெஞ்சுக்கு நீதி" புத்தகத்தின் ஆறாவது பாகம் வெளியீட்டு விழா நடைபெற்றது. அப்போதே தமிழகத்தின் பல பகுதிகளில் இருந்தும் தி.மு.க. நிர்வாகிகள் வந்து விட்டார்கள். அதனால் முதல் நாளே களை கட்டிவிட்டது என்றே சொல்ல வேண்டும்.

தி.மு.க. பொதுக்குழுவில் மொத்தம் 23 தீர்மானங்கள் கொண்டு வந்து நிறைவேற்றப்பட்டன. அவற்றுள் ஆறு தீர்மானங்கள் மட்டுமே காங்கிரஸ் தலைமையிலான மத்திய அரசுக்கு கோரிக்கை வைக்கும் தீர்மானங்கள். மீதி அனைத்தும் அ.தி.மு.க. அரசின் மீது குற்றம்சாட்டி கொண்டு வரப்பட்ட தீர்மானங்கள். அதிலும் ஒரே யொரு தீர்மானத்தில், அதாவது விலைவாசி உயர்வு பற்றிய தீர்மானத்தில் மத்திய அரசை கண்டனம் செய்து வாசகங்கள் இடம்பெற்றன. இதில் இலங்கை தமிழர் பற்றிய தீர்மானம் 22ஆக இடம்பெற்றது. அதில், "இலங்கையில் வடக்கு மாகாணத் தேர்தல் முடிந்து முதலமைச்சர் விக்னேஸ்வரன் தலைமையில் மாகாணக் கவுன்சில் அமைந்துள்ளது. இலங்கை அரசியல் அமைப்புச் சட்டத்தின் கீழ் 13ஆவது திருத்தத்தின்படி பல அதிகாரங்கள் தமிழர்களுக்கு வழங்கப்படும் என்பது ஏட்டுச் சுரைக்காயகவே இருந்து வருகிறது. 13ஆவது சட்ட திருத்தத்தின்படி நில நிர்வாகம் உள்துறை அமைச்சகத்தின் கீழ் உள்ள காவல்துறை நிர்வாகம் அனைத்தும் இலங்கை அரசின் கையில் உள்ளது. மாகாணக் கவுன்சிலை கூட்டுவதும், கலைப்பதும் இலங்கை அரசின் மாகாண ஆளுநரின் கையில் உள்ளது." என்று வடக்கு மாகாணக் கவுன்சிலுக்கு இருக்கும் சங்கடங்களை பட்டியலிட்டுவிட்டு, "நிரந்தரமான அரசியல் தீர்வு கிடைக்க பொது வாக்கெடுப்பு, தமிழினப் படுகொலை, போர் குற்றங்கள், மனித உரிமை மீறல்கள் குறித்து நம்பகமான, சுதந்திரமான சர்வதேச விசாரணை நடத்த மத்திய அரசு ஐ.நா. மனித உரிமைகள் ஆணையத்தில் தீர்மானம் கொண்டுவர வேண்டும்" என்று தி.மு.க. பொதுக்குழுவில் வலியுறுத்தி தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இதுதவிர, நாடாளுமன்ற தேர்தல் நேரம் என்பதால் வருகின்ற நாடாளுமன்றத் தேர்தலில் கூட்டணியை எப்படி வைப்பது, அதற்கான வியூகம் என்ன என்பதில்தான் அதிக கவனம் இந்த பொதுக்குழுவில் செலுத்தப்பட்டது. சுமார் 2200க்கும் மேற்பட்ட பொதுக்குழு உறுப்பினர்கள் வந்திருந்தார்கள். அக்குழுவில் பேசிய அனைவருமே "காங்கிரஸ் எதிர்ப்பில்" தீவிரமாக இருந்தார்கள். இதற்கு முன்னோடியாகத் திகழ்ந்தவர் திருச்சி சிவா. இவர் முன்னாள் ராஜ்ய சபை எம்.பி. அவர், "காங்கிரசுக்கு நாம் விசுவாசமாக இருந்தோம். அந்த விசுவாசத்திற்கு கொடுக்கப்பட்ட பெரிய விலை என்ன தெரியுமா? நம் கட்சி அமைச்சர் ராஜாவை வீண் பழி சுமத்தி (2ஜி அலைக்கற்றை விவகாரத்தில்) சிறையில் தள்ளினார்கள். தலைவரின் மகளை (கனிமொழி) சிறையில் அடைத்தார்கள். இலங்கையில் தமிழர்களுக்கு எதிரான போர் நடைபெற்ற போது அந்த போரை நிறுத்தச் சொல்லி தலைவர் கலைஞர் உண்ணா விரதம் இருந்தார். உடனே "போர் நிறுத்தம் செய்யப்பட்டுவிட்டது" என்று பொய் சொல்லி தலைவரை ஏமாற்றினார்கள். காங்கிரசுடன் கூட்டணி வைக்கவே கூடாது. அப்படியென்றால் பா.ஜ.க.வுடன் கூட்டணி வைக்கலாம் என்றே சிலர் இங்கே பேசினார்கள். அதிலும் கூட்டணி வைக்கலாம். மந்திரி சபையில் சேரக்கூடாது என்றெல்லாம் பேசினார்கள். கூட்டணி வைத்தால் என்ன? மந்திரி சபையில் சேர்ந்தால் என்ன? எல்லாம் ஒன்றுதான். ஆகவே பா.ஜ.க.வுடனும் கூட்டணி வேண்டாம்" என்று பொதுக்குழுவில் காரசாரமாகப் பேசினார் சிவா.

இக்கூட்டத்தில் பேசிய முன்னாள் மத்திய அமைச்சர் டி.ஆர்.பாலு, "நான் சமீபத்தில் ராகுல் காந்தியை நாடாளுமான்ற வளாகத்தில் சந்தித்தேன். அவரிடம் நான் ஒரு கேள்வியைக் கேட்டேன். "நீங்கள் நான்கு முறை சென்னைக்கு வந்தீர்கள். ஒருமுறையாவது தலைவரை (கலைஞர் கருணாநிதி) சந்தித்தீர்களா? அவர் ஒரு கூட்டணித் தலைவர். சென்னைக்கு வந்துவிட்டு பார்க்காமல் திரும்பிச் செல்கிறீர்கள். இது என்ன கூட்டணி தர்மம்? என்று கேள்வி எழுப்பினேன். அவர் பதில் சொல்லாமல் அப்படியே அமைதியாக இருந்தார். நானும் விடவில்லை. "என் கேள்விக்கு என்ன பதில்?" என்று கேட்டேன். அப்போது அவர் மௌனம் கலைத்தார். "ஐ ஆம் ஸாரி" என்று கூறி விட்டு தலையை குனிந்து கொண்டார். இதுதான் காங்கிரஸ் கட்சி. அப்படியா பா.ஜ.க இருந்தது. அக்கட்சியுடன் கூட்டணியாக இருந்தோம். அப்போது நம் முரசொலி மாறன் இறந்துவிட்டார். சுடுகாட்டிற்கே வந்த பிரதமர் வாஜ்பாய்" என்று கூறி வாஜ்பாயைப் பாராட்டினார். இவரும் காங்கிரசுடன் கூட்டணி வைக்கக்கூடாது என்பதில் குறியாக இருந்தார். ஆனால் சமாதானமாக சில வார்த்தைகளைக் கூறினார்.

இன்னொரு மாவட்டச் செயலாளர் தி.நகர அன்பழகன் பேசியபோது, "நாம் காங்கிரசுடன் கூட்டணி வைக்க வேண்டாம். பத்திரிகைககளில் பா.ஜ.க.வுடன் நாம் கூட்டணி என்று பேச்சு வருகிறது. செய்திகள் எழுதுகிறார்கள். அவர்களுடன் கூட்டணி வையுங்கள். வேண்டாமென்று சொல்லவில்லை. ஆனால் டெல்லியில் மந்திரி சபையில் சேராதீர்கள். ஏனென்றால் மந்திரி சபையில் சேர்ந்தால் அந்த மந்திரிகளால் கட்சிக்கு எந்த பிரயோஜனமும் இல்லை. கட்சியின் பெயர்தான் கெடுகிறது. இன்னும் சொல்லப் போனால் மத்தியில் அமைச்சராகச் சேர்ந்ததற்காக இங்கே மாநிலத்தில் ஆட்சியை இழந்தோம். ஆகவே பா.ஜ.க.வுடன் கூட்டணி வைத்தால் கூட நாம் அக்கட்சியினர் அமைக்கும் அமைச்சரவையில் சேரக் கூடாது" என்று புதிய வியூகத்தை வெளியிட்டார் பொதுக்குழுவில்.

துறைமுகம் காஜா. இவர் தி.மு.க. தலைமை கழகத்தில் கலைஞர் கருணாநிதியுடனேயே இருப்பவர். அவர் பொதுக்குழுவில் பேசும்போது, "நாம் காங்கிரசுடன் கூட்டணி வைக்கக் கூடாது. அதேபோல் பா.ஜ.க.வுடனும் சேரக்கூடாது. இன்று நரேந்திரமோடி, நரேந்திரமோடி என்று பேசுகிறார்கள். அவருக்கு செல்வாக்கு இல்லை. அதாவது மக்கள் செல்வாக்கு இல்லை. பத்திரிகைகளும், பெரும் வர்த்தக நிறுவனங்களும் அவருக்கு பெரிய செல்வாக்கு இருப்பது போல் சித்தரித்துக் காட்டுகின்றன. அவ்வளவுதான். காங்கிரஸ் விஷம் என்றால் பா.ஜ.க. கொடிய விஷம்" என்று இரு கட்சிகளையும் கண்ணை மூடிக் கொண்டு பொதுக்குழுவில் சாடினார். இந்த சாடலுக்கு கைதட்டல் இருந்தது. காங்கிரசுடன் கூட்டணி வேண்டாம் என்பதற்கு பலத்த கைதட்டல். பா.ஜ.க.வுடன் கூட்டணி வேண்டாம் என்று அவர் கூறியதற்கு சுமாரான கைதட்டல்!

தி.மு.க. பொருளாளர் மு.க.ஸ்டாலினின் உரைதான் சற்று வித்தியாசமாக இருந்தது. அவர் பேசும்போது, "ஏற்காடு இடைத் தேர்தலில் அ.தி.மு.க.வுக்கு நாம் தண்ணி காட்டி விட்டோம். அவர்கள் வெற்றி பெற்றிருக்கலாம். ஆனால் நாமும் 65000 வாக்குகள் வாங்கியிருக்கிறோம்...

**-எம்.காசிநாதன்-** **(தொடரும்)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரதமர் மீதான குற்றச்சாட்டு குறித்து எதனையும் கூறமுடியாது

## அமைச்சர் ரம்புக்வெல தெரிவிப்பு

(கொழும்பு)

பிரதமர் டி.எம்.ஜயரத்ன தொடர பில் ஏற் பட்டுள்ள கருத்துவாதங்கள் தொடர்பில் தன்னால் எதனையும் கூறமுடியாது என ஊடகம் மற்றும் தகவல்துறை அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

ஹெரோயின் அடங்கிய கொள் கலனை சுங்க திணைக்களத்தின் பிடியில் இருந்து விடுவிக்குமாறு பிரதமரின் இணைப்புச் செயலாளர் எழுதியிருந்த கடிதம் தொடர்பில் கருத்துரைக்கும் போதே அவர் இதனை கூறினார்.

இந்த விடயம் தொடர்பில் என்னால் எதனையும் கூறமுடியாது. இது குறித்து தற்பொழுது விசாரணைகள் நடைபெற்று வருகின்றன.

அரசாங்கம் என்ற வகையில் அரசாங்கத்தில் உள்ள அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் தொடர்பில் அவதானத்துடன் இருந்து வருகிறது.

எவர் மீதாவது குற்றச்சாட்டு சுமத்தப்பட்டால் அது குறித்து சுயாதீனமான விசாரணைகளை நடத்தி தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றார். (அ-2)

# நமது நாடு சுகாதார துறையில் முன்னணி வகிக்கிறது-ஜனாதிபதி

(கொழும்பு)

இலவச மருத்துவத்துறையில் பொற்கால யுகத்தை ஏற்படுத்தியுள்ளதுடன் சிறந்த சுகாதார சேவையை வழங்குவதில் ஆசியாவிலேயே முன்னணி நாடாக இலங்கை விளங்குகிறது என ஜனாதிபதி, மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

சுகாதாரத்துறையில் தாதியர் மற்றும் ஏனைய பிரிவுகளுக்கு 10ஆயிரத்து 400 பேருக்கு நியமனம் வழங்கும் வைபவம் நேற்று முன்தினம் கொழும்பு சுகததாச விளையாட்டரங்கில் நடைபெற்றது. இந் நிகழ்வில் உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார் . அவர் அங்கு கூறுகையில், தற்போது தனியார் வைத்திய சாலைகளைவிட வசதிகள் கொண்டதாக அரசாங்க வைத்தியசாலைகள் உள்ளன.

சுகாதார சேவையை அபிவிருத்தி செய்து பாதுகாப்பதில் அரசாங்கம் அதிக கவனத்தை செலுத்தி வருகிறது. அரச தாதியர் சேவையில் தற்போது 36 ஆயிரம் பேர் பணிபுரிகின்றனர்.

நாம் ஆட்சிப் பொறுப்பேற்ற 2005 ஆம் ஆண்டில் 14 ஆயிரமாகவிருந்த தாதியர் எண்ணிக்கையை ஏழு வருடங்களில் இரண்டு மடங்காக உயர்த்தியுள்ளோம்.

உலகில் எந்த மதத்தை எடுத்துக்கொண்டாலும் அத்தனை மதங்களும் நோயாளிகளுக்கு உதவுவதை ஒரு பெரும் புண்ணியமாகவே போதிக்கின்றன.

இதனை உயர்வாகவும் போற்றுகின்றன. இந்த சேவையை நேர்மையாகவும் அர்ப்பணிப்புடனும் மேற்கொள்ளும்போது நாட்டிற்கு மட்டுமன்றி மனதிற்கும் பாரிய திருப்தியளிக்கிறது.

தற்போது நாம் தெற்காசியாவில் மட்டுமன்றி முழு ஆசியாவிலுமே சுகாதார சேவையில் முன்னணியில் திகழ்கிறோம்.

இத்துறையிலுள்ளவர்களின் அர்ப்பணிப்பான சேவையே இதற்குக் காரணமாக அமைந்துள்ளது.

எமது நாட்டில் குழந்தை பிறப்பு மரணம் வெகுவாகக் குறைந்துள்ளது. மனிதனின் ஆயுட்காலம் அதிகரித்து வருகிறது. பெண்களின் ஆயுட்காலம் 79 ஆகவும் ஆண்களின் ஆயுட்காலம் 71 ஆகவும் தற்போது உள்ளதைக் குறிப்பிடமுடியும்.

இலவச மருத்துவ சேவையை நாம் பாதுகாத்து அதனை மேம்படுத்துவதில் மேற்கொண்ட நடவடிக்கைகளே இந்த வெற்றிக்கு காரணமாகியது.

மருத்துவம் எமக்கு புதிதல்ல. புதிதாக கற்றுக்கொள்ளவும் எதுவுமில்லை. கடந்த காலம் தொட்டே நாம் மருத்துவத்துறையில் சிறந்த அனுபவங்களைப் பெற்று செயற்பட்டு வருகிறோம். கருணை, பிறருக்கு உதவுதல் எமக்கு பிறப்பிலேயே கிடைத்தவை.


எமது உயர்ந்த மருத்துவ சேவை மூலம் நாட்டிலிருந்து போலியோ, லைசூரி போன்ற நோய்களை இல்லாதொழிக்க முடிந்துள்ளது. தற்போது டெங்கு நோயையும் நாம் கட்டுப்படுத்தி வருகின்றோம் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.(அ-2)

# கார்பந்தயத்திற்கு எதிராக முறையிடப்படும்-ஐ.தே.க.

கொழும்பு நடத்தப்பட்ட இரவு நேர கார் பந்தயம் சட்டவிரோதமானது.

எனவே இது தொடர்பில் இலஞ்ச ஊழல்களுக்கு எதிரான ஆணைக் குழுவில் முறையிடப்போவதாக ஐக்கிய தேசியக் கட்சியின் கொழும்பு மாநகர சபை உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் தெரிவித்துள்ளார்.

இந்தக் கார் பந்தயத்துக்கான அனும்திச்சீட்டு விற்பனைக்கு கொழும்பு மாநகரசபை அனுமதியளிக்க வில்லை. எனினும் அனுமதிச் சீட்டுக்கள் விநி யோகிக்கப்பட்டுள்ளன. இது தர்மப் பணி என்ற வகைக்குள் வரவில்லை. எனவே, இதற்கு அனுமதி சீட்டு வரியை அறவிடாமல் இருக்கமுடியாது. இரவுநேர கார் பந்தயம் சட்டவிரோத செயல் என்ற அடிப்படையில் இலஞ்ச ஊழல் ஆணைக் குழுவில் முறையிடப்படும் என்றார். (அ-2)



ஆனைக்கோட்டை மூத்த நயினார் கோயிலில் திருவெம்பாவையின் 9ஆவது நாளான நேற்று முன்தினம் தேர்திருவிழா நடைபெற்ற போது....

# ஹோட்டல்களில் சுவையூட்டி மாதிரிகளை சோதிக்க உத்தரவு

(கொழும்பு)

சீன சிற்றுண்டிச்சாலைகளிலும் ஹோட்டல்களிலும் சமைப்பதற்கு பயன்படுத்தப்படும் சுவையூட்டிகளின் மாதிரிகளைப் பெற்று அவற்றைப் பரிசோதிக்குமாறு கூட்டுறவு, உள்நாட்டு வர்த்தக அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ நுகர்வோர் அதிகார சபையின் தலைவருக்கு உத்தரவிட்டுள்ளார்.

இந்த சிற்றுண்டிச்சாலைகளிலும் ஹோட்டல்களிலும் அத்தாட்சிப்படுத்தப்பட்ட சுவையூட்டிகளுக்குப் பதிலாக மோசமான தரம் குறைந்த சுவையூட்டிகள் உணவு சமைப்பதற்காக பயன்பாடுத்தப்படுவதாகவும் பல முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

சுவையூட்டிகள் மொத்தமாக விற்பனை செய்யப்படும் இடங்களில் இருந்து விநியோகம் செய்யப்படும் இடங்களில் இருந்தும் மாதிரிகளைப் பெற்று அவற்றை பரிசோதிக்கு மாறும் பண்டிகைக் காலத்தில் பாவனையாளர்களுக்கு தரமான பொருட்களைப் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்குமாறும் அவர் பணித்துள்ளார். (அ-2)

## சங்கரத்தை வீதியில்

# போக்குவரத்துக்கு இடையூறாக மணல்



(நவாலி)

ஆனைக்கோட்டை நவாலியூடாக சங்கரத்தை செல்லும் வீதியில் தேவையின்றி காணப்படும் மண்ணினால் போக்குவரத்து இடையூறு ஏற்பட்டுள்ள தாக பயணிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

குறித்த வீதியில் வடிகான் அமைக்கும் பணிகள் வீதி அபி விருத்தி அதிகார சபையினரால் கடந்த மாதம் மேற்கொள்ளப் பட்டது. இவ்வாறாக வடிகான்கள் அமைக்க வெட்டப்பட்ட மண் வீதியின் இருமருங்கிலும் போடப்பட்ட நிலையில், ஒழுங்காக அகற்றப்பட்டாமையினால் அவை தார் வீதி முழு வதிலும் பரவிக் காணப்படுகின்றன.

இதனால் மழை காலங்களில் வீதி சேறாகக் காணப்படுவதோடு மழைநீர் வழிந்தோட முடியாமல் தேங்கி நிற்கின்றது. அதேபோல் வெயில் காலங்களில் மண் மேலெழுவதனால் புழுதி வீதியை மூடுகின்றது.

எனவே, உரியவர்கள் வீதியில் பரவப்பட்டுள்ள மண்ணை அகற்ற உடன் நடவடிக்கை எடுக்க வேண்டுமென மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ-9-26)

# ஹோட்டல் அமைக்கவே அனுமதிக்கப்பட்டுள்ளது -அமைச்சர் யாப்பா

(கொழும்பு)

அவுஸ்திரேலியாவின் கசினோ பிரபல வர்த்தகரான ஜேம்ஸ் பாக்கர் மற்றும் 3 நிறுவனங்கள் கொழும்பு டி.ஆர். விஜேவர்த்தன மாவத்தையில் சூது மற்றும் பந்தயம் ஆகியவற்றை தவிர்த்து ஹோட்டலை மாத்திரம் நடத்துவதற்கு அனுமதியளிக்கப்பட்டுள்ளதாக இலங்கையில் முதலீட்டு ஊக்குவிப்புத்துறை அமைச்சர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன அறிவித்துள்ளார்.

இதற்கான வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். ஏற்கனவே பாக்கர் இலங்கையில் கசினோ வர்த்தகத்தை மேற்கொள்வதற்கு அனுமதியளிக்கப்பட்டிருந்தது.

எனினும் பௌத்த அமைப்புக்களின் எதிர்ப்புக்கள் காரணமாக தற்போது சூது மற்றும் பந்தயம் என்ற விடயங்கள் இதில் இருந்து விலக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-2)

# எதிர்க்கட்சிகளின் சவாலை நிராகரித்தது அரசாங்கம்

(கொழும்பு)

வரவு செலவுத்திட்டம் தொடர்பாக இரகசிய வாக்கெடுப்பு நடத்த முடியாது என்று அரசாங்கம் தெரிவித்துள்ளது.

வரவு செலவுத்திட்ட மூன்றாவது வாசிப்பின் மீது இரகசிய வாக்கெடுப்பு நடத்தப்பட்டால், இலங்கை அரசாங்கம் தோற்கடிக்கப்படும் என்றும், அத்தகைய இரகசிய வாக்கெடுப்பை நடத்த அரசாங்கம் தயாரா என்று ஜே.வி.பி, ஐ.தே.க. போன்ற கட்சிகள் சவால் விடுத்திருந்தன.

ஆளும்கட்சி ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் கட்டுப்பாட்டில் உள்ள பல பிரதேசசபைகளில் வரவு செலவுத் திட்டம் தோல்வி கண்டதை அடுத்தே, எதிர்க்கட்சிகள் இவ்வாறு கோரியிருந்தன.

இதுகுறித்து, நேற்றுமுன்தினம் செய்தியாளர்கள் எழுப்பிய கேள்விக்குப் பதிலளித்த ஊடக அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல,

“சில உள்ளூராட்சி சபைத் தலைவர்கள் மோசடிகளை செய் துள்ளனர். அதனால்தான், வரவு செலவுத் திட்டங்கள் தோற்கடிக்கப்பட்டுள்ளன.

ஜே.வி.பியும், ஐ.தே.கவும் கோருவதால், நாம் ஏன் நாடாளுமன்றத்தில் இரகசிய வாக்கெடுப்பு நடத்த வேண்டும்.

அரசாங்கத்துக்குள் உள்ள எவரேனும் கோரினால் மட்டுமே, இரகசிய வாக்கெடுப்பு குறித்து ஆராயமுடியும்.

சபாநாயகருக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வரப்படும் போது மட்டுமே, நாடாளுமன்றத்தில் இரகசிய வாக்கெடுப்பு நடத்தப்படும்.

எனினும், இரகசிய வாக்கெடுப்பை நடத்துவதற்கு எந்த சட்டரீதியான தடையும் இல்லை.

ஆனால் எதிர்க்கட்சிகளின் தாளத்துக்கு ஆடமுடியாது.” என்றும் அவர் தெரிவித்துள்ளார். (அ-2)

# திறப்பு விழாவும் ஆராதனையும்

அமெரிக்கன் சிலோன் மிஷன் நுணாவில் திருச்சபையின் கலையரங்க திறப்பு விழாவும் நத்தார் இன்னிசை ஆராதனை நிகழ்வும் நாளை மறுதினம் சனிக்கிழமை சபையின் வளாகத்தில் நடைபெறவுள்ளது.

சபையின் குரு வண.தி.தேவராஜா தலைமையில் இடம்பெறவுள்ள இந் நிகழ்வின் பிரதம விருந்தினராக வடமாகாணக் கல்வி அமைச்சர் த.குருகுலராஜா, கலந்து கொள்வுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக சி.எ.சி.எம். தலைவர் வண.ஈனோக் புனிதராஜா, சாவகச்சேரி நகராட்சி மன்றத் தவிசாளர் இ.தேவசகாயம் பிள்ளை ஆகியோரும் கௌரவ விருந்தினர்களாக நுணாவில் மேற்கு கிராம சேவகர் செல்வி த.தங்கராசா,சி.எ.சி.எம். செயலாளர் வண.வி.தேவதாஸ், சி.எ.சி.எம். யாழ்.பிராந்திய தலைவர் வண. வி.ராஜ்குமார் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (அ-9-29)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## 52 தமிழர்கள் வெளியேற்றம்

சிங்கப்பூரில் கலவரத்தில் ஈடுபட்டதாக குற்றம் சாட்டப்பட்ட 52 தமிழர்களை வெளியேற்ற உத்தரவிடப்பட்டுள்ளது. அவர்களை தமிழ் நாட்டுக்கு அனுப்ப ஏற்பாடு நடைபெற்று வருகின்றது.

சிங்கப்பூரில் இந்தியர்கள் அதிகம் வசிக்கும் லிட்டில் இந்தியா பகுதியில் அண்மையில் கலவரம் மூண்டது. அதை தொடர்ந்து வன்முறை சம்பவமும் நிகழ்ந்தது.

அதை தொடர்ந்து கலவரத்தில் ஈடுபட்டவர்கள் மீது சிங்கப்பூர் அரசு கடும் நடவடிக்கை மேற்கொண்டது. 81 பேர் கைது செய்யப்பட்டனர். அவர்களில் 28 பேர் மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது. இந்த தகவலை சிங்கப்பூர் உள்துறை மந்திரி தியோ சீஹியான் தெரிவித்துள்ளார்.


இதுகுறித்து அவர் தெரிவிக்கையில் சிங்கப்பூரின் சட்டம் ஒழுங்குக்கு அச்சுறுத்தல் விளைவிப்பவர்கள் யாராக இருந்தாலும் சகித்துக்கொள்ள முடியாது. எனவே கலவரத்தில் தீவிரமாக ஈடுபட்ட 53 பேர் சிங்கப்பூரில் இருந்த வெளியேற்றப்படுகிறார்கள் என்றார்.

இதற்கிடையே வெளியேற உத்தரவிடப்பட்டுள்ள 52 தமிழர்களும் விரைவில் தமிழ் நாட்டுக்கு திரும்புகின்றனர். அதற்கான ஏற்பாடுகள் தீவிரமாக நடைபெற்று வருகின்றது. (2)

# ஐரோப்பிய எல்லையில் ஏவுகணை; ரஷ்யா, அமெரிக்கா நாடுகள் எதிர்ப்பு

(மாஸ்கோ)

**ஐரோப்பிய யூனியன் எல்லையையொட்டி நவீன இஸ்காண்டர் ஏவுகணைகளை ரஷியா நிலை நிறுத்தியுள்ளதற்கு அதன் அயல் நாடுகளும், அமெரிக்காவும் எதிர்ப்பு தெரிவித்துள்ளன.**



ஐரோப்பிய யூனியன் பகுதியில் அமெரிக்கா தலைமையிலான படைகள் வான் பாதுகாப்பு மண்டலத்தை ஏற்படுத்தியுள்ளன. அதற்கு பதிலடியாக ஐரோப்பிய யூனியன் எல்லையை யொட்டியுள்ள காலினின்கிராடு பகுதியில் அணு ஆயுதங்களை சுமந்து சென்று தாக்கும் திறன் கொண்ட இஸ்காண்டர் ஏவுகணைகளை ரஷியா நிலைநிறுத்தியுள்ளது.

இந்த நடவடிக்கைக்கு ரஷியாவின் அயல் நாடுகளான போலந்து, எஸ்டோனியா, லிதுவேனியா, லாத்வியா ஆகியவை கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளன. அவற்றுடன் சேர்ந்து அமெரிக்காவும் ரஷியாவின் இந்த நடவடிக்கைக்கு எதிர்ப்பு தெரிவித்துள்ளது.

பிராந்திய பாதுகாப்பை சீர்குலைக்கும் எந்த நடவடிக்கையையும் எடுக்க வேண்டாம் என்று ரஷியாவை வலியுறுத்தியுள்ளதாக அமெரிக்க வெளியுறவுத் துறை துணைச் செய்தித் தொடர்பாளர் மேரி ஹார்ப் தெரிவித்துள்ளார்.

இது குறித்த அயல் நாடுகளின் கவலையை ரஷியாவிடம் எடுத்துக் கூறியுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

ஐரோப்பிய யூனியன் எல்லையில் ஏவுகணைகளை நிலைநிறுத்தும் ரஷியாவின் செயல் கவலை அளிக்கிறது என்று போலந்து வெளியுறவுத் துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இந்த விவகாரம் நேட்டோ கவனிக்க வேண்டியதாகும். இது தொடர்பாக நேட்டோ மற்றும் ஐரோப்பிய யூனியன் கூட்டத்தில் விவாதித்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என எதிர்பார்க்கிறோம் என்றும் தெரிவித்துள்ளது.

ரஷியாவின் இந்த நடவடிக்கையினால் பால்டிக் கடற்கரையோரம் உள்ள பல்வேறு நகரங்களுக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாக லாத்வியா நாட்டின் பாதுகாப்புத்துறை அமைச்சர் ஆர்டிஸ் பாப்ரிக்ஸ் கூறியுள்ளார்.

இதனிடையே, இந்த விவகாரம் குறித்து ரஷிய பாதுகாப்புத் துறை அமைச்சகம் விளக்கம் அளித்துள்ளது. ரஷியா ஏவுகணைகளை நிலைநிறுத்தியுள்ள நடவடிக்கையில் சர்வதேச விதிமுறைகளோ அல்லது ஒப்பந்தங்களோ மீறப்படவில்லை. எனவே இதற்கு மேற்கத்திய நாடுகள் ஆட்சேபம் தெரிவிக்க வேண்டிய அவசியம் இல்லை என்று தெரிவித்துள்ளது. (2)

# சிரிய இராணுவம் வான் தாக்குதல்

## 28 குழந்தைகள் உட்பட 76 பேர் பலி



சிரிய இராணுவத்தினர் நடத்திய வெடி மருந்து நிரப்பப்பட்ட சிலிண்டர், எண்ணெய் பேரல்கள் தாக்குதலில் 28 குழந்தைகள் உட்பட 76 பேர் பலியாகியுள்ளதாக மனித உரிமை அமைப்பு குற்றம் சாட்டியுள்ளது.

இத்தாக்குதல் சம்பவம் சிரியாவின் 2 ஆவது பெரிய நகரான அல்போவில் நேற்று முன்தினம் நடைபெற்றது.இதனால் அங்கு பதற்ற நிலை உருவாகியுள்ளது.

சிரியாவில் நடைபெறும் நிகழ்வுகளை ஐ.நா, மனித உரிமை அமைப்பு மற்றும் உலக நாடுகள் உற்று நோக்கி வருகின்றன. இந்நிலையில் நேற்று முன்தினம் சிரியாவின் 2 ஆவது பெரிய நகரான அல்போவில் ஹெலிகாப்டரில் இருந்து வெடிமருந்து நிரப்பப்பட்ட சிலிண்டர், ஓயில் பேரல்களை வீசி சிரிய இராணுவத்தினர் தாக்குதல் நடத்தி உள்ளனர்.

இதில் 28 குழந்தைகள் உட்பட 76 பேர் பலியாகியுள்ளதாக மனித உரிமை அமைப்புகள் குற்றம் சாட்டி உள்ளன. (2)

# தொலைபேசி ஒட்டுக்கேட்பது அரசியலமைப்புக்கு முரணானது

## -அமெ. நீதிமன்றம் எச்சரிக்கை-

அமெரிக்க தேசிய பாதுகாப்பு நிலையம் பாரிய அளவில் தொலைபேசி தகவல்களை சேகரித்தமை அரசியலமைப்புக்கு முரணானது என அந்நாட்டு நீதிமன்றம் ஒன்று தீர்ப்பளித்துள்ளது.

கன்சர்வேட்வ் செயற்பாட்டாளர் ஒருவர் தொடர்ந்த வழக்கின் தீர்ப்பிலேயே வோஷிங்டன் டி சி பெட்ரல் நீதிமன்றம் இதனைத் தெரிவித்துள்ளது.

உளவு நிறுவனத்தின் இந்த நடவடிக்கை ஒருதலைப்பட்சமான தலையீடு என வோஷிங்டன் டி சி நீதிமன்ற நீதிபதி சுட்டிக்காட்டியுள்ளார்.


அமெரிக்க தேசிய பாதுகாப்பு நிறுவனத்தின் முன்னாள் ஊழியரான எட்வோர்ட் ஸ்னேடன் வெளியிட்ட ஆவணங்களில் தொலைபேசி அழைப்புத் தகவல்கள் சேகரிக்கப்பட்டமை தெரியவந்திருந்தது.

இதேவேளை இரகசிய ஆவணங்களை கசிய விடுவதை ஸ்னேடன் நிறுத்துவாராயின் அவருக்கு மன்னிப்பு வழங்குவது தொடர்பாக முன்வைக்கப்பட்ட பரிந்துரையை வெள்ளை மாளிகை நிராகரித்துள்ளது.

உலக நாடுகளின் தலைவர்கள் மற்றும் முக்கிய நபர்களின் தொலைபேசி அழைப்புக்களை அமெரிக்க பாதுகாப்பு நிலையம் ஒட்டுக்கேட்டமை அமெரிக்காவிற்கு பல்வேறு பிரச்சினைகளை ஏற்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (2)

# ஸ்னோடன் விவகாரத்தில் மன்னிப்பு வழங்க முடியாது

## -அமெரிக்கா திட்டவட்டம்-



உளவு இரகசியங்களை வெளியிட்ட எட்வெர்ட் ஸ்னோடன் சரணடைந்தே தீர வேண்டும். அவருக்கு பொதுமன்னிப்பு அளிக்கும் கோரிக்கை நிராகரிக்கப்பட்டுள்ளதாக அமெரிக்கா திட்டவட்டமாக தெரிவித்துள்ளது.

அமெரிக்கா பிற நாடுகளின் மின்அஞ்சல் உள்ளிட்ட முக்கிய தகவல்களை உளவு பார்த்ததை வெளியிட்டு பரபரப்பை ஏற்படுத்தியவர் எட்வெர்ட் ஸ்னோடன் ஆவார். அமெரிக்க தேசிய பாதுகாப்பு முகமையின் ஒப்பந்தப் பணியாளராவர். இவர் அங்கிருந்து தப்பி ரஷ்யாவை அடைக்கலம் புகுந்துள்ளார்.

அவரிடம் அமெரிக்காவிற்கு எதிரான ஆவணங்கள் இன்னும் ஏராளமாக இருப்பதாக கூறப்படுகிறது. இந்நிலையில் அவருக்கு பொது மன்னிப்பு அளிக்குமாறு கொடுக்கப்பட்ட கோரிக்கையை நிராகரித்த அமெரிக்கா ஸ்னோடன் சரணடைந்து விசாரணையை எதிர்கொள்ளுமாறு திட்டவட்டமாக கூறியுள்ளது.

ஸ்னோடனுக்கு அடைக்கலம் அளித்த விவகாரத்தில் ரஷ்யா, அமெரிக்கா இடையேயான உறவுகள் தொடர்ந்து மோசமான நிலையில் உள்ளன. (2)

# வான் பாதுகாப்பு மண்டல விவகாரம்; பிலிப்பைன்ஸ் பயணித்தார் கெர்ரி



கிழக்கு சீன கடற்பகுதியில் அறிவித்துள்ளது போல் தெற்கு சீன கடற்பகுதியிலும் வான் பாதுகாப்பு மண்டலம் ஏற்படுத்தக் கூடாது என்று சீனாவை அமெரிக்க வெளியுறவுத் துறை அமைச்சர் ஜான் கெர்ரி எச்சரித்துள்ளார்.

வான் பாதுகாப்பு மண்டல விவகாரம் தொடர்பாக 2 நாட்கள் பயணமாக பிலிப்பைன்ஸ் பயணித்துள்ள கெர்ரி, அந்நாட்டு வெளியுறவுத துறை அமைச்சர் ஆல்பர்ட் டெல் ரொசாரியோவுடன் அது குறித்து கலந்தாலோசித்தார்.

அதன் பின்னர் செய்தியாளர்கள் சந்திப்பின போது கெர்ரி கூறியதாவது:

சீனாவின் அத்தகைய பாதுகாப்பு மண்டலம் ஏற்படுத்தப்படக் கூடாது. ஏற்கனவே கிழக்குச் சீன கடற்பகுதியில் ஈடுபட்டது போன்ற நடவடிக்கையில் சீனா மீண்டும் ஈடுபடக் கூடாது.

கிழக்குச் சீன கடற்பகுதியில் சீனா அறிவித்துள்ள வான் பாதுகாப்பு மண்டலத்தை அமெரிக்கா அங்கீகரிக்காது என்று கெர்ரி கூறினார்.

வான் பாதுகாப்பு மண்டலம் தொடர்பான சீனாவின் அறிவிப்புக்கு எதிராக, கடந்த நவம்பர் மாதம் அந்நாட்டுக்கு பிலிப்பைன்ஸ் எச்சரிக்கை விடுத்திருந்தது.

முக்கியமான மற்றும் வளம் நிறைந்த தெற்கு சீன கடற்பகுதிக்கான உரிமை கோருவதில் பிலிப்பைன்ஸ், சீனா, வியட்நாம், மலேசியா, தாய்வான் ஆகிய நாடுகளுக்கிடையே போட்டி நிலவுவது குறிப்பிடத்தக்கது. (2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# லோக்பால் மசோதா நிறைவேறியது; உண்ணாவிரதத்தை முடித்தார் ஹசாரே

(ராலேகான் சித்தி)

**பாராளுமன்றில் லோக்பால் மசோதா பெரும்பான்மை உறுப்பினர்களின் ஆதரவோடு நிறைவேற்றப்பட்டது.**

ஊழலுக்கு எதிரான வலுவான லோக்பால் மசோதாவை நிறைவேற்ற மத்திய அரசு தீவிரம் காட்டியது.

5 மணி நேர விவாதத்திற்கு லோக்பால் மசோதா டில்லி மேல் சபையில் நேற்று நிறைவேறியது.


சமாஜ்வாடி கட்சியை தவிர ஏனைய அனைத்துகட்சிகளும் இந்த மசோதாவுக்கு ஆதரவு அளித்தன.

திருத்தப்பட்ட லோக்பால் மசோதா பாராளுமன்றத்தில் நேற்று தாக்கல் செய்யப்பட்டது. நன்பகல் 12 மணிக்கு பின்னர் இதன் மீதான விவாதம் தொடங்கியது. இந்த விவாதத்தில் எதிர்க்கட்சி தலைவர் சுஷ்மா சுவராஜ் உரையாற்றுகையில்,

ஜனநாயகத்தை அழித்திடாத லோக்பால் அவசியம். இந்த மசோதாவை முன் கூட்டியே தாக்கல் செய்து இருக்க வேண்டும். பாராளுமன்றத்தின் முடக்கத்துக்கு மத்திய அரசு தான் காரணம்.

லோக்பால் மசோதாவை நிறைவேற்ற விடாமல் காங்கிரஸ் கூட்டணி கட்சிகள் தடுக்கின்றன. பா.ஜனதா முயற்சியால்தான் மேல்சபையில் இந்த மசோதா நிறைவேறியது.

மத்திய அரசு நிறைவேற்றி உள்ள இந்த



மசோதாவில் 2 முக்கிய பரிந்துரைகள் இல்லை என அவர் கூறினார்.

இதேவேளை காங்கிரஸ் துணை தலைவர் ராகுல்காந்தி கூறுகையில்,

லோக்பால் மசோதாவை நிறைவேற்ற அனைத்துக் கட்சிகளும் முழு ஒத்துழைப்பு அளிக்க வேண்டும். ஒரு மனதாக இதை நிறைவேற்றுவதன் மூலம் வரலாறுபடைக்க முடியும்.

இந்த ஒரு லோக்பால் மசோதா மட்டுமல்ல, மேலும் நிலுவையில் உள்ள 6 மசோதாக்களையும் நிறைவேற்றி ஊழலை ஒழிக்க வேண்டும் என்றார்.

சமாஜ்வாடி கட்சி தலைவர் முலாயம்சிங் யாதவ், உரையாற்றுகையில், 'லோக்பால் மசோதா அபாயகரமானது.

இதன் காரணமாக ஆவணங்களில் அரசு அதிகாரிகள் கையெழுத்து போட தயங்குவார்கள்.

எனவே இந்த மசோதாவை சோனியா காந்தி திரும்ப பெற வேண்டும்' என்றார்.

பின்னர் சமாஜ்வாடி கட்சி எம்.பி.க்கள் அனைவரும் பாராளுமன்றத்தில் இருந்து வெளிநடப்பு செய்தனர்.

இதை தொடர்ந்து குரல் வாக்கெடுப்பு மூலம் திருத்தப்பட்ட லோக்பால்மசோதா நிறைவேறப்பட்டது.

ராஜ்யசபாவில், லோக்பால் மசோதா நிறைவேற்றப்பட்டதற்கு சமூக ஆர்வலர் அன்னா ஹசாரே நன்றி தெரிவித்தார்.

ராலேகான் சித்தியில் காலவரையறையற்ற உண்ணாவிரதம் இருந்து வரும் அன்னா ஹசாரே, நேற்றுமுன்தினம் ராஜ்ய சபாவில் , லோக்பால் மசோதா குறித்து நடைபெற்ற விவாதங்களை தொலைக் காட்சி மூலம் கவனித்துக் கொண்டிருந்தார்.

பின் லோக்பால் மசோதா நிறை வேற்றப் பட்டதை அடுத்து ஹசாரே தேசிய கொடியை அசைத்து மகிழ்ச்சியை வெளிப்படுத்தினார்.

அதைத் தொடர்ந்து, நிருபர்களிடம் பேசிய அவர், லோக்பால் மசோதா நிறைவேறினால் நாட்டில் 40 சதவீதம் முதல் 50 சதவீதம் வரை ஊழல் குறையும். ஊழலுக்கு எதிராக சட்டம் இயற்ற மக்கள் விரும்புகின்றனர் என்பதை நம் தலைவர்கள் உணர ஆரம்பித்து விட்டனர்.

இந்த மசோதாவை நிறைவேற்றிய ராஜ்யசபா உறுப்பினர்களுக்கு நன்றி. பாடசாலை சிறார்கள் கொடுத்த இளநீரை பருகிய ஹசாரே உண்ணாவிரதத்தை முடித்துக் கொண்டார். இதனையடுத்து ஹசாரேயின் ஆதரவாளர்கள் கொண்டாடத்தில் ஈடுபட்டுள்ளனர்.(2)

## இந்தியா -பாகிஸ்தான் பேச்சுவார்த்தை ஆரம்பம்

(இஸ்லாமாபாத்)

இந்தியா-பாக், எல்லைப்பகுதியில் நீடித்துவரும் பதற்றத்தை தணிக்கும் வகையில் எதிர்வரும் 24ஆம் திகதி பேச்சுவார்த்தை நடத்த இந்திய இராணுவ அதிகாரிகளுக்கு பாக். அழைப்பு விடுத்துள்ளது. கடந்த செப்டெம்பர் மாதம் நியூயோர்க்கில் நடைபெற்ற பிரதமர் மன்மோக்ன்சிங், நவாஸ் ஷெரீப் சந்திப்பின்போது ஏற்பட்ட உடன்பாட்டினை அடுத்தே இந்த பேச்சுவார்த்தை நடைபெறவுள்ளது. கடந்த ஓகஸ்ட் மாதத்தில் இந்திய இராணுவ வீரரின் தலையை பாக்.இராணுவம் துண்டித்ததையடுத்து பெரும் பதற்றம் நிலவி வருகிறது. அதுமட்டுமல்லாது இந்தாண்டு ஆரம்பம் முதல் 150இற்கும் மேற்பட்ட முறை இந்திய பகுதியில் துப்பாக்கிச்சூட்டுச் சம்பவத்தை நிகழ்த்தியுள்ளது குறிப்பிடத்தக்கது. (2)

## லோக்பால் மசோதா

# ஊழலை ஒழிப்பதற்கான தொடக்கமாக இருக்கும்

### பா.ம.க.நிறுவுநர் ராமதாஸ் தெரிவிப்பு

லோக்பால் சட்டமுன்வரைவு நாடாளுமன்ற மாநிலங்களவையில் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. லோக்பால் அமைப்பால் ஊழல் உடனே ஒழிந்து விடாது என்றாலும் ஊழலை ஒழிப்பதற்கான தொடக்கமாக இருக்கம். இதனை வரவேற்கிறேன் என பா.ம.க.நிறுவுநர் மருத்துவர் ராமதாஸ் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

இந்திய மக்களின் 50 ஆண்டு கால எதிர்பார்ப்பை நிறைவேற்றும் வகையில் லோக்பால் சட்ட முன்வரைவு நாடாளுமன்ற மாநிலங்களவையில் நிறைவேற்றப்பட்டிருக்கிறது.

இது மக்களவையில் ஏற்கனவே நிறைவேற்றப்பட்டிருக்கும் போதிலும், அதில் தற் போது செய்யப்பட்டிருக்கும் திருத்தங்களுக்கு அனுமதி பெற மீண்டும் தாக்கல் செய்யப்பட்டு நிறைவேற்றப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

1969 ஆம் ஆண்டில் தொடங்கி 12 முறை லோக்பால் அமைப்பை ஏற்படுத்துவதற்கான சட்ட முன்வரைவு நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட போதிலும் ஒருமுறை கூட நிறைவேறவில்லை.

அதன் பின்னர் 2 ஆண்டுகளுக்குப் பின்னா இப்போது லோக்பால் சட்ட முன்வரைவு நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட சட்டமாக்கப் படவிருப்பது மகிழ்ச்சியளிக்கிறது.

மக்களவையில் நிறைவேறிய லோக்பால் சட்ட முன்வரைவுடன் ஒப்பிடும்போது மாநி லங்களவையில் நிறைவேற்றப்பட்டுள்ள முன்வரைவு மிகவும் வலிமையானது.

எதிர்பார்க்கப்பட்ட சில திருத்தங்கள் முன்வரைவில் இடம்பெறவில்லை என்ற போதிலும், இப்போது நிறைவேற்றப்பட்டுள்ள லோக்பால் சட்டம் ஊழலை ஒழிப்பதற்கு ஓரளவுக்காவது உதவும் என்பதில் சந்தேகமில்லை.


ஊழலைத் தடுக்க லோக்பால் அமைப்பே இல்லை என்பதைவிட ஓரளவு அதிகாரமாவது கொண்ட லோக்பால் அமைக்கப்படுவது சிறந்தது. இதனால் ஊழல் உடனே ஒழிந்து விடாது என்றாலும், ஊழலை ஒழிப்பதற்கான தொடக்கமாக இருக்கும். அவ்வகையில் லோக்பால் முன்வரைவு நிறைவேற்றப் பட்டதை வரவேற்கிறேன்.

இப்போது லோக்பால் முன்வரைவு நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டுவிட்ட நிலையில், அதேபோன்ற அம்சங்களைக் கொண்ட லோக் அயுக்தா அமைப்பை ஏற்படுத்த மாநில அரசுகள் முன்வரவேண்டும். இந்தியாவில் மொத்தம் 19 மாநிலங்களில் லோக் அயுக்தா அமைப்புகள் இருக்கும் போதிலும் கர்நாடகம் தவிர ஏனைய மாநிலங்களில் லோக் அயுக்தாக்கள் சொல்லிக்கொள்ளும்படி செயற்படவில்லை. தமிழ்நாடு, மேற்கு வங்கம் உட்பட 10 மாநிலங்களில் லோக் அயுக்தாக்கள் இன்றுவரை ஏற்படுத்தப்படவே இல்லை.

தென்னிந்தியாவில் ஆந்திரா, கர்நாடகா, கேரளா ஆகிய மாநிலங்களில் லோக் அயுக்தாக்கள் அமைக்கப்பட்டுள்ள நிலையில் தமிழ்நாட்டில் மட்டும் இன்னும் அந்த அமைப்பு ஏற்படுத்தப்படாதது, ஊழலை ஒழிப்பதில் தமிழகத்தை ஆண்ட திராவிடர் கட்சிகளுக்கு அக்கறை இல்லை என்பதையே காட்டுகிறது. இந்தியாவின் ஊழல் மலிந்த மாநிலங்களில் முதன்மை மாநிலமாக தமிழகம் திகழ்கிறது.

எனவே, முதலமைச்சர் மீதான குற்றச்சாட்டுகளையும் விசாரிக்கும் அதிகாரத்துடன் கூடிய, லோக்பால் அமைப்புக்கு இணையான அதிகாரங்களைக் கொண்ட லோக் அயுக்தா அமைப்பை தமிழகத்தில் ஏற்படுத்த மாநில அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். இதற்கான சட்ட முன்வரைவை ஆளுநர் உரைக்காக அடுத்த மாதம் கூடும் சட்டப்பேரவையில் கொண்டு வந்து நிறைவேற்ற வேண்டும் என்று தெரிவித்துள்ளார். (2)

## தெலுங்கானா பிரச்சினை; மக்களவை ஒத்திவைப்பு



நாடாளுமன்றில் குளிர்கால கூட்டத் தொடர் தொடங்கியதிலிருந்தே பல பிரச்சினைகள் யெழுப்பப்பட்டு நாள் முழுவதும் சபை ஒத்திவைக்கப்பட்டு வருகிறது. இந்நிலையில் நேற்றுமுன்தினம் ஏற்பட்ட கடும் அமளி காரணமாக நாள் முழுவதும் சபை ஒத்திவைக்கப்பட்டது.

வழக்கம்போல் நேற்றுமுன்தினம் மக்களவை கூடியதும், தெலுங்கானா உருவாக்குவதற்கு எதிர்ப்பு தெரிவித்து ஆந்திராவை சேர்ந்த காங்கிரஸ், வை.எஸ்.ஆர். காங்கிரஸ், தெலுங்கு தேசம் கட்சி உறுப்பினர்கள் அவையின் மையப்பகுதிக்கு சென்று ஆந்திராவை பிரிக்காதே என கோஷம் எழுப்பினர்.

இந்திய எல்லைப் பகுதியில் அடக்கடி நடக்கும் சீனாவின் அத்துமீறல்களுக்கு கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என சமாஜ் வாடி உறுப்பினர்கள் கோஷம் எழுப்பினர். இதனால் அவையை மதியம் வரை சபாநாயகர் மீராகுமார் ஒத்திவைத்தார்.

மக்களவை மீண்டும் கூடியதும், தெலுங்கானாவுக்கு எதிர்ப்பு தெரிவித்து வை.எஸ்.ஆர். காங்கிரஸ் தலைவர் ஜெகன் மோகன் ரெட்டி தர்ணா நடத்தினார்.

மத்திய அரசுக்கு எதிராக ஆந்திர எம்.பி.க்கள் கொண்டு வந்த நம்பிக்கையில்லா தீர்மான நோட்டீசுக்கு பிஜு ஜனதா தள உறுப்பினர்கள் ஆதரவு தெரிவித்தனர். தமிழக மீனவர்கள் மீது இலங்கை கடற்படை நடத்தும் தொடர் தாக்குதலுக்கு அ.தி.மு.க. உறுப்பினர்கள் எதிர்ப்பு தெரிவித்தனர்.

இதனால் மக்களவையை சபாநாயகர் மீராகுமார் நாள் முழுவதும் ஒத்திவைத்தார். அங்கு நிலவிய அமளி காரணமாக எந்த பணியும் நடைபெறவில்லை. (2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொண்டர்தம் பெருமை
சொல்லவும் பெரிதே?
– ஔவையார்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## யாழ்.போதனா வைத்தியசாலை தொண்டர்களுக்கு நியமனம் வழங்குங்கள்

யாழ்ப்பாண போதனா வைத்தியசாலையில் கடமையாற்றும் தொண்டர்கள் தமக்கு நிரந்தர நியமனம் வழங்கக்கோரி பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டு வருகின்றனர்.

பல வருடங்களாகத் தொண்டு அடிப்படையில் சேவையாற்றும் இத் தொண்டர்களுக்கு சுகாதார அமைச்சு தாமாகவே முன் வந்து நிரந்தர நியமனத்தை வழங்கியிருக்க வேண்டும்.

தொண்டு அடிப்படையில் பல ஆண்டுகள் சேவையாற்றுதல் என்பதற்கு அப்பால், யாழ்ப்பாணப் போதனா வைத்தியசாலையில் நோயாளர்களின் நலன்களை கவனிப்பதிலும் தேவைப்படும் பிரிவுகளுக்கு அவர்களை அழைத்துச் செல்வதிலும் இத்தொண்டர்களின் பங்கும் பணியும் காத்திரமாக இருந்துள்ளதென்பதற்கு அவர்களின் பணிப்புறக்கணிப்பால் யாழ். போதனா வைத்தியசாலை படும் அல்லோலகல்லோலம் சான்றாகும்.

அந்தளவில் இத் தொண்டர்களின் பணி யாழ். போதனா வைத்தியசாலையில் அத்தியாவசியமானதாக இருந்துள்ளது.

எனினும் இவர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்குவது தொடர்பில் ஏற்பட்ட தாமதங்கள், தடைகளுக்கு யார் காரணம் என்ற ஆய்வுகளுக்கு அப்பால் உயர் அதிகாரிகள் மற்றும் படிப்பிலும் பதவியிலும் கௌரவமான இடத்திலிருப்பவர்கள்; சாதாரண ஊழியர்கள், தொண்டர்களின் நலன்களில் அக்கறை செலுத்த வேண்டும்.

அப்போதுதான் சாதாரண மக்களும் மகிழ்வோடு வாழவும் தங்கள் சீவனோபாயத்திற்கான பொருளாதாரத்தை நிம்மதியாக தேடவும் முடியும்.

எனவே யாழ். போதனா வைத்தியசாலையில் மிகக்குறைந்த கொடுப்பனவில் தொண்டு அடிப்படையில், எதிர்காலத்தில் நிரந்தர நியமனம் கிடைக்கும் என்ற நம்பிக்கையோடு பணியாற்றி வரும் தொண்டர்களுக்கு நிரந்தர நியமனம் கிடைக்க புத்திஜீவிகள், அரசியல் பலமிக்கோர் உதவ வேண்டும்.

அதிலும் குறிப்பாக மத்திய சுகாதார அமைச்சு இதுவிடயத்தில் அதிகூடிய கரிசனை எடுப்பது அவசியமாகும்.

யாழ்ப்பாணப் போதனா வைத்தியசாலை; தொண்டர்களின் சேவையில் தங்கியுள்ளது எனும்போது, தொழிலாளர்களுக்கான பதவி வெற்றிடம் நீண்டகாலமாக நிரப்பப்படாமல் இருந்துள்ளதென்பதையே மேற்போந்த சம்பவம் உறுதிசெய்கிறது.

வட மாகாணத்தில் இருக்கக்கூடிய ஒரேயொரு போதனா வைத்தியசாலை, சுமார் 250க்கும் மேற்பட்ட தொண்டர்களின் சேவையைப் பெற்று இயங்கும் நிலையில் உள்ளதெனும்போது அங்கு குறித்த தொண்டர்கள் தங்களை முழுமையாக அர்ப்பணித்து சேவையாற்றி உள்ளனர் என்பதும் தெளிவாகும்.

ஆக, தொண்டு அடிப்டையில் தமக்கு எப்படியும் நியமனம் கிடைக்கும் என்ற நம்பிக்கையோடு சேவையாற்றிய தொண்டர்களை கவனத்தில் கொள்ளாது கைவிடுவதென்பது மனிதப் பண்புடைமையாகாது.

எனவே இத் தொண்டர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கப்படுவது மனுநீதியுடன் சார்ந்தது.

ஆகவே தற்போது தொழிலாளர் நியமனங்களின்போது கவனத்தில் கொள்ளப்படும் கல்வித் தரம் என்பதில் இறுக்கமான போக்கைக் கொண்டிராமல், யாழ்ப்பாண போதனா வைத்தியசாலையில் பல ஆண்டுகள் தொண்டர்களாக சேவையாற்றிய அனுபவத்திற்கு முன்னுரிமை கொடுத்து அவர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கி அவர்களின் எதிர்கால வாழ்வுக்கும் பணி நிலைக்கும் உத்தரவாதம் கொடுக்க வேண்டும்.

# கூட்டமைப்பின் ஒருங்கிணைப்புக்குழு விரைவில் கூட்டப்பட வேண்டும்

## ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி தீர்மானம்

(கொழும்பு)

மக்களின் பாரிய எதிர்பார்ப்புடன் அமைக்கப்பட்ட வடக்கு மாகாண சபை குறைந்தபட்ச செயற்பாடுகளை செய்தற்கு கூட அரசு ஒத்துழைக்காமல் இருப்பதை மாகாண சபையும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பும் அதனை சர்வதேச ரீதியில் பகிரங்கப்படுத்துவதுடன் அரசாங்கம் வட மாகாண சபையை நடத்துவதற்கு பங்களிக்கக்கூடிய வகையில் அழுத்தங்களை ஏற்படுத்தவும் முயற்சிகள் மேற்கொள்ள வேண்டும் என ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் மத்திய குழு தீர்மானம் நிறைவேற்றியுள்ளதாக அதன் செயலாளர் சுரேஷ் பிரேமச்சந்திரன் எம்.பி. அறி வித்துள்ளார்.

இக்கட்சியின் மத்திய குழு கூட்டம் கடந்த 16 ஆம் திகதி கொழும்பில் நடைபெற்ற போதே மேற்படி தீர்மானம் எடுக்கப்பட்டுள் ளதாக அவர் அனுப்பிவைத்துள்ள ஊடக அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் வருமாறு:

கூட்டத்தில் இன்றைய அரசியல் கள நிலைகள் தொடர்பாகவும் தேர்தலுக்குப் பின்னரான வடக்கு மாகாண சபையின் செயற்பாடுகள், மாகாண சபை எதிர்நோக்கும் பிரச்சினைகள், அரசாங்கம் கொடுக்கும் நெருக்கடிகள் போன்ற பல விடயங்கள் மிக ஆழமாக ஆராயப்பட்டன.

தமிழ் மக்கள் மிகப் பிரமாண்டமான அளவில் வாக்களித்து மூன்றிலிரண்டு பெரும்பான்மைக்கும் மேலாக தமது பிரதிநிதிகளைத் தெரிவு செய்து உருவாக்கப்பட்ட வடக்கு மாகாண சபையின் மேல் அம்மக்கள் பாரிய எதிர்பார்ப்பைக் கொண்டுள்ளனர். ஆனாலும் குறைந்தபட்ச செயற்பாடுகளை செய்வதற்குக்கூட அரசு ஒத்துழைக்காமல் இருப்பதை மாகாண சபையும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் சர்வதேச ரீதியில் அதனைப் பகிரங்கப்படுத்துவதுடன் அரசாங்கம் வடமாகாண சபையை நடத்துவதற்குப் பங்களிக்கக் கூடிய வகையில் அழுத்தங்களை ஏற்படுத்தவும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என தீர்மானிக்கப்பட்டது.

மார்ச் மாதம் ஜெனிவாவில் நடைபெறவுள்ள மனிதவுரிமைகள் ஆணைக்குழு தொடர்பாகவும் அது எடுக்க இருக்கும் நடவடிக்கைகள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது.

மேற்கண்ட விடயங்கள் தொடர்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஒருங்கிணைப்புக்குழு கூட்டப்பட்டு இவை தொடர்பாக தேவையான உடனடியாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவேண்டும் என்றும் தீர்மானிக்கப்பட்டது.

இது தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் அவர்களுடன் கலந்து பேசி விரைவில் ஒருங்கிணைப்புக் கூட்டத்தை கூட்டுமாறு கேட்டுக்கொள்வதெனவும் முடிவெடுக்கப் பட்டுள்ளது.

# காரைதீவு பிரதேச சபையின் வரவு செலவுத் திட்டம் தோல்வி

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆட்சி அதிகாரத்தின் கீழிருக்கின்ற காரைதீவு பிரதேச சபையின் வரவு-செலவுத்திட்டம் 3 மேலதிக வாக்குகளால் நேற்றுப் புதன்கிழமை தோற்கடிக்கப்பட்டுள்ளது.

காரைதீவு பிரதேச சபையின் இவ்வாண்டுக்கான இறுதியமர்வு தவிசாளர் தலைமையில் நேற்று புதன் கிழமை கூடியது. இதன்போது தவிசாளரினால் 2014 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத்திட்டம் சமர்ப்பிக்கப்பட்டது.

இதனையடுத்து வரவு-செலவுத் திட்டம் தொடர்பாக விவாதம் இடம் பெற்றது.

இவ்விவாதத்தின் போது கடந்து மூன்று ஆண்டு காலமாக காரைதீவு பிரதேச சபையினால் நெல்சிப் மற்றும் புறநெகும நிதி ஒதுக்கீட்டின் மூலம் மேற்கொள்ளப்படும் அபிவிருத்திப் பணிகளில் மாளிகைக்காடு, மாவடிப் பள்ளி ஆகிய முஸ்லிம் கிராமங்கள் புறக்கணிக்கப்பட்டே வந்துள்ளதாக முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர் தனது உரையில் குற்றஞ்சாட்டினார்.

இதேவேளை, தவிசாளரினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள இவ்வரவு-செலவுத்திட்டம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஏனைய உறுப்பினர்களின் ஆலோசனைகளை பெறாமல் தயாரிக்கப்பட்டதாகவும் மக்கள் பணிக்காக இவ்வரவு-செலவுத்திட்டத்தில் நிதி ஒதுக்கீடு செய்யப்படாமல் பிரதேச சபையை நிர்வகிப்பதற்கே கூடுதலான நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்கள் குற்றம் சாட்டினர்.

அத்தோடு சபையின் அனுமதியினை பெறாமல் காரைதீவு நூலகத்திற்கு தவிசாளர் தன்னிச்சையாக முடிவெடுத்து புத்தகங்களை கொள்வனவு செய்துள்ளார் எனவும் குற்றச்சாட்டுக்களை சுமத்தினர்.

இதனையடுத்து இவ்வரவு செலவுத் திட்டம் வாக்கெடுப்புக்கு விடப்பட்டது. இதன்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்கள் மூவரும் முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர் ஒருவரும் இணைந்து திட்டத்திற்கு எதிராக வாக்களித்தனர்.

வரவு-செலவுத் திட்டத்திற்கு ஆதரவாக ஒரு வாக்கும் எதிராக 4 வாக்குகளும் அளிக்கப்பட்டன. இச் சபையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் 4 உறுப்பினர்களும் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸை பிரதி நிதித்துவப்படுத்தும் வகையில் ஒருவருமாக மொத்தம் 5 உறுப்பினர்களே உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (செ-11)

## வாகனங்கள் ஏலம்

(யாழ்ப்பாணம்)

ஊர்காவற்றுறை மாவட்ட நீதிமன்றில் பறிமுதல் செய்யப்பட்ட பொருட்கள், உரிமை கோரப்படாத வாதனங்கள் என்பன இன்று முற்பகல் 11 மணிக்கு ஏலத்தில் விடப்படவுள்ளதாக பதிவாளர் எஸ்.சிவராம் அறிவித்துள்ளார்.

ஏலத்தில் விடப்படுவதற்கு ஒரு மணித்தியாலத்திற்கு முன்னர் பொருட்களை பார்வையிடலாம் என்பது குறிப்பிடத்தக்கது. (செ-9)

ஓம் நமசிவாய ஆன்மீக வங்கி



இந்துநெறி காப்போம்
இந்துவாக வாழ்வோம்


இந்துக்களே உங்களுடைய தார்மீக கடமையாக ஓம் நமசிவாய மந்திரத்தினை ஆயிரக்கணக்கில் எழுதி அருகில் உள்ள ஆலயங்களில் சமர்ப்பித்து எமது சமயத்தினையும் சமய விழுமியங்களையும் எம்மக்களை யும் காத்திட அர்ப்பணிப்புடன் ஐந்தெழுத்து மந்திரம் முதலீடு செய்யுமாறு சர்வதேச இந்து மத குருமார் ஒன்றியம் அறிவித்துள்ளது.

## சத்திய தரிசனம்



தர்மத்தை புனருத்தாரணம் செய்யவும் நல்லவர்களுக்கு துன்பம் ஏற்படும் கால் அவர்களைப் பாதுகாக்கவும் பாதையை தவறவிட்டு நடுக்காட்டிலே அலையும் குருடர்களுக்கு அறிவு புகட்டவும் நான் வந்துள்ளேன். இந்த அவதாரத்திலெ கெட்டவர் அழிக்கப்பட மாட்டார்கள். அவர்கள் திருத்தப் படுவார்கள். கறையான் பிடித்த மரம் வெட்டப்பட மாட்டாது. அதற்குப் புத்துயிர் கொடுக்கப்படும். எனது வருகை எல்லோருக்கும் சந்தோசத்தை வழங்குவதேயாகும். ஆகவே ஊங்கள் மத்தியில் வருவதற்கு எனக்கு எப்போது மகிழ்ச்சி.

ஒருமுறை, இருமுறை மும்முறையல்ல எத்தனை முறை என்னைத் தேவைப்பட்டழைத்தாலும் நான் வருவேன். பிழையான பாதையில் செல்பவர்களைத் திருத்தவும் நல்லவர்களைப் பாதுகாக்கவும் சாயி மீண்டும், மீண்டும் பிறப்பார்.



## அறிந்து கொள்ள வேண்டிய ஆன்மீகத் தகவல்கள்


### நீர் அருந்தும் முறை

சாப்பிடும்பொழுது குடிக்கும் தண்ணீரை வலது புறத்தில் வைத்துக் கொள்ளவேண்டும். இடது புறத்தில் வைத்த தண்ணீர், சாப்பிடும் காலம் தவிர ஏனைய காலங்களில் இடது கையால் அருந்தும் நீர், நின்று கொண்டு குடிக்கும் நீர், பிறர் குடித்து எஞ்சிய நீர் ஆகியவற்றைக் குடிப்பது கள் குடிப்பதற்குச் சமமான பாவத்தைத் தரக்கூடியதாகும்.

புனிதமான நீர்நிலைகளைக் காணும்போது முதலில் அதிலிருந்து கொஞ்சம் தண்ணீரை எடுத்து தலையில் தெளித்துக்கொண்ட பின்பே அதில் கால்களை வைக்கவேண்டும். புண்ணிய தீர்த்தத்தில் முதலில் கால்களை வைத்த பீமன் மிகுந்த துயரமடைந்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாச்சி வெற்றிக் கிண்ண போட்டியில் மயிலங்காடு வள்ளுவர் அணி வெற்றி



(மானிப்பாய்)

வலி.தெற்கு பிரதேச இளைஞர் கழக சம்மோளம் நடத்தும் தாச்சிப் போட்டியில் மயிலிட்டு வள்ளுவர் அணி வெற்றி பெற்றுள்ளது.

வலி. தெற்கு பிரதேச இளைஞர் கழக சம்மேளனம் யாழ். மாவட்ட தாச்சி சங்கத்தின் அனுசரணையுடன் நடாத்தும் இளைஞர் வெற்றிக்கிண்ண தாச்சி சுற்றுப் போட்டியின் காலிறுதிப் போட்டிகள் கடந்த திங்கட்கிழமை உடுவில் உதயசூரியன் விளையாட்டு மைதானத்தில் இரவு 7.30 மணியளவில் ஆரம்பமாகியது.

இந்நிகழ்வில்முதன்மை விருந்தினராக அகில இலங்கைசமாதான நீதவான் லயன் என்.சண் முகவேலும், கௌரவ விருந்தினராக சண்டிலிப்பாய் பிரதேச இளைஞர் பாராளுமன்றஉறுப்பினர்கஉஷநந்தனும், சிறப்பு விருந்தினர்களாக இளைஞர் சேவை உத்தியோகத்தர்கள் எஸ்.சபேசன் மற்றும் ஆர்.யுகராஜ் ஆகியோர் கலந்து கொண்டனர்.



இக்காலிறுதிப்போட்டியில் மயிலிட்டி வள்ளுவர் அணியும் அளவெட்டி பாரதி அணியும் மோதின.

ஆரம்பம் முதலே போட்டியைதன் கட்டுப்பாட்டில்வைத்திருந்த மயிலிட்டி வள்ளுவர் அணி முதல்அரைப்பாதியின் போது 8:1 என்னும் புள்ளிகள் அடிப்படையில் முன்னிலையிலிருந்தது.

இரண்டாவது அரைப்பகுதியில் மேலும் 6 புள்ளிகளை மயிலிட்டி வள்ளுவர் அணி பெற பதிலுக்கு ஒரு புள்ளியையே அளவெட்டி பாரதி அணி பெற்றது.

இதனால் போட்டி நிறைவில் 14:2 என்னும்புள்ளிகளின் அடிப்படையில் மயிலிட்டி வள்ளுவர் அணி வெற்றி பெற்று அரையிறுதிக்கு தகுதி பெற்றது. இச்சுற்றுப்போட்டி யில் மொத்தமாக 20 அணிகள் பங்குபற்றியமை குறிப்பிடத்தக்கது. (க-23)

## கூடைப்பந்தாட்ட போட்டி



யாழ்.மாவட்ட கூடைப்பந்தாட்ட சங்கத்தின் ஏற்பாட்டில் கூடைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டியொன்று இடம்பெறவுள்ளது.

இதற்கான ஏற்பாடுகள் இடம் பெற்று வருகின்றன.

இப் போட்டிகள் எதிர் வரும் 22ஆம் திகதி முதல் யாழ். மத்திய கல்லூரியில் இடம்பெறவுள்ளன.

இப் போட்டிகளில் 10 அணிகள் பங்கு கொள்வதுடன் அவை இரண்டு குழுக்களாக பிரிக்கப்பட்டுள்ளன.

இச் சுற்றுப் போட்டிகள் ஒவ்வொரு வருடமும் இடம்பெற்று வருகின்றன.

(க-23)

## பூப்பந்தாட்ட சுற்றுப் போட்டி

வடமாகாண அமைச்சுக்களுக்கு இடையிலான விளையாட்டு விழாவின் ஓர் அங்கமான ஆண், பெண் இருபாலாருக்குமான பூப்பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆண்களுக்கான இறுதியாட்டம் இன்று வியாழக்கிழமை மணிக்கூட்டு வீதியில் அமைந்துள்ள பூப்பந்தாட்ட திடலில் இடம்பெறவுள்ளது.




இறுதியாட்டத்தில் உள்ளூராட்சி அமைச்சு அணியை எதிர்த்து கல்வி அமைச்சு அணி மோதவுள்ளது. (க)

வலம்புரி SPORTS விளையாட்டுச் செய்திகள்

# இலங்கை கிரிக்கெட் ஏற்பாட்டில் யாழில் பயிற்சி முகாம்

(மானிப்பாய்)

யாழ்.மாவட்டத்தின் கிரிக்கெட் தரத்தினை மேம்படுத்தும் வகையில் யாழ்.மாவட்ட பாடசாலைகளின் கிரிக்கெட் பயிற்றுநர்களுக்கான பயிற்சி முகாம் ஒன்று வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்றது.



இலங்கை கிரிக்கெட்டினால் ஏற்பாடு செய்யப்பட்டு ஒவ்வொரு மாவட்டங்களிலும் இப்பயிற்சி இடம்பெற்று வருகின்றது. இதன் ஒரு அங்கமாகவே யாழ்.மாவட்டத்தில் இப் பயிற்சி இடம்பெறுகின்றது.

பயிற்றுநர்களின் தரத்தினை மேம்படுத்துவதுடன் நுட்பங்களை பயிற்றுவிப்பதன் மூலம் தரமான வீரர்களை உருவாக்குவதுடன் விளையாட்டின் தொழில்நுட்பங்களையும் பயிற்றுவிப்பதாகவுமே இப் பயிற்சி இடம்பெறுகின்றது.

இவர்களுக்கான பயிற்சிகளை யாழ்.மாவட்ட பயிற்றுநர் லக்ஷித ஹேரத் ஜெயக்குமார். கங்காதரன் ஆகியோர் வழங்கினர்.

ஒவ்வொரு மாதமும இப் பயிற்சி முகாம் ஒழுங்குபடுத்தப்படும் என இலங்கை கிரிக்கெட்டின் கனிஷ்ட தேர்வாளர் நிஷாந்தன் தெரிவித்துள்ளார்.

இப் பயிற்சி நெறியில் யாழ்.மாவட்ட பாடசாலைகளின் கிரிக்கெட் பயிற்றுநர்கள் 30 பேர் வரையில் கலந்து கொண்டனர். (க-23)

## தாச்சி சுற்றுப்போட்டி

வலி. தெற்கு பிரதேச இளைஞர் கழக சம்மேளனம் யாழ்.மாவட்ட தாச்சி சங்கத்தின் அனுசரணையுடன் நடாத்தும் இளைஞர் வெற்றிக்கிண்ண தாச்சி சுற்றுப் போட்டியின் காலிறுதிப் போட்டிகள் உடுவில் உதய சூரியன் விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.

இதன் காலிறுதிப் போட்டிகள் இன்று வியாழக்கிழமை இரவு 7.00 மணிக்கு நடைபெறவுள்ள நிலையில் இதில் மயிலிட்டி கலைமகள் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து மயிலிட்டி கண்ணகி விளையாட்டுக் கழகம் மோதவுள்ளது.

முன்னதாக இடம்பெற்ற காலிறுதிப் போட்டியில் மயிலிட்டி வள்ளுவர் அணி வெற்றி பெற்று அரையிறுதிக்கு தகுதி பெற்றது.

இச்சுற்றுப்போட்டியில்மொத்தமாக 20 அணிகள் பங்குபற்றியமை குறிப்பிடத்தக்கது.(அ-9-23)

# பிபிசியின் சிறந்த வீரராக அன்டி முர்ரே தெரிவு



பிபிசி நிறுவனத்தின் இந்த ஆண்டிற்கான சிறந்த விளையாட்டு வீரராக அன்டி முர்ரே தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

டென்னிஸ் விளையாட்டில் நடப்பு விம்பிள்டன் சம்பியனும், உலகின் 4ஆம் நிலை டென்னிஸ் வீரருமான அன்டி முர்ரே பிபிசி நிறுவனத்தின் இந்த ஆண்டின் சிறந்த விளையாட்டு வீரர் என்ற விருதை பெற்றுள்ளார்.

இந்த விருதின் 2ஆவது இடத்தை லே ஹாப்பென்னி என்பவரும், 3ஆவது இடத்தை ஏ.பி. மெக்காயும பெற்றுள்ளனர்.

இது குறித்து பிபிசி ரேடியோவிற்கு முர்ரே அளித்த பேட்டியில், இந்த விருது பட்டியலில் சில ஆச்சரியப்படும் பெயர்கள் இடம்பெற்றிருந்தன.

என்னை பற்றி அறிந்தவர்கள் நான் விளையாட்டை நேசிப்பவன் என்பதை அறிந்திருப்பார்கள். அதுவும் பல்வேறு விளையாட்டுகளையும் நேசிப்பவன் என்ற வகையில் இங்கு சில அழகான சிறப்பு பெயர்கள் உள்ளன.

எனவே, அதில் எனது பெயர் இடம்பெற்றிருப்பது மகிழ்ச்சி அளிக்கிறது.

எனது சிறு வயதில் இருந்து இந்த நிகழ்ச்சியை கண்டுகளித்து வந்துள்ளேன். அதனை தற்போது நான் நினைவுகூர்ந்து பார்க்கிறேன் என்று அவர் தெரிவித்துள்ளார்.

இந்த விருது பட்டியலில், இந்த ஆண்டின் சிறந்த அணியாக பிரிட்டிஷ் மற்றும் ஐரிஷ் லையன்ஸ் அணி தேர்வு பெற்றுள்ளது.

மேலும், வைர விருதுக்கு சர் அலெக்ஸ் பெர்குசனும், இளம் விளையாட்டு வீரர் விருதுக்கு 15 வயது நிரம்பிய ஆம்பர் ஹில்லும், ஹெலன் ரோலாசன் [illegible] ஆண்டின் சிறந்த பயிற்சியாளர் விருதுக்கு வாரன் காட்லேண்டும், [illegible] விருதை செபாஸ்டியன் வெட்டலும் பெற்றுள்ளனர். (க)

# காதலியை விட்டு விலகினார் வார்ன்



தனது காதலியை இரண்டாவது முறையாக பிரிந்துள்ளார் ஷேன் வார்ன்.

அவுஸ்திரேலிய அணியின் முன்னாள் சுழல் ஜாம்பவான் ஷேன் வார்னுக்கும், பிரித்தானியாவின், பிரபல மொடல் எலிசபெத் ஹர்லேவுக்கும் இடையே காதல் மலர்ந்தது.

இதனால் தனது மனைவியை விவாகரத்து செய்ததுடன், லண்டனில் குடியேற திட்டமிட்டார்.

இந்நிலையில் இருவருக்கும் பிரச்சினை ஏற்படவே கடந்த ஒக்டோபரில் காதலியை பிரிந்து விட்டதாக தகவல்கள் வெளியாகின.

இதற்கிடையே மீண்டும் இணைந்த ஜோடி தற்போது பிரிந்து விட்டார்களாம்.


இதுகுறித்து டுவிட்டரில், கடந்த காலத்தில் நடந்ததை மறந்து விட வேண்டும். தொடர்ந்து [illegible]தால் அது எதிர்காலத்தை வீணடித்து விடும்.

நேற்று என்ன நடந்தது என்று பார்ப்பதை விட, நாளை என்ன நடக்கும் என எதிர்பார்ப்பது தான் வாழ்க்கையில் சிறந்தது என்று தெரிவித்துள்ளார். (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஹோலி சதம்

# முதலாவது டெஸ்ட் போட்டி இந்தியா சிறந்த அடித்தளம்



தென்னாபிரிக்காவிற்கு எதிரான முதல் டெஸ்ட் போட்டியில் இந்திய அணியின் விராட் ஹோலி சதம் அடித்து அசத்தினார்.

தென்னாபிரிக்காவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இந்திய கிரிக்கெட் அணி ஒருநாள் தொடரை 0-2 என இழந்தது.

இதையடுத்து இந்தியா-தென்னாபிரிக்க அணிகளுக்கிடையிலான முதல் டெஸ்ட் கிரிக்கெட் போட்டி ஜோகனஸ்பர்க்கில் நேற்றுத் தொடங்கியது.


நாணயச்சுழற்சியில் வென்ற இந்திய அணி முதலில் துடுப்பாட்டத்தைத் தேர்வு செய்தது. துவக்க வீரர்கள் முரளி விஜய் (6), ஷிகர் தவான் (13) இருவரும் மிகவும் நிதானமாக விளையாடியபோதும் விரைவில் ஆட்டமிழந்து ரசிகர்களை ஏமாற்றினர்.

அதன்பின்னர் இணைந்த புஜாரா, ஹோலி இருவரும் நிதானமாக அதேசமயம் அடிக்க வேண்டிய பந்துகளை அடித்து ஆடினர். உணவு இடைவேளையின்போது இந்தியா 2 விக்கெட் இழப்பிற்கு 70 ஓட்டங்களை எடுத்திருந்தது.

அணியின் ஓட்ட எண்ணிக்கை 113ஐத் தொட்டபோது புஜாரா 25 ஓட்டங்களில் ரன் அவுட்டாகி அரங்கு திரும்பினார்.

ரோகித் சர்மா 14 ஓட்டங்களில் பிளாண்டரிடம் விக்கெட்டை இழந்தார். அவரைத் தொடர்ந்து விராட் ஹோலியுடன ரகானே இணைய ஆட்டம் விறுவிறுப்படைந்தது.

தொடர்ந்து சிறப்பாக ஆடிய விராட் ஹோலி டெஸ்ட் போட்டியில் 5-வது சதத்தை பதிவு செய்தார். 140 பந்துகளில் 16 பவுண்டரிகளுடன் அவர் இந்த இலக்கை எட்டினார். தென்னாபிரிக்காவுக்கு எதிராக அவர் அடித்த முதல் சதம் இதுவாகும். தொடர்ந்து ஆடிய ஹோலி 119 ஓட்டங்களில்




ஆட்டமிழந்தார். இதுவே டெஸ்ட் போட்டியில் அவர் அடித்த அதிகபட்ச ஓட்டங்களாகும்.

ஹோலியைத் தொடர்ந்து ரகானேயுடன் அணித் தலைவர் தோனி இணைந்து ஆடிக்கொண்டிருந்தபோது முதல் நாள் ஆட்டம் முடிவுக்கு வந்தது.

ஆட்ட நேர முடிவில் இந்தியா 5 விக்கெட் இழப்பிற்கு 255 ஓட்டங்கள் எடுத்திருந்தது.

ரகானே 43 ஓட்டங்களுடனும், தோனி 17 ஓட்டங்களுடனும் களத்தில் உள்ளனர்.

போட்டியின் இரண்டாம் நாள் இன்றாகும்.



# உலகத் தரமான பந்துவீச்சு அணியாக நியூசிலாந்து

## மக்கலம் பெருமிதம்



உலகத்தரம் வாய்ந்த பந்துவீச்சு வரிசையைக் கொண்டிருப்பது அதிர்ஷ்டகரமானது என நியூசிலாந்து அணியின் தலைவர் பிரெண்டன் மக்கலம் தெரிவித்துள்ளார்.

மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கெதிரான தொடரை வெல்லும் எதிர்பார்ப்புடன் காணப்படும் நிலையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அண்மைக்காலமாக டெஸ்ட் போட்டிகளில் தடுமாறிவரும் நியூசிலாந்து அணி டெஸ்ட் தரப்படுத்தலில் 8ஆவது இடத்தில் காணப்படுகிறது.

6ஆவது இடத்தில் தரப்படுத்தப்பட்டுள்ள மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கெதிராக டெஸ்ட் தொடரில் பங்குபற்றிவரும் நியூசிலாந்து அணி, முதலாவது போட்டியில் வெற்றி தோல்வியற்ற முடிவைப் பெற்றுக் கொண்ட போதிலும், இரண்டாவது போட்டியில் சிறப்பான பந்துவீச்சால் வெற்றிபெற்றது.

இந்நிலையில் கருத்துத் தெரிவித்த பிரெண்டன் மக்கலம், அண்மைய சில போட்டிகளை வைத்துப் பார்க்கும்போது நியூசிலாந்து அணி சிறப்பான திறமை வெளிப்பாடுகளை வெளிப்படுத்தி வருவதை அவதானிக்க முடிவதாகக் குறிப்பிட்டார்.

துடுப்பெடுத்தாடும் போது நியூசிலாந்து அணி அதிக ஓட்டங்களைப் பெறுவதாகக் குறிப்பிட்ட அவர், அது நியூசிலாந்தின் பந்துவீச்சாளர்களுக்கு வாய்ப்பாக அமைவதாகக் குறிப்பிட்டார். நியூசிலாந்தின் பந்துவீச்சாளர்கள் உலகத்தரம் வாய்ந்த பந்துவீச்சாளர்களாகக் காணப்படுவதாக அவர் மேலும் குறிப்பிட்டார்.

**நல்லூர் பிரதேச சபை**

**வழங்குநர்களை பதிவு செய்தல் - 2014**

சபையானது 2014-ம் ஆண்டுக்கான கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள பொருட்கள் சேவைகளை வழங்குவதற்கு தம்மை பதிவு செய்து கொள்ள விரும்பும் வழங்குநர்களிடமிருந்து விண்ணப்பங்களை ஏற்கவுள்ளது.

**பொருட்கள்**

1. காகிதாதிகள் எழுதுபொருட்கள்
2. அலுவலக உபகரணங்கள் (தளபாடங்கள்)
3. சித்த மருத்துவ மருந்துகள்
4. நூலகங்களுக்கான நூல்கள்
5. துணி வகைகள்
6. கட்டட பொருட்கள் (சீமெந்து, ஓடுகள், கம்பி வலைகள்)
7. கற்கள், மணல்
8. தீந்தைகள் வகைகள் **(Paints)** நிறந்தீட்டும் பொருட்கள்
9. நீர் வழங்கும் குழாய்கள் மற்றும் ஏனைய பொருட்கள்
10. வாகன உதிரிப்பாகங்கள், துணைப்பொருட்கள்
11. மின் வழங்கு பொருட்கள், மின் பாவனைப் பொருட்கள்.
12. எரிபொருட்கள், உராய்வு நீக்கிகள்
13. இரும்புப் பொருட்கள்
14. தீராந்திகள், பலகைகள், சட்டங்கள்
15. பனை மரங்கள், சலாகைகள்
16. வாகனங்களுக்கான ரயர் ரியூப் மற்றும் மின் கலங்கள்
17. கணனி, பிரதியாக்கல் இயந்திரம் மற்றும் இவற்றுக்கான உதிரிப்பாகங்கள்
18. சுத்திகரிப்புப் பொருட்கள், கிருமி நாசினிகள்
19. பாதணிகள், தோற்பொருட்கள்
20. அலங்காரப் பொருட்கள்
21. இலத்திரனியல் பொருட்கள்

**சேவைகள்**

1. அச்சிடுதல்
2. தட்டச்சு இயந்திரம் திருத்தல்
3. மோட்டார் வாகனங்கள், உழவு இயந்திரம் திருத்தல்
4. வாகனங்களுக்கு ரியூப் ஒட்டுதல்
5. ஒட்டு வேலைகள், உலோக வேலைகள்
6. கனரக வாகனங்களின் சேவை, வாடகைக்கு விடல்
7. மின்சாதனங்கள் திருத்தம், மீள மின் வலுவூட்டல்
8. இலத்திரனியல் சாதனங்கள் திருத்தம்
9. வாகனங்கள் சுத்திகரிப்பு
10. கோலவுடை தைத்தல்
11. கணனி பிரதியாக்கல் இயந்திரம் திருத்தம், சுத்திகரிப்பு
12. இறப்பர் முத்திரை தயாரித்தல்
13. கழிவகற்றல் சேவை. **(Gully emptier service)**

பதிவானது ஒவ்வொரு வழங்கல் சேவைக்கும் தனித்தனியாக விண்ணப்பங்கள் அனுப்பப்படல் வேண்டும். படிவங்களை சபையின் தலைமை அலுவலகத்தின் நிதிக்கிளையில் பெற்றுக் கொள்ளலாம். ஒவ்வொரு விண்ணபத்திற்கும் பதிவுக் கட்டணமாக ரூபா 1000.00 (வரிகள் நீங்கலாக) செலுத்தப்படல் வேண்டும். விண்ணப்பப் படிவங்கள் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் “வழங்கல் சேவைக்கான விண்ணப்பம் - 2014” எனக் குறிப்பிட்டு பதிவுத் தபால் மூலம் “தலைவர், தலைமை அலுவலகம், நல்லூர் பிரதேச சபை, இல 14/5 கருவப்புலம் வீதி, கொக்குவில்” எனும் முகவரிக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும். விண்ணப்பப் படிவங்கள் 03.01.2014-ம் திகதிவரை ஏற்றுக் கொள்ளப்படும். மேலதிக விபரங்களுக்கு 021 222 2700 அல்லது 021 320 2207 எனும் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளவும்.

**ப.வசந்தகுமார்**
**தலைவர்,**
**நல்லூர் பிரதேச சபை,**
**கொக்குவில்.**

(சி-5828)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழ் தேசிய...

தொடர்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பிரசாரம் செய்து வருகிறது.

இரண்டாம் உலகப் போரின் பின்னர் ஹிட்லரின் நாஸிக் கட்சி தடை செய்யப்பட்டது. கம்போடியாவில் ஏற்பட்ட அரசியல் குழப்பங்களால் பொல் பொட் கம்யூனிட்ஸ் கட்சி தடை செய்யப்பட்டது.

அதேபோல், இலங்கையில் பிரிவினைவாதத்தையும், பயங்கரவாதத்தையும் பரப்பி வரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பையும் அரசாங்கம் தடை செய்ய வேண்டும் என அவர் வலியுறுத்தினார். (செ-11)

## மகிந்த - சர்மா...

வின ஆளும் கட்சியான கன்சர் வேட்டிவ் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் உட்பட பிரித்தானிய நாடாளுமன்ற உறுப்பினர்களை அரசாங்கம் பணத்தை செலவு செய்து அழைத்து வந்துள்ளது.

அரசாங்கத்தின் சர்வ தேச நகர்வுகள் தோல்வியடைந்ததை அடுத்து இந்த நாடாளுமன்ற உறுப்பினர்களின் உதவியை அரசாங்கம் நாடியுள்ளது.

அத்தோடு அவுஸ்திரேலிய பிரதமர் டோனி அப்போட் மற்றும் பொது நலவாய நாடுகள் அமைபபின் பொதுச்செயலாளர் கமலேஷ் சர்மா ஆகியோருடன் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கும் இரகசிய தொடர்பு இருப்பது எனக்குத் தெரியும் என தெரிவித்த மங்கள சமரவீர சில நாடாளுமன்ற உறுப்பினர்களின் பெயர்களையும் வெளியிட்டார்.

மங்கள சமரவீரவின் இந்த குற்றச்சாட்டுக்களை தொடர்ந்து சபையில் அவருக்கும் ஆளும் கட்சியினருக்கும் இடையில் கடும் வாக்குவாதம் ஏற்பட்டது. (செ-11)


**கணினி திருத்தம்**

உங்கள் கணினிகள் பழுதடைந்துவிட்டனவா? உடன் உங்களது வீடுகளுக்கே வந்து திருத்தி தருகின்றோம்.

அழையுங்கள். 0779086737 Computer Repair

GUNAA BEST PC 52,Hospital Road,Jaffna.



**வேலைவாய்ப்பு**

அரச துறை, தனியார் துறை மற்றும் NGOகளில் தற்போது கோரப்பட்டுள்ள வேலைவாய்ப்புகள் பற்றிய வழிகாட்டல், ஆலோசனை மற்றும் உதவிகளுக்கு..

கோலாசிற்றி தொழில் வங்கி 021 320 2787

224/1. நாவலர் வீதி. யாழ்ப்பாணம். (இலுப்பையடி சந்திக்கு அருகில்)

இனி நாம் இருக்கிறோம் நேரில் வரவும்


## தமிழீழத்திற்கு...

அத்தே ஞானசார தேரர் கருத்து தெரிவிக்கையில்,

முஸ்லிம் தீவிரவாத கொள்கைகளை பௌத்த நாட்டில் பரப்பி பௌத்த சின்னத்தை அழித்து முஸ்லிம் நாடாக இலங்கையை மாற்றவே பலர் செயற்பட்டு வருகின்றனர்.

தேசிய பாதுகாபபிற்காகவே அரசாங்கம் பர்தா, தொப்பி அணியக் கூடாதென வலியுறுத்துகின்றது. இதனை ஏற்றுத்தான் ஆக வேண்டும்.

சில முஸ்லிம் தீவிரவாதிகளின் பேச்சை கேட்டு ஒட்டுமொத்த முஸ்லிம்களும் அரசாங்கத்தினை பகைத்துக் கொள்ள கூடாது.

அதேபோல் சர்வதேச பிரிவினைவாதிகளின் பேச்சைக் கேட்டு இலங்கையில் பிரிவினை வாதத்தினை உருவாக்கவோ அல்லது தனித் தமிழீழத்தினை உருவாக்கவோ முடியாது.

அவ்வாறானதொரு எண்ணம் எவருக்காவது இருக்குமாயின் அவர்கள் நாட்டை விட்டு வெளியேற வேண்டுமெனவும் அவர் மேலும் தெரிவித்தார். (செ-11)

## இராவணன் பௌத்தமா?...

கோள் காட்டி பேசினார்.

இதற்கு கடுமையான எதிர்ப்புகளைத தெரிவித்த மேர்வின் சில்வா, இலங்கை ஒரு பௌத்த நாடு சிங்கள பௌத்த நாடு எனக் குறுக்கிட்டார்.

எனினும் யோகேஸ்வரன் எம்.பி. இலங்கை ஒரு இந்து நாடு என்பதை உறுதபடத் தெரிவித்தார்.

எனினும்இதனை மறுத்த அமைச்சர் மேர்வின் சில்வா இலங்கை சிங்கள பௌத்த நாடு என்றே உறுதியாகத் தெரிவித்ததோடு இந்தியாவிலிருந்தே இலங்கைக்கு பெண்கள் கொண்டு வந்ததாக கூறிய மேர்வின் சில்வா, எனது மகன் ஈரானியப்பெண்ஒருவரை விரைவில் திருமணம் செய்யவுள்ளார். அதற்காக அவர் ஈரானியர் ஆகிவிட முடியாது.

நானும் ஒரு முஸ்லிம் பெண்ணைக் காதலித்தேன். அவரும் என்னை மிகவும் காதலித்தார். ஆனால், அவரின் பெற்றோர் விரும்பாததால் அது நிறைவேறவில்லை. முஸ்லிம் பெண்ணைக் காதலித்த தால் நான் முஸ்லிம் ஆகிவிட முடியுமா?

அதே போன்று தான் மன்னர்களின் திருமண உறவுகளை வைத்துக் கொண்டு இந்த நாட்டை இந்து நாடாகக்கூற முடியாது என்றார்.

இவ்வாறு இருவரும்ஒருவருக்கொருவர்விட்டுக்கொடுக்காது வாய்த்தர்க்கம் செய்துள்ளனர். (செ-11)

## காணி...

கட்டளைகளை பிறப்பிக்க முடியாது. தேவையான காணிகளை எடுப்பதற்கும் முகாம் அமைப்பதற்கும் பொதுக் கட்டடங்களை பயன்படுத்தவும்இராணுவத்திற்கு உரிமை உண்டு என்றும் ஜெனரல் உதய பெரேரா கருத்து வெளியிட்டுள்ளார்.

மேலும் ஏனைய மாகாண சபைகளை விட வட மாகாண சபை சர்வாதிகரமாக செயற்பட முற்படுவதாகவும்அவர்குற்றம் சுமததியுள்ளார். (செ-11)


**Shakthy microtec** Computer wholesaler

Hotline: 0779120842

Rs. 12,000/- P4 2.80Ghz Processor, 1GB Ram, 40GB Hard disk, DVD Rom, 17" Monitor, Keyboard and Mouse

Rs. 17,000/- C2D 1.80Ghz Processor, 1GB Ram, 80GB Hard disk, DVD Rom, 17" Monitor, Keyboard and Mouse

Rs. 23,000/- C2D 1.86Ghz Processor, 2GB Ram, 320GB Hard disk, DVD Rom, 17" Monitor, Keyboard and Mouse

நத்தார் பண்டிகையை முன்னிட்டு Branded கணனிகள் மலிவு விலையில்... 31.12.2013 வரை

Rs.500/- Rs.350/- Rs.800/- Rs.16,500/- 3 language kayboard Rs.600/- Rs.500/- Rs.850/-

No.170, Palaly Road, Vigneswara Building, Kondavil East, Jaffna.


## வடக்கு ஆளுநரை...

வேண்டும் என ஜே.வி.பி கூறுகிறது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு போன்ற ஈழவாதிகளும்ஜேவிபி போன்ற ஈழத்திற்கான தூண்டுதல்களை மேற்கொள்வோரும் இலங்கை அரசாங்கத்தை படிப் படியாக வலு விழக்க செய்ய முயற்சித்து வருகின்றனர்.

இலங்கை என்ற நாட்டை பல் இல்லாத வாயாக மாற்றும் தேவை இவர்களுக்கு இருக்கின்றது. பற்களை ஒன்றன் பின் ஒன்றாக பிடுங்கிய பின்னர் வாயின் பலம் குறைந்து போகும். இறுதியில் பொக்கை வாயே எஞ்சும்.

ஈழவாதிகள் மற்றும்ஈழத்துக்கு துணை போகும் நபர்களின் அபாய மான மற்றும ஆபத்தான நடவடிக்கையாகவேஆளுநரை நீக்க வேண்டும்என்ற கோரிக்கை யாகும். இதனை நாம் அடையாளம் கண்டுகொள்ள வேண்டும்.

மருத்துவம், பொறியியல், சட்டம போன்ற துறைகளை சார்ந்த நபர்களை கொண்ட உலகின் மிக சிறந்த இராணுவம் இலங்கை இராணுவம்.

ஒரு பதவிக்கு அடிப்படை தகுதி இல்லை முப்படையில் பணியாற்றினார் என்பதற்காக ஒருவர் அந்த பதவிக்கு தகுதியற்றவர் எனக் கூறுவது தவறு.

இராணுவ அதிகாரிகள் அரச நிர்வாக பதவிகளுக்கு நியமிக்கப்படக்கூடாது என்று கூறும் ஜே.வி.பி. 2010ம் ஆண்டு முன்னாள் இராணுவத்தளபதி சரத்பொன்சேகாவை நாட்டின் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக தெரிவு செயய கடும் பிரயத்தனங்களை மேற்கொண்டது.

தற்போது முன்னாள் இராணுவ அதிகாரி ஆளுநராக நியமிக்கப்பட்டது தவறு எனக்கூறிஊடக சந்திப்புகளை நடத்துகிறது.

அதேவேளை2014 மார்ச்மாதம்ஜெனிவா மனித உரிமை ஆணைக்குழுவின் கூட்டத் தொடரில் இலங்கையை கடும் அசௌக ரியத்திற்கு உட்படுத்த உள்நாட்டு, வெளிநாட்டு ஈழவாதிகள் தயாராகி வருகின்றனர்.

இவர்களுக்கு பதிலாக நாட்டில் உள்ள சகல தேசப்பற்றாளர்கள் அணித்திரண்டு வரவேண்டும் என்றார் வீரகுமார. (செ-11)

## தொண்...

தருகிறது.

இங்குவரும்உயர் அதிகாரிகள அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, வடக்கின்ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி, யாழ்.போதனா வைததியசாலைப் பணிப்பாளர் டாக்டர் திருமதி பவானி பசுபதிராஜா, அபிவிருத்திக் குழுத் தலைவர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம் பிள்ளை மற்றும் தொண்டர் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடவுள்ளனர்.

மேற்படி உயர் மட்டக் குழுவின் வருகையால் தொண்டர்களுக்கு நிரந்தர நியமனம் கிடைக்கும் என நம்பப்படுகின்றது.

இதேவேளை, தமக்கு நிரந்தர நியமனம் கிடைக்காவிட்டால்தொடர் உண்ணாவிரதப் போராட்டத்தில் குதிக்கவுள்ளதாகவும தொண்டர்கள் அறிவித்துள்ளனர். (ரு)


**33ஆம் நாள் நினைவஞ்சலி**

திருமதி

**விசுவநாதர் சிவகாமிப்பிள்ளை**

(வட்டுக்கோட்டை மாமி)

மலர்வு : 1926.03.17 மறைவு : 2013.11.17



என் அன்பு அம்மாவே!
நீங்கள் தனி ஒருவராக நின்று என்னை
வளர்த்து ஆளாக்குனீர்களே!
நீங்கள் வாழும் போதே எனக்கு
தெய்வமாக இருந்தீர்களே!
நான் கலங்கும் போது எல்லாம்
'அம்மா இருக்கிறேன் கவலைப்படாதே'
என தேறுதல் அளித்தீர்களே!
எனக்கு எப்போதும் எல்லாமாக
இருந்து வழிநடத்தினீர்களே!
நீங்கள் இல்லாமல் துவண்டு
துடிக்குறேனம்மா!

என் அம்மாவுக்கு,
திருக் கார்த்திகை, பௌர்ணமியில்
மருவூர் தாய் தன் திருவடியில்
மோட்சம் அளித்துவிட்டார்.

உங்கள் அன்பு மகள்
ஜெ.நித்தியா

(C-5829)



**வேலைவாய்ப்பு**

புதியதோர் எதிர்காலத்தை நோக்கி ...

யாழ்ப்பாணம், வவுனியா, மன்னார், கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டத்தினருக்கான பயிற்சியுடன் கூடிய பதவி வெற்றிடங்கள் 40 பேருக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

பயிற்சியின்போது : 15, 000/- பின் 50, 000/-

இன்று அழையுங்கள் நாளை இணையுங்கள்

077 798 1471, 077 230 2795, 077 556 6224

தங்குமிடம் & உணவு வசதிகள் இலவசம் (4897)



**வெளிநாடுகளுக்கான தபால் பொதிகள் சேவை**

அனைத்து நாடுகளிற்கும் பொருட்கள் ஆவணங்கள், கடல் உணவு வகைகள் அன்பளிப்புப் பொருட்கள் போன்றவற்றை மிகவிரைவாகவும் குறுகிய செலவிலும் அனுப்புவதற்கு நீங்கள் நாட வேண்டிய இடம்

T.P: 077 817 4495, 024 324 4261 (C-5830)

சஜீஸ் வெளிநாட்டு பார்சல் சேவை

621, பருத்தித்துறை வீதி, (முத்திரைச் சந்தை முன்பாக) நல்லூர், யாழ்ப்பாணம்.



யாழ்-கொழும்பு முன்னணி நிறுவனங்கள் மற்றும் வர்த்தக மையங்களில்

**உடனடி வேலைவாய்ப்புக்கள்**

சுயவிபரக்கோவையுடன் டிசம்பர் 21க்கு முன் நேரில் வரவும்

**சிகரம் தொழில் வங்கி**

இல.153, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்

தொ.பே.: 077 36 16 798, 021 222 00 11 (C-5831)



பல்கலைக்கழக அனுமதி & தொழில் உத்தரவாதமான

**தொடர்பாடலும் ஊடகக் கற்கையும்**

க.பொ.த. (உ/த) 2014 & 15
க.பொ.த. (சா/த) 2014 & 15

பதிவுகளுக்கு: 077 36 16 798

**சிகரம் ஊடக இல்லம்**

153, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்

Tel: 077 3616 798, 021 222 0011 (C-5831)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 19.12.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org